உ

கடவுள் துணை.

கவிச்சக்கரவர்த்தியாகிய

ஸ்ரீமத்

# கம்பநாட்டாழ்வார்

இயற்றியருளிய,

# சடகோபரந்தாதி

மூலமும்,

பின்னத்தூர்,

## அ. நாராயணசாமிஐயன்

எழுதிய,

உரையும்.

இவை,
தஞ்சாவூர்:
ஜி. எஸ். மணியா அண்டு கம்பேனியாரவர்களது
கல்யாணசுந்தரம் முத்திராசாலையில்
பதிப்பிக்கப்பெற்றன.

1906.

கடவுள் துணை.

ஆழ்வார் கலித்துறையந்தாதி என்று வழங்குகிற

# சடகோபரந்தாதி.

ஆழ்வார் - கடவுளின் நற்குணக்கடலில் முழுகி அழுங்கியிருப்பவரது, கலித்துறை - கலித்துறையென்னும் ஒருவகைப்பாடலினாற் செய்யப்பட்ட, அந்தாதி என்று - அந்தத்தை ஆதியாகவுடையநூலென்று, வழங்குகிற - சொல்லுகின்ற, சடம் - சடம் என்னுவாயுவை, கோபர் - கோபித்த இறைவரது, அந்தாதி ———; என்பதாம்.

கடவுளிடத்துச்சரணம் புகுந்தொண்டர்களிற் சிறந்தோராதலால் ஆழ்வாரென்று சிறப்பித்துக்கூறினர்; இது வினையாலணையும் பெயர். கலித்துறை - கட்டளைக்கலித்துறை; இது பாவினங்களுள் ஒன்று. இதற்கிலக்கணம் "நெடிலடி நான்கவை நேர்ந்துநின் றேதி னொற்றெழுத்தாய், முடிவன வாம்பதி னேழு நிரைவரின் முன்மொழிந்த, படிவழுவாது நடைபெறு மோசைவண் டேந்திநின்ற, கடிகமழ் கோதைக் கயனெடுங் கண்ணி கலித்துறையே." என்றதனாலறிக. அந்தம் - முதற்பாட்டின் இறுதியை, ஆதி - வரும்பாட்டின் முதலாகவுடையதொரு நூலென்று பொருள்பட்டு அன்மொழித்தொகையாயிற்று. அந்தாதியினிலக்கணம் "பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலையாம், ஒத்தாய வெண்பா வொருநூறு - ஒத்தசீர், அந்தாதி யாகுங் கலித்துறையு மவ்வகையே, வந்தா லதன்பே ரவை." என்றதனாலறிக. சடம் - கருப்பத்திலிருந்து பிறக்கும்பொழுது நல்ஞானத்தைக்கெடுத்து அஞ்ஞானத்தைக் கொடுக்கிற ஒருவிதவாயு, அதனைக்கோபித்து விலக்கியவராதலின் ஆழ்வார் சடகோபரெனப்பட்டார். சடகோபரந்தாதி - சடகோபரைப் பற்றிய அந்தாதியெனவும் சடகோபரது அந்தாதியெனவும் விரிக்கலாம். இவற்றுள், முன்னது இரண்டாம் வேற்றுமை உருபும்பயனுமுடன்றொக்க தொகையும் பின்னது ஆறாம்வேற்றுமைத் தொகையுமாகக்கொள்ளலாம். அந்தாதி - தீர்க்கசந்தி, இது சொற்றொடர்நிலை.

இவ்வாழ்வார் பாண்டிநாட்டில் தாமிரபர்ணி யாற்றருகிலுள்ள திருக்குருகூரில் வேளாளர் வமிசத்திற்பிறந்து பிறந்ததுமுதல் உணவுமுதலியன அருந்தாமலும் அழாமலும் ஒருபுளியமரத்தின் கீழிற்சென்று அங்கேயே தங்கியிருந்து தம்மை அடைந்து தொண்டுசெய்துவந்த மதுரகவியாழ்வாருக்குக் கருணைசெய்து, நான்குவேதங்களின் சுவைகளைத் திரட்டித் தமிழில் திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரியதிருவந்தாதி என்னும் நான்கு பிரபந்தங்களை அருளிச்செய்தனரென்பது இவரது கதைச்சுருக்கமாம்.

## சிறப்புப்பாயிரம்.

தேவிற் சிறந்த திருமாற்குத் தக்கதெய் வக்கவிஞன்
பாவிற் சிறந்த திருவாய் மொழிபகர் பண்டிதனே
நாவிற் சிறந்தவம் மாறற்குத் தக்கநன் னூவலவன்
பூவிற் சிறந்தவாழ் வான்கம்ப நாட்டுப் புலமையனே.

உரை:—தேவில் - தெய்வங்களில், சிறந்த——, திருமாற்கு - திருமகள்கணவனாகிய மாயோனுக்கு, தக்க - தகுந்த, தெய்வக்கவிஞன்-

தெய்வத்தன்மையுள்ள கவிபாடவல்லவர், பாவில் சிறந்த - பாடல்களிற் சிறந்த, திருவாய்மொழி - திருவாய்மொழிப் பிரபந்தத்தை, பகர் - பாடியருளிய, பண்டிதனே - நல்ல பாண்டித்தியமுடைய நம்மாழ்வாரேயாம்; (அப்படிப்போல), நாவில்சிறந்த - அப்படிப்பாடுதற்குரிய நாக்கினாற்சிறந்த, அ மாறற்கு - அந்தநம்மாழ்வாருக்கு, தக்க - தகுந்த, நல் நாவலவன் - நல்லகவிஞானவர், பூவில் - உலகத்தில், சிறந்த—, ஆழ்வான் - பக்திவெள்ளத்தில் மூழ்குபவராகிய, கம்ப நாட்டு புலமையன் - கம்பநாடரென்னும் வித்துவானேயாம்; (எ-று.)

எல்லாத்தேவரிலும் சிறந்த மாயோனுடைய கீர்த்திகளைப் பாடுதலில் வல்லவர் நம்மாழ்வாரேயாம்; அப்படிப்போல நம்மாழ்வாரைப் பாடுதலிற்சிறந்தவர் கம்பநாட்டாழ்வாரேயாமென்பதாம். மற்றைத் தேவர்களைப்போலாகாமல் உயிர்களிடத்தில் அந்தரியாமித்துவமுடைமையால் தேவிற்சிறந்ததிருமாலென்றார். சிவபிரானிடத்தில் உபதேசம்பெற்று அகத்தியரெழுதிய இலக்கணத்துக்குப் பொருந்திய பாடல்களைப் பாடப்பெற்றதனால் தெய்வக்கவியென்றார். ஏனையநூல்கள் போலாகாது இருமைப்பயனுந்தருதலால் பாவிற்சிறந்த திருவாய்மொழியென்றார். பண்டிதன் - ஞானபண்டிதருமாம். மாறன் - ஆழ்வார் பிறந்தபொழுது அழுதல், விம்முதல், பால்குடித்தல் முதலிய ஒருதொழிலுஞ்செய்யாமல் உலகியல்பிற்கு மாறாக இருந்ததினால் மாறனென்று பெயர்பெற்றார். பூவிற்சிறந்த கம்பநாட்டு ஆழ்வானெனக்கூட்டலும் அமையும். கம்பநாடு - முதலில் இது வெண்ணெயூர் நாடாகவிருந்து பின்புகம்பர்காலத்தில் அவர்பெயரால் மாற்றப்பட்டமையால் கம்பநாடென்றார். பல வேறுவகைப்பட்ட நூலுணர்ச்சிகளெல்லாம் ஒருசேரக்கொண்டபேரறிவுடைமையால் புலமையனென்றார். கவிஞன், ஞ் - பெயரிடைநிலை. திருவாய்மொழி - சிறந்த வாயிற்சொல்லாகிய நூல் என்று பொருள்பட்டு அடையடுத்தகருவியாகுபெயராயிற்று. ஏகாரமிரண்டும் தேற்றம். (க)

## இது பிற்காலத்திலொருவர் கம்பரைத்துதித்தல்.

ஆரணத் தின்சிர மீதுறை சோதியை யந்தமிழாற்
பாரணஞ் செய்த வனைக்குரு கூரனைப் பற்பலவா
நாரண னாமென வேத்தித் தொழக்கவி நல்குகொடைக்
காரண னைக்கம் பனைநினை வாமுட் களிப்புறவே.

உரை:—ஆரணத்தின் - வேதத்தின், சிரம் மீது - முடிவிடத்திலே, உறை - பொருந்தியிருக்கின்ற, சோதியை - சோதிவடிவனானமாயோனை, அம் - அழகிய, தமிழால் - தமிழ்ப்பாடல்களால், பாரணம் செய்தவனை - பாடிமகிழ்ந்தவராகிய, குருகூரனை - திருக்குருகூரிலவதரித்த சடகோபரை, பல் பல ஆ - பலபலவகையாக, நாரணன் ஆம் என - இவர் நாராயணனது அம்சமானவரென்று, ஏத்தி - துதித்து, தொழ - வணங்கும்படியாக, கவி - பாடல்களை, கொடை - கொடுத்தற்குரிய பொருளாக, நல்கு - கொடுக்கின்ற, காரணனை - தலைவராகிய, கம்பனை - கம்பரென்னும் புலவரை, (யாம்,) உள் - எமது மனத்தில், களிப்பு உற - மகிழ்ச்சிமிகும்படியாக, நினைவாம் - கருதுவோம்; (எ - று.)

வேதாந்தத்தின்மேல் விளங்குஞ் சோதியாகிய மாயோனைத்துதித்த நம்மாழ்வாரைத் துதித்த கம்பரையாம் உள்ளங்களிக்கும்படி தியானிப்

போமென்பதாம். உபநிஷத்துக்களிலும் உத்தரமீமாஞ்சையாகிய பிரம சூத்திரத்திலும் மாயோனைத்தலைவனாகக்கூறுதலால் ஆரணத்தின் சிரமீதுறை என்றார். எல்லாரிலும் மேம்பட்ட சரீரகாந்தியுடைமையால் சோதியென்றார். செய்யுளிடத்தன்றி உலகநடையில் மாந்தர்க்குப் பயன்படாமலும் தமக்கென்றோர்.டமில்லாமலும் இலக்கணங்களமையப்பெறாமலுமுள்ள அன்னியமொழிகளைப்போலாகாமல் அவையெல்லாமுடைமையால் அந்தமிழென்றார். திருமாலால் அளிக்கப்படுவன யாவும் தாமே கொடுக்கத்தக்கவராதல்பற்றிப் பலமுகத்தாலும் இவர் நாராயணனேயாவாரென்பதை கம்பர் குறிப்பித்தமை இங்கு எடுத்துக்காட்டினது காண்க. ஆரணம் - வேதத்துக்குச் சினையாகுபெயர். சோதி - உவமையாகுபெயர். யாம் - தோன்றாஎழுவாய். நினைவாம்-பயனிலை. (௨)

## இது பிற்காலத்தொருவர் நம்மாழ்வாரைத் துதித்தல்.

நஞ்சட கோபனைப் பாடினை யோவென்று நம்பெருமாள்
விஞ்சிய வாதரத் தாற்கேட்பக் கம்பன் விரைந்துரைத்த
செஞ்சொலந் தாதி கலித்துறை நூறுந் தெரியும்வண்ண
நெஞ்சடி யேற்கருள் வேதந் தமிழ்செய்த நின்மலனே.

உரை:—வேதம் - வேதங்களின் கருத்துக்களை, (எடுத்து), தமிழ் - தமிழ்ப்பாடல்களாக, செய்த——, நின்மலனே - குற்றமற்றவனே!, நம்பெருமாள் - எங்கட்கிறைவனாகிய மாயோன், விஞ்சிய - மிகுந்த, ஆதரத்தால் - அன்பினால் (கம்பரைநோக்கி), 'நம் சடகோபனை - நமது சடகோபமுனிவரை, பாடினையோ - நீ பாடித்துதித்தனையோ ?' என்று கேட்ப - என்றுகேட்டவுடன், கம்பன்———, விரைந்து - விரைவாக, உரைத்த - பாடிய, செஞ்சொல் - அழகியதமிழ்ச்சொற்களாலமைந்த, அந்தாதி - அந்தாதியென்னும் நூலிலமைந்துகிடந்த, நூறுகலித்துறையும் - நூறுகலித்துறைப்பாடல்களும், தெரியும் வண்ணம் - நான் அறிந்துகொள்ளும்படியாக, அடியேற்கு - உம்முடைய திருவடிகளில் பற்றுள்ள எனக்கு, நெஞ்சு-மனத்தினை, அருள்-கொடுத்தருளுவீர்; (எ-று.)

வேதத்தைத் தமிழிற்செய்தருளிய நம்மாழ்வாரே ! பெருமாள் சடகோபரைப்பாடினையோ வென்றுகேட்டலும் கம்பர்பாடிய அந்தாதியைத் தெரிந்துகொள்ளும்வண்ணம் அடியேனுக்கு மனத்தைக் கொடுத்தருளுவீரென்பதாம். வேதம் நான்கு;—இருக்கு, எசுர், சாமம், அதர்வணம். இந்நான்கின் கருத்தினை அடக்கித்தமிழில் நம்மாழ்வார் செய்த பிரபந்தங்கள் முற்கூறப்பட்டன. நஞ் சடகோபனென்றது மாயோன் தான் ஆழ்வார்மீது வைத்துள்ள அன்பின் மிகுதியால் தன்னொடு சேர்த்துக்கூறிய ஆர்வமொழி; இதுபற்றியே யாவரும் நம்மாழ்வாரெனக் கொண்டாடுவது மென்றறிக. அரங்கநாதனுக்கு எல்லா வடியாரிடத்தும் அன்பொத்திருக்கச் சடகோபரை நம்சடகோபனை யென்று விசேடித்ததும் தம்மைக்கம்பர் பாடியிருக்கவும் அவற்றால் திருத்தியுறாமல் சடகோபனைப் பாடினையோ வென்றதும்பற்றி விஞ்சிய ஆதரத்தாலென்றார். பெருமாள் - உயர்திணையிருபாற் பொதுப்பெயர். கம்பன் - சாதிப்பெயர். உரைத்த அந்தாதியெனக்கூட்டுக. (௩)

## இதுவுமது.

நாத னரங்க னயந்துரை யென்னநற் கம்பனுன்றன்
பாதம் பரவிய பைந்தமிழ் நூறும் பரிவுடனே
யோதும் படியெனக் குள்ளந் தனையரு ளோதரிய
வேதந் தமிழ்செய்த மெய்ப்பொரு ளேயிதென் விண்ணப்பமே.

**உரை:**—ஓதஅரிய- சொல்லுதற்கரிய, (அளவினையுடைய), வேதம்- வேதங்களை, தமிழ் செய்த-தமிழ்ப்பாடல்களாகப் பாடியருளிய, மெய்ப்பொருளே - தத்துவஞானமூர்த்தியே! நாதன் - தலைவனாகிய, அரங்கன் - திருவரங்கத்தெம்பெருமான், (கம்பனைநோக்கி), நயந்து - விரும்பி, உரையென்ன - 'சடகோபனைப்பாடு' என்றுசொல்ல, நல் கம்பன் - சிறந்த கம்பரென்னும்புலவர், உன் தன் - உம்முடைய, பாதம் - திருவடிகளை, பரவிய - துதித்துப்பாடிய, பைந்தமிழ் - பசுந்தமிழ்ப்பாடல்கள், நூறும்———, பரிவுடன் - (யான்) அன்போடு, ஓதும்படி - படித்து உய்யும் வண்ணம், எனக்கு———, உள்ளம் தனை - மனத்தினை, அருள் - திருத்தியருளவேண்டும், என் - எனது, விண்ணப்பம் - வேண்டுகோளானது, இது - ஈதொன்றேயாம்; (எ - று.)

வேதத்தினைத் தமிழிற் செய்த நம்மாழ்வாரே! அரங்கநாதன் கட்டளையால் கம்பர் உம்மைத்துதித்த இவ்வந்தாதியைப் படிக்கும்படி எனக்குக் கருணைசெய்வீராக வென்பதாம். அனந்தாவைவேதா: என்றபடி வேதங்கள் அளவில்லாத பகுதியன ஆதலால் ஓதரிய என்றார். கேட்போருக்கு இன்பத்தையே தருதலால் பாட்டென்று கூறாமல் இன்பமென்ற பொருள்படுகிற தமிழென்றார். எல்லாவூழிகளிலும் அழியாதிருத்தலால் நாதனென்றார். அப்படியிருப்பதை அறியா மனிதரும் அறிந்து தரிசித்து நன்மையடையவேண்டி ஸ்ரீரங்கத்தில் கோயில்கொண்டெழுந்தருளினமையால் அரங்கனென்றார். எத்தனையோ புலவர் தோன்றியிருந்தும் இராமாயணத்தைத் தமிழில்மொழிபெயர்க்கும் புண்ணியத்தை இவ்வொருவரே செய்து வந்தமையால் நற்கம்பனென்றார். இளமையர்மழலை செவிக்கின்பஞ்செய்வதுபோல இது இன்பந்தருதலின் பைந்தமிழென்றார்; பசுமை - இளமை: "பாராட்ட நானினியாளல்லவே பசுமென்குழவி" என்றார் பிறரும். கம்பன் - அந்தச் சாதியர்க்குரியபட்டப்பெயர்; இயற்பெயர் புலப்படவில்லை; பெரியோர்களின் இயற்பெயர்களைக்கூற அஞ்சி மரியாதைதோன்றப்பட்டப் பெயராலழைக்கப்படுவது தொன்றுதொட்டு வந்தவழக்கம்; 'ஐயரவர்கள், பிள்ளையவர்கள், செட்டியாரவர்கள்' என்கின்ற இம்மொழிகள் தமிழிற்சிறந்த ஒவ்வொருவரைக்குறித்தல் போல அக்காலத்திலிவரைக் கம்பரெனக் கூறுதலுண்டென்றறிந்துகொள்க. உரை - ஏவலொருமை வினைமுற்று; ஆய்விகுதிபுணர்ந்துகெட்டது. உன்தன், தன்-சாரியை. ஓதும்படி - படி யீற்றுவினையெச்சம். ஓத - அகரந்தொக்கது.

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந் தோர்விரிஞ் சன்முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின்முன் செல்க குணங்கடந்த
போதக் கடலெங்க டென்குரு கூர்ப்புனி தன்கவியோர்
பாதத்தின் முன்செல்லு மேதொல்லை மூலப் பரஞ்சுடரே.

உரை:—தொல்லை - பழமையும், மூலம் - எல்லாவற்றிற்குங் காரணமும், பரம் - மேன்மையுமாகிய, சுடர் - சோதிவடிவனாகிய மாயோன், வேதத்தின் முன் செல்க - வேதங்களின் அளவைக்கடந்துபோவனென்றாலும் போவானாக; மெய் உணர்ந்தோர் - உண்மை நிலையை அறிந்தவராகிய, விரிஞ்சன் முதலோர் - பிரமாமுதலானதேவருடைய, கோது - குற்றம், அற்ற - நீங்கிய, ஞானம் - ஞானத்தின், கொழுந்தின் முன் - முடியைக்கடந்து போவனென்றாலும், செல்க - போவானாக; தென் - அழகிய, குருகூர் - குருகூரென்னும் பதியிலவதரித்த, குணம் கடந்த - முக்குணங்களையுங்கடந்த, போதம் கடல் - ஞானசாகரமாகிய, எங்கள் புனிதன் - எங்களுக்குமேலாய் விளங்குகிற நம்மாழ்வாரது, கவி - பாடல்களின், ஓர் பாதத்தின்முன் - ஒரு அடிக்குமுன்னே, செல்லுமே - போகுந்தகுதியுடையவனோ? [எனவே போகானென்பதாம்]; (எ-று.)

திருமால், வேதத்தினெல்லையையும் அறிவுடையவர் ஞான நிலையையுங்கடந்தவனென்றாலும் சடகோபரது பாடலெல்லையைக்கடக்கும் வலியிலனென்பதாம். எனவே திருமாலின் செயலி னெல்லையைக கடந்து அப்பாலும்பரவி நின்றது இவர்பாடலென்க. த்ரைகுண்ய விஷயாவேதா: என்றபடி மூன்றுகுணமுடையோர்க்கும் வேண்டுவன உணர்த்தும் வேதத்தில் பரமாத்துமாவைக்கூறுதபாகமுமிருப்பதால் வேதத்தின் முன் செல்கவென்றும் குணாதீதரான நம்மாழ்வார் பாடலில் அங்ஙனம் ஒரு பாதமுமில்லாமையால் பாதத்தின் முன்செல்லுமே யென்றுங் கூறினார். தவம்முதலியவற்றாற்பெற்ற அறிவினையுடைய பிரமாமுதலானோர் ஞானத்துக்கும் முதலடியிலேயே மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் ஞானத்துக்கும் மிகுந்த ஏற்றத்தாழ்வுண்டாதலால் விரிஞ்சன் முதலோர் கோதற்ற ஞானக்கொழுந்தின் முன் செல்கவென்றும் பாதத்தின்முன் செல்லுமேயென்றுங் கூறினார். இது மெய்யுணர்ந்தோர் என்றதனாலே தவத்தாற்பெற்ற அறிவுடையாரென்பது விளங்கும். வேதம் - மங்கலச் சொல்லாதலின் முதலிலெடுத்துக் கொண்டார். இது விருத்தப்பொருத்தமாயினும் பெரியோராட்சியிற் குற்றமில்லையென்க. மெய்யுணர்ந்தோர் - வியாஸ, அம்பரீஷ, சுக, சௌனகாதியரெனினுமாகும். முதலோரென்றதனால் இந்திராதியரையுங் கொள்க. கோதற்றஞானம் - அமலஞானம். குணங்கள் தந்தனைப் பிரித்துத் திருவாய்மொழியைக் கற்றவர்களுக்கு நற்குணங்களைத் தந்தருளுகின்ற என்றலுமாம். தென்குருகூர் - தென்றிசைக்கண்ணுள்ளதாகிய குருகூரென்றலுமாகும். எல்லோரிலுஞ் சிறந்தவராதலால் புனிதனென்றார். முன் - இடைச்சொல்; இடத்தின்மேலது. செல்க - வியங்கோள்வினைமுற்று. உணர்ந்தோர் - பெயரெச்சமுற்று. செல்லுமே, ஏ - எதிர்மறை. சுடர் - உவமையாகுபெயர். (க)

சுடரிரண் டேபண்டு மூன்றா யினதுக வீர்ந்துலகத்
திடரிரண் டாய்வரும் பேரிருள் சீப்பன வெம்பிறப்பை
யடரிரண் டாமலர்த் தாளுடை யான்குரு கைக்கரசன்
படரிருங் கீர்த்திப்பி ரான்றிரு வாய்மொழிப் பாவொடுமே.

உரை :—பண்டு - முற்காலத்தில், சுடர் இரண்டே-சூரியனும் சந்திரனுமாகிய இரண்டுசுடர்களென்றே நிலையிடப்பட்டன;(இப்பொழுதோவெனில்), எம் பிறப்பை - எமது பிறவியை, அடர் - போக்கிய, இரண்டு ஆம் - இரண்டாகிய, மலர் தாள்,உடையான் - தாமரைமலரையொத்த திருவடிகளையுடையவரும், குருகைக்கு - குருகூருக்கு, அரசன் - தலைவரும், படர் - பரவிய, இரும் - பெரிய, கீர்த்தி பிரான் - புகழையுடையவருமாகிய நம்மாழ்வார் (செய்தருளிய), திருவாய்மொழி - திருவாய்மொழியென்னும் பிரபந்தத்தினது, பாவொடும் - பாடல்களுடனே (சேர்ந்து), துகள் தீர்ந்து - குற்றமின்றி, உலகத்து - உயிர்களிடத்தில், இரண்டு இடர்ஆய் - இரண்டுவகைத்துன்பமாகி, வரும் - வந்துபற்றிக்கொள்கின்ற, பேர் இருள் - பெரியமயக்கம்பற்றி வருகிற இருவினையாகிய இருளை, சீப்பன - போக்குவனவாகி, மூன்று ஆயின - மூன்றுசுடர்களென்று மேம்பட்டு விளங்கலாயின ; (எ - று.)

முன்னாளில் சூரியன் சந்திரனென்னும் இரண்டுசுடர்களே உலகத்தை விளக்கிவந்தன ; அவை புறவிருளைக்கெடுப்பனவன்றி வேறு செய்யலாவனவின்மையால், உயிர்களின் மனத்திலுள்ள இருளைப்போக்கவேண்டிப் பிரானது திருவாய்மொழிப்பாவொடு சேர்ந்து மனத்தெழுகின்ற இருளையும் கெடுத்துமுச்சுடராயின வென்பதாம். உலகத்தின் பேரிருளைக் கெடுத்தற்குத் திருவாய்மொழிவேண்டுமானாலும் நம்மாழ்வார் திருவடிகளில் அன்புபூண்ட தமக்கு அவர் திருவடிகளே அமையுமென்பதுதோன்ற எம்பிறப்பை அடரிரண்டா மலர்த்தாளுடையானென்றார். பூவோடு நாரும் மணம்பெறுதல்போலத் திருவாய்மொழிப் பாவொடு சுடர்சேர்ந்து மூன்றாயினவென்றார். இனிச்சுடரிரண்டென்பதற்கு இராமகிருஷ்ணர்களென்று பொருள்கொண்டால் அவ்விராமபிரான் சுக்கிரீவனைநோக்கிச் சரணாகதிதருமத்தையளித்தமையாலும் கண்ணபிரான் அருச்சுனனைநோக்கிக் கீதையருளிச்செய்தமையாலும் இங்கு "வீடுமின் முற்றவும்" என்று எல்லாவுயிர்களையும் நோக்கியருளிச்செய்தமையாலும் இத்திருவாய்மொழியேஅவரினும் சிறப்புடைமையாதலறிக. வினைகளுள் நல்வினை மீண்டும் பிறவியைத்தருதலால் இரண்டினையும் சேர்த்து இடரென்றார் ; இருளென்பதும் இக்கருத்துப்பற்றியேயாம் ; "இருள்சேரிருவினையும்" என்றார்பிறரும். ஒருவன்செய்யும் நன்மையால் அவனைச் சார்ந்தபலரும் மேம்படுவாராதலால் தாம் ஒருவர்துதித்தலினால் தம்மைச்சார்ந்த பலர்பிறப்புக்களும் நீங்குதல்பற்றி எம் என்று தன்மைப்பன்மையாற் கூறினார். இரண்டே, ஏ - தேற்றம். மலர்த்தாள் - உவமத்தொகை. குருகை - மரூஉ. இருங்கீர்த்தி - பண்புத்தொகை. (உ)

பாவொடுக் குந்நுண் ணிசையொடுக் கும்பல வும்பறையுந்
நாவொடுக் குந்நல் லறிவொடுக் கும்மற்று நாட்டப்பட்ட
தேவொடுக் கும்பர வாதச் செருவொடுக் குங்குருகூர்ப்
பூவொடுக் கும்மமு தத்திரு வாயிரம் போந்தனவே.

உரை :—குருகூர் - திருக்குருகூர்ப்பதியிலே, பூ - (ஆழ்வாரது திருவாய்) மலரில், ஒடுக்கும் - அடக்கப்பெற்றிருந்ததான, அமுதம் - அமிர்தம்போன்ற, திரு ஆயிரம் - சிறந்த ஆயிரம் பாடல்களும், போந்தன - வெளிவந்தவைகள் தாம், பா - செய்யுட்களினிலக்கணங்களையெல்லாம், ஒடுக்கும் - தம்முளடக்கிக்கொண்டு விளங்குவன; நுண் - நுட்பமாக அறியத்தக்க, இசை - இராகப்பகுதிகளெல்லாவற்றையும், ஒடுக்கும்——; பலவும் - வேறாகிய பலவற்றையும், பறையும் - மாறுபடக்கூறுகின்ற, நா - புறச்சமயிகளின் நாவினை, ஒடுக்கும் - அடக்கிவிடும்; நல் அறிவு - நல்ல அறிவினை, ஒடுக்கும் - தன்னுள்ளடக்கியிருக்கும்; மற்றும் - அன்றியும், நாட்டப்பட்ட - (உலகத்தை) நிலைநிறுத்தப்பட்டுள்ள, தே - தேவனாகிய திருமால், ஒடுக்கும் - தன்னுளடக்கிக்கொண்டிருக்கிற, பரம் - வேறாகிய (மதங்களின்), வாதம் - விவகாரத்தினாலாகிய, செரு - போரை, ஒடுக்கும் - அடக்கிவிடும்; (எ - று.)

பாடல்களினுறுப்புக்கள் பலவற்றையும் நிறையப்பெற்றிருப்பதனால் பாவொடுக்கு மென்றார். சிவபிரான் திருக்கையிலேந்திய வெண்டலையால் பாடப்பெற்ற தேவகானமாகிய பதினெட்டுப் பண்களின் வழியில் விரிந்த நூற்றுமூன்று பகுதிகளையும் பெற்றிருப்பதனால் நுண்ணிசையொடுக்குமென்றார். நம்மாழ்வார் கொண்ட கொள்கைக்கு மாறாகப் பிதற்றுகின்றவர் நாவினை அடங்கச்செய்தலால் பலவும்பறையுந்நாவொடுக்குமென்றார்; "காலையில் நறுமல ரொன்றக் கட்டிய, மாலையி னியல்புரை சமய வாதியர், சூலையின் திருக்கலாற் சொல்லுவோர்க்கெலாம், வேலையுந் திரையும்போல் வேறு பாடிலான்" என்றபடி எல்லாமதத்தையும் தன்னுளடக்கிக்கொண்டவனாதலால் தேவொடுக்கும் பரவாதமென்றார். இறந்தாரைப்பிழைப்பிக்கும் அமுதம்போலத் தீவினையிலழிவார் தாம் நினைத்தமாத்திரையில் அவரை அதினின்று நீக்குதலால் இறந்தாரைப் பிழைப்பிக்கும் அமுதத்தை அத்திருவாய்மொழிக்கு உவமை கூறினார். இறைவனருளாற் பாடியதன்றி ஆழ்வார் தாமாகப்பாடினாரில்லையென்பது தோன்றப்போந்தனவென்றார். 'மூந்தை ஆயிரம்' என்ற பாசுரப்படி திருவாய்மொழி நித்தியமென்பதும் நித்தியமான வேதத்தைப் பிரமதேவர் வெளியிட்டதுபோலத் திருவாய் மொழியையும் ஆழ்வார் வெளியிட்டனரென்பதும் இதனால் விளங்கும். ஒடுக்குந் நுண்ணிசை, பறையுந்நா, ஒடுக்குந்நல்லறிவு, ஒடுக்கும்மற்று, ஒடுக்கும்மமுதம் - இவற்றிலுள்ள நகரமகரங்கள் விரித்தல் விகாரம். பூ - உவமையாகு பெயர். (சு)

தனமாஞ் சிலர்க்குத் தவமாஞ் சிலர்க்குத் தருமநிறை
கனமாஞ் சிலர்க்கதன் காரண மாஞ்சிலர்க் காரணத்தி
னினமாஞ் சிலர்க்கதற் கெல்லையு மாந்தொல்லை யேர்வகுள
வனமாலை யெம்பெரு மான்குரு கூர்மன்னன் வாய்மொழியே.

உரை :—தொல்லை - பழமையாகிய, ஏர் - அழகிய, வகுளம் - மகிழம்பூக்கள் தொடுத்த, வனம் - குளிர்ந்த, மாலை - மாலையையுடைய எம்,

பெருமான் - எமது தலைவராகிய, குருகூர் மன்னன் - குருகூரிலவதரித்த நம்மாழ்வாரது, வாய் மொழி - திருவாயிலிருந்து வந்த பாடல்கள், சிலர்க்கு - சிற்சிலருக்கு, தனம் ஆம் - செல்வப்பொருளாகும்; சிலர்க்கு———, தவம் ஆம் - தவமேயாகும்; சிலர்க்கு——, தருமம் நிறை - புண்ணியமிகுந்த, கனம் ஆம் - பெருஞ்சிறப்புமாகும்; சிலர்க்கு———, அதன் காரணம் ஆம் - அப்பெருஞ் சிறப்புக்குக் காரணமுமாகும்; சிலர்க்கு——, ஆரணத்தின் இனமாம் - வேதத்தின் பகுதியாகும்; அதற்கு - அந்த வேதத்தின் பகுதிகளனைத்துக்கும், எல்லையும் - முடிவாகிய உபநிஷத்துக்களும், ஆம் - ஆகும்; (எ - று.)

குருகூர் நம்மாழ்வார் திருவாய்மொழியானது செல்வம் முதலியவற்றை வேண்டியவர்க்கு வேண்டியபடியே பயன்படத்தக்க தென்பதாம். திருவாய்மொழி தமிழ்ப் பிரபந்தமாதலால் அந்தத் தமிழுக்குரிய தெய்வம் தான் அந்நூலைப் பாராயணஞ்செய்வார்க்குவேண்டியதைவேண்டியபடியே கொடுக்குமென்பார் தனத்தை வேண்டுவார்க்குத் தனமும் தவத்தை விரும்பினவர்க்குத் தவமும் பெருமையை விரும்பினவர்க்குப் பெருமையும் அதன் காரணமுமாமென்றார். அத்தெய்வமும் வேறன்று வே[illegible]தத்தினுள் விளங்குவதென்பதை விளக்குவார் ஆரணமாமென்றும் வேதம் வேதாந்தமாகாது இது வேதாந்தமுமாகு மென்பார் அதன் எல்லையென்றும் ஆரணம் பழமையுடையதே யென்பார்க்கு இதுவும் பழமையேயெனக் கூறுவாராகித்தொல்லை வாய்மொழியெனறுங் கூறினார். அன்றியும் உலகத்தில் தனம் இம்மையின்பத்திற்கே உரியது; தவம் - மறுமையின்பத்திற்கே யுரியது இம்மைக்குப் பயன்படாது; இத்திருவாய்மொழி அப்படியன்றி இருமைப்பயனுந் தருதலால் தனமென்றும் தவமென்றுங் கூறினார் என்றலுமாம். (சு)

மொழிபல வாயின செப்பம் பிறந்தது முத்தியெய்தும்
வழிபல வாயவிட் டொன்று யதுவழு வாநரகக்
குழிபல வாயின பாழ்பட் டதுகுளிர் நீர்ப்பொருநைச்
சுழிபல வாயொழு குங்குரு கூரெந்தை தோன்றலினே.

உரை:—குளிர் - குளிர்ந்த, நீர் - நீரையுடைய, பொருநை - தாமிரபருணிநதியானது, பலசுழியாய் - பற்பலவாகச் சுழித்து, ஒழுகும் - ஓடுகின்ற, குருகூர் - குருகூர் என்னும்பதியில், எந்தை - எமது தந்தைபோல்வாராகிய சடகோபர், தோன்றலின் - அவதரித்தலால், பலவாயின - பற்பலவாகிய, மொழி - பாஷைகளுக்கெல்லாம், செப்பம் - ஒழுங்கு, பிறந்தது - உண்டாயிற்று; முத்தி - மோக்ஷவீட்டினை, எய்தும் - அடைகின்ற, வழி - மார்க்கங்கள், பல ஆய - பலவாயினவை யெல்லாம், விட்டு - ஒழிந்து, ஒன்று ஆயது - ஒருவழியாயிற்று; வழுவா - நீங்காத, நரகம் குழி - நரகக்குழிகள், பல ஆயின - பலவாயின வெல்லாம், பாழ்பட்டது - பாழாயிற்று; (எ - று.)

குருகூரில் நம்மாழ்வார் அவதரித்தலால் பாஷைகளில் ஒழுங்கென்பது தோன்றிற்று; முத்திமார்க்கம் ஒழுங்காயிற்று. நரகு பாழாயிற்றென்பதாம். செந்தமிழ்மொழியில் மாறுபட்டுக்கிடந்த துறைகள் பலவும், சடகோபர் திருவாய்மொழியை ஒழுங்குபடுத்திப் பாடியருளினது நோக்கி அவ்வழியே திருத்தப்பெற்றதனுல் செப்பம் பிறந்ததென்றார்.

வழுவாநரகம் - தீவினைசெய்தாரைத் தப்பாமல் விழுங்கு நரகம். அத்திருவாய்மொழியைப் பாராயணஞ்செய்வோரும் அப்படிச்செய்வோராருகிலிருப்போரும் கேட்போரும் முத்தியையே அடைதலால் நரகக்குழி பாழ்பட்டதென்றார். மொழியென்பதற்குப் பதமென்ற பொருள் கொண்டு கடபடாதி சப்தங்கள் அவ்வப்பொருள்களையே யுணர்த்தினவாதலால் மொழி பலவாயினவென்றும் திருவாய்மொழியிலுள்ள எல்லாப் பதங்களும் அவ்வப்பொருள்களினளவில் நில்லாது எம்பெருமான் வரையிற் சென்றுணர்த்தினமையால் செப்பம் பிறந்ததென்றுங் கூறினுமமையும். இவ்வாழ்வாரவதரித்ததன்பின் பலவாயிருந்தன பொருளைச் சுழிகளேயன்றிப் பிறவில்லையென்பார் பொருளைச்சுழி பலவாயொழுகுமென்றார். செப்பம் - பண்புப்பெயர். ஆய - வினைப்பெயர். (௫)

தோன்றா வுபநிடதப்பொருடோன்ற லுற்றார்தமக்குஞ்
சான்றாமிவையென்றபோதுமற் றென்பலகாலுந்தம்மின்
மூன்றா யினவு நினைந்தா ரணத்தின்மும் மைத்தமிழை
யீன்றான் குருகைப்பிரானெம்பி ரான்ற னிசைக்கவியே.

உரை:—பலகாலும் - பலதரமும், தம்மில் - தமக்குள், மூன்று ஆயினவும் - மூன்றுபகுதியாகி அமைந்தவற்றையும், நினைந்து —, ஆரணத்தின் - வேதத்தினைப்போல, மும்மை - மூன்றுகூறுபாடாகிய, தமிழை - தமிழிலாகிய பாடல்களை, ஈன்றான் - அருளிச்செய்தவரும், குருகை குருகூரிலவதரித்த, பிரான் - பெரியவரும், எம்பிரான் - எம் தலைவருமாகிய நம்மாழ்வாருடைய, இசைகவி இவை - பண்ணோடுபாடவல்ல இப்பாடல்கள், தோன்றா - பலராலும் அறியப்படாத, உபநிடதம்பொருள் - உபநிஷதத்தின் கருத்துக்களை, தோன்றல் உற்றார் தமக்கும் - அறியப்பெற்ற பெரியோர்களுக்கும், சான்று ஆம் - சாட்சியாகி விளங்கும், என்றபோது - என்று சொல்லிய காலத்தில், மற்று - வேறாகிய (சிறப்பு), என் - யாது வேண்டும்?; (எ - று.)

ஜீவ ஈசுவர ஜகத்தென்று மூன்றுகூறுபடுத்திக் காட்டியிருப்பதைத் தம்முள் ஆராய்ந்து அதற்குத்தகும்படியாகக் குருகூர் நம்மாழ்வாராற் பாடியருளிய இப்பாடல்கள் உபநிஷதத்தின் கருத்தை அறிகிற பெரியோர்களுக்கு இடையில் சந்தேகம்நேருமிடத்து இது சாட்சியாயிருந்து அந்தச் சந்தேகங்களை ஒழிக்குமானால் இதன் சிறப்பினை வேறென்ன சொல்லுவதென்பதாம். அரியதத்துவஞானத்தைப் பெறத்தக்க புண்ணியமுடையார்க்கன்றிப் பிறர்க்கு வெளிப்படாமையால் தோன்றாவுபநிடதப்பொருளென்றார். தோன்றலுற்றார்-இங்கு மதுரகவியாரும், நாதமுனிகளுமாம்; எப்படியெனில்? ஆழ்வாரைக் “கண்ணிநுண்சிறுத்தாம்பு” என்ற பாசுரம்பாடி முத்தியடைந்தவர் மதுரகவி. பிற்பட்டு நாதமுனிகள் உண்டாகி இக்கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற பாசுரத்தைப்பலதரம் ஓதினமையால் முன்பு ஆழ்வார்பாட மதுரகவி எழுதிவைத்திருந்து அழிந்துபோன திருவாய்மொழி நாதமுனிகளின் மனத்தில் தோன்றியது; இவர் தமது மனத்தில் தோன்றியபடியே அதனை யெழுதி ஆழ்வார் பெயரோடு வெளியிட்டார் என்பதாம். முத்தமிழ் - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்; இயற்றமிழ் - இலக்கண அமைதியையுடையதமிழ். இசைத்தமிழ்- இராக அமைதியையுடைய தமிழ். நாடகத்தமிழ் வெளிப்படை. எம்பிரான்றன். தன் - சாரியை. (௬)

கவிப்பா வமுத மிசையின் கறியொடு கண்ண னுண்ணக்
குவிப்பான் குருகைப் பிரான்சட கோபன் குமரி கொண்கன்
புவிப்பா வலர்தம் பிரான்றிரு வாய்மொழி பூசுரர்தஞ்
செவிப்பா னுழைந்துபுக் குள்ளத்து ளேநின்று தித்திக்குமே.

உரை :— கவி - பாடலாகிய, பா - பரவிய, அமுதம் - உணவினை, இசையின் - இராகமாகிய, கறியொடு - கறிமுதலானவிஞ்சனத்துடனே, கண்ணன் - கண்ணபிரான், உண்ண - உட்கொண்டருளும்படி, குவிப்பான் - சமைத்துக்குவிப்பவரும், குருகை - குருகூரில் அவதரித்த, பிரான் - பெரியோரும், சடகோபன் - சடமென்னும்வாயுவை முனிந்து போக்கினவரும், குமரிகொண்கன் - குமரிநாட்டுக்குத்தலைவரும், புவி - பூமியிலுள்ள, பாவலர்தம் - வித்துவான்களுக்கு, பிரான் - தலைவருமாகிய நம்மாழ்வார்பாடிய, திருவாய்மொழி ———, பூசுரர்தம்-பிராமணர்களுடைய, செவிப்பால் - காதுகளின்வழிகளிலே, நுழைந்துபுக்கு-நுழைந்து புகுந்து, உள்ளத்து உள்ளே - மனத்தினிடத்திலே, நின்று - நிலைபெற்றுநின்று, தித்திக்கும் - இனியசுவையையுண்டாக்கும்; (எ - று.)

ஆழ்வார், பாடலாகிய சோற்றினையும் இசையாகிய கறிமுதலியவற்றையும் கண்ணபிரான் உண்ணும்படி சமைத்துக்குவித்த திருவாய்மொழியென்னுமுணவு அந்தணர் செவியின்வழியேநுழைந்து தித்தியாநிற்குமென்பதாம். இப்பாடல்முழுவதும் உருவகப்படுத்தினமையால் முற்றுருவகம். சிவசத்தியாகிய குமரியென்னுந்தேவியைப் பரசுராமன் ஸ்தாபித்துப்பூசித்தமைபற்றி இந்த இடத்திற்குக் கன்னியாகுமரியென்றும் இது சூழ்ந்தநாட்டிற்குக் குமரிநாடென்றும் பெயராயிற்று. ஆழ்வார்பாடல்களையே புலவர்கள்மேற்கோளாகக்கொள்கின்றமையால் பாவலர் தம் பிரானென்றார். புளியங்காடியுண்பவருக்கு அமுதங்கிடைத்தாற்போல வேதாந்தநூலிற்கிடந்து மனத்தைவருத்தும் பூசுரரிதனைநோக்கி மகிழ்ந்தேற்றலின் அவருள்ளத்துள்ளே தித்திக்குமென்றார். அட்டுக்குவி சோற்றுப்பருப்பதமுமென்று இடையர்கள் கண்ணனுண்ணக்குவித்தாரேனும் அச்சோறு கண்ணனுக்கேயுரியதாயிற்று. இஃது அதுபோலன்றிப் பூசுரரும் சுவைத்துமகிழ்வதாயிற்று. (எ)

தித்திக்கு மூலத் தெளியமு தேயுண்டு தெய்வமென்பார்
பத்திக்கு மூலம் பனுவற்கு மூலம் பவமறுப்பார்
முத்திக்கு மூல முளரிக்கை வாணகை மொய்குழலா
ரத்திக்கு மூலங் குருகைப் பிரான்சொன்ன வாயிரமே.

உரை :—குருகை - குருகூரிலவதரித்த, பிரான் - சடகோபர், சொன்ன ———, ஆயிரம் - திருவாய்மொழி ஆயிரம்பாடல்களும், தித்திக்கும் - இனிமைசெய்கின்ற, மூலம் -(சாவாமைக்குக்) காரணமாயிருக்கின்ற, தெளிஅமுதே - தெளிந்த அமிர்தமேயாம்; (அன்றியும்), தெய்வம் உண்டென்பார் - தெய்வங்களிருக்கின்றனவென்று சொல்லுகிறவர்களுடைய, பத்திக்குமூலம் - பக்திக்கும் இதுவேகாரணமாகும்; பனுவற்கும் - வரலாற்றுமுறையிற்பாடுகின்ற நூல்களுக்கும், மூலம் ——; பவம் - பிறவியை, அறுப்பார் - போக்கத்துணிந்தவர்கள், முத்திக்கும் - முக்தியடைவதற்கும், மூலம் ———; முளரி கை - தாமரைமலர்போன்ற கை

களும், வாள் நகை - ஒளிபொருந்தியபற்களுமுள்ள, மொய்குழலார் - நெருங்கியகூந்தலையுடைய மாதர்களிடத்தாசையை; அத்திக்கும்-போக்குகைக்கும், மூலம் ——; (எ - று.)

அமிர்தின்மேற்பட்ட சிறந்தபொருளில்லையாதலின் அமுதத்தை உவமித்தார். அன்றி அமிர்தமோ இதற்குஒப்பாவது என்று எகாரத்தை எதிர்மறையாக்கியுமுரைக்கலாம். அங்ஙனம் ஆக்கவே தேவாமிர்தமானது பத்திக்கும் பனுவலுக்கும்மூலமாகாது. உடம்பைக்காத்துநிற்றலால் முத்திக்கும்மூலமாகாது. அரம்பையரைச்சேரச்செய்தலால் மொய்குழலார் அத்திக்குமூலமாகாது. அன்றியும் பவமறுப்பார்க்கு அழியா முத்தியைக்கொடுக்கின்ற இத்திருவாய்மொழிபோல அமிர்தம் அழியாவின்பத்தைத்தரமாட்டாது; அமிருதமுண்டவரும் சிற்சில நாளில் இறப்பதுண்டு:— "எல்லைமூவைந்து நாள்க ளுளவென விமைக்குங் கண்ணு, நல்லெழின் மாலை வாடு நஞ்சுடை யமிர்துண் டாரில், பல்பகற் றுய்த்த வின்பம் பழுதெனக் கவல்பகண்டாய்" என்பதனாலுமறிக. திருவாய்மொழி ஆயிரத்துநூற்றிரண்டுசெய்யுட்களை ஆயிரமென்றது பெரும்பான்மைபற்றியேயாம். அன்றியும் நூறுபதிகத்திலுமுள்ள நூறு கடைக்காப்புச்செய்யுட்களைக்கழிக்க - ஆயிரத்திரண்டேயாமெனக.

ஆயிர மாமறைக் கும்மலங் கார மருந்தமிழ்க்குப்
பாயிர நாற்கவிக் குப்படிச் சந்தம் பனுவற்கெல்லாந்
தாயிரு நாற்றிசைக் குத்தனித் தீபந்தண் ணங்குருகூர்ச்
சேயிரு மாமர புஞ்செவ்வி யான்செய்த செய்யுட்களே.

உரை:— தண் - குளிர்ச்சியான, அம் - நீர்வளமுடைய, குருகூர் சேய் - குருகூர்ப்பதியிலே குழந்தைவடிவாக அவதரித்தவரும், மா - சிறந்த, இருமரபும் - (தாய்வழிதந்தைவழியாகிய) இரண்டுவழியும், செவ்வியான் - சிறந்தமரபினருமாகியசடகோபர், செய்த ——, செய்யுட்கள் - பாடல்களானவை, ஆயிரம்மாமறைக்கும் - சிறந்தஆயிரமென்றபகுதியுள்ளசாமசாகைகளுக்கெல்லாம், அலங்காரம் - அழகுசெய்வனவாகும்; அரும் தமிழ்க்கு - அரியதமிழ்க்கு, பாயிரம் - வரலாற்றுமுறையாகும்; நாற்கவிக்கு - நான்குவகைப்பட்ட கவிகளுக்கு, படிசந்தம் - ஒப்புக்காண்பதற்குரியனவாம்; பனுவற்குஎல்லாம் - எல்லாவகைப்பட்ட நூல்களுக்கும் - தாய் - தன்னுட்கொண்டுதருந்தாய்போல்வனவுமாம்; இரு நால் திசைக்கும் - எட்டுத்திக்குக்கும், தனி - ஒப்பற்றுவிளங்குகிற, தீபம் - விளக்குமாகும்; (எ - று.)

குருகூராழ்வாரருளிய பாடல்கள் சாமவேதத்துக்கு அழகுசெய்வனவாம். தமிழுக்கு அணிந்துகொண்டு அதற்குரியபாயிரமாகும்; கவிகளுக்குப்படிச்சந்தமாம்; பனுவலுக்குத்தாயாகும்; எட்டுத்திக்குக்குந் தீபமாகுமென்பதாம். ஒருபெண்ணுக்கு அவளைக்காமுகர் விரும்புமாறு அணிகளால் அணியப்படுவனபோல பொருள் மறைந்துகிடந்த வேதங்களின்பொருள்களைமேற்கொண்டு யாவரும்விரும்பும்படி அழகுசெய்தலால்மறைக்குஅலங்காரமென்றார். சிவபெருமான் முருகக்கடவுள் நிதியின் கிழவன் இந்திரன் முதலாகியதேவர்களும், வான்மீகியார் கௌதமனார் மார்க்கண்டேயனார் அகத்தியனார் முதலாகிய முனிவர்களும் ஆராய்ந்த அருமைதோன்ற அருந்தமிழென்றார். நாற்கவி - ஆசு, மதுரம், சித்தி

ரம், விஸ்தாரம் என்பன, ஒருவன் பாடுகவென்றவுடன்பாடுதல் ஆசுகவியாகும். இனியசுவைகள் ஒன்பதுந்தோன்றப்பாடுதல் மதுரகவியாகும். "மாலைமாற்று சக்கரஞ் சுழிகுளம். ஏகபாத மெழுகூற் றிருக்கை, காதை கரப்பே கரந்துறை பாட்டே, தூசுங் கொளலே வாவன் ஞாற்று நாகபந்தம்" முதலாகிய மிறைக்கவிகளைப்பாடுதல் சித்திரகவியாகும். ஒருபொருளை மேற்கொண்டு பலவகைவர்ணனைகளையும் அமைத்து விரிவாகப்பாடுதல் வித்தாரகவியாகும். பாயிரம் - தமிழிலின்னபொருள்களுளவென்று திருவாய்மொழியிற்காட்டியதாம். தமிழில் இவ்வண்ணம் பாடவேண்டுமென்ற கட்டளைக்கு உதாரணமாகப்பெரியோர்கொள்ளவைத்தலால் படிச்சந்தமென்றார். பனுவல், பலவகைய; அவை;—அறநூல், பொருள்நூல், காமநூல், வீட்டுநூல்என்பன. இந்நான்கும் அத்திருவாய்மொழியிற்பரக்கக்காணலாமாதலால் தாயென்றார். உபயகுலோத்தமரென்றதன் கருத்தாக இருமாமரபுஞ்செவ்வியானென்றார்.

செய்யோ டருவிக் குருகைப்பி ரான்றிரு மாலைநங்கள்
கையோர் கனியெனக் காட்டித்தந் தான்கழற் கேகமலம்
பெய்யோ மவன்புக ழேத்திப் பிதற்றிப்பித் தாய்த்திரியோ
மையோ வறிதுமென் றேயுப காரத்தி னாற்றலையே.

உரை:—அருவி - அருவிநீர்கள், செய் - வயல்களில், ஓடு - ஓடிப்பாய்கின்ற, குருகை பிரான் - குருகூரில்வந்த பெரியோரான பராங்குசர், திருமாலை - சிறந்தமாயோனை, நங்கள் - நம்முடைய, கை - கையிலுள்ள, ஓர் கனிஎன - ஒரு பழமென்னும்படியாக, காட்டி தந்தான் - குறித்துக்காட்டிக்கொடுத்தருளினார்; (அதனை அறிந்தும்), அவன் - அந்தப்பராங்குசருடைய, கழற்கே - திருவடிகளிலே, கமலம் - தாமரைமலர்களை, பெய்யோம் - பூசித்தறியோம்; (அவன்) புகழ் - அவரது கீர்த்தியை, ஏத்தி - துதித்து, பிதற்றி - பலகாலுஞ்சொல்லி, பித்தாய் - பிறர் நம்மை நோக்கிப்பைத்தியரென்று சொல்லும்படியாகி, திரியோம் - திரிந்து அலைந்திலோம்; (அவன்) உபகாரத்தின் - அவர் நமக்குச்செய்துள்ள நன்றியின், ஆற்றலை - பெருமையை, என்று அறிதும் - எப்பொழுது அறியப்போகிறோம்? ஐயோ - ஐயகோ! என்னே! (எ - று.)

திருக்குருகூர் நம்மாழ்வார் திருமாலைக் காட்டிக்கொடுத்தருளினார்; அப்படிப்பட்ட மகோபகாரிக்கு ஒருவிதத் தொண்டுஞ்செய்தறியோம்; அவருபகாரத்தின் பெருமையை எப்பொழுது தானறியப்போகிறோமென்பதாம் "கைத்தலத்தா மலகமெனக் கண்டுகொள்" என்றபடியே நமக்குக்காட்டிக்கொடுத்தும் "வாணுர் நுதலார் வலைப்பட் டடியேன் பலவின் கனி யீந் ததுபோல் வதன்முன்" "இன்கனி கவருமந்தி கடுவனோ டிரிய வோட்டி, நன்கனி சிலதன்னுண்ண" என்கின்றபடியே அறிவின்மையால் எம்பெருமான் நமக்குச்செய்யும் பேரருளையிகழ்ந்து பிறரனுபவிக்கப் பார்த்துக் "கைப்பழ மிழந்த மந்தி" போல ஏக்கற்று இருக்கிறோமென்று வெறுத்து ஐயோவென்றிரங்கிக்கூறினார். அருவி நீர் வயலில் சென்றுபாய்தல்போல் ஆழ்வார்கருணை அவரைத்திப்பவருள்ளத்திற்சென்று பரவுமென்பது தொகைமொழியின் கருத்து. மற்றும் அருவி நீர் வயல்களை விளையச்செய்வதுபோல் ஆழ்வார் மாயோனைக்காட்டிப் பக்தியை விளையச்செய்தாரெனினும் பொருந்தும்.

குருகை - மரூஉ. கழற்கு - உருபுமயக்கம். பெய்யோம், திரியோம்-தன்மைப்பன்மை எதிர்மறைவினைமுற்று. அறிதும் - தன்மைப் பன்மை எதிர்காலவினைமுற்று. (கo)

ஆற்றிற் பொதிந்த மணலின் றொகையரு மாமறைகள்
வேற்றிற் பொதிந்த பொருள்களெல் லாம்விழு மாக்கமலஞ்
சேற்றிற் பொதியவிழ்க் குங்குரு கூரர்செஞ் சொற்பதிக
நூற்றிற் பொதிந்த பொருளொரு கூறு நுவல்கிலவே.

உரை:—ஆற்றில் - பொருநையாற்றில், பொதிந்த - தங்கியுள்ள, மணலின் தொகை - மணலினளவையொத்த, மா - சிறந்த, அரும் மறைகள் வேற்றில் - பலவகைப்பட்ட அரியவேதங்களில், பொதிந்த - மறைந்துகிடக்கின்ற, பொருள்கள் எல்லாம் - எல்லாப்பொருள்களும், விழும் - (யாவரும்) விரும்பத்தக்க, மா கமலம் - சிறந்த தாமரைகள், சேற்றில்——, பொதி அவிழ்க்கும் - கட்டவிழ்ந்து மலரப்பெற்ற, குருகூரர் - குருகூர்ப்பதியிலுள்ள பராங்குசர் செய்தருளிய, செம் சொல் பதிகம் நூற்றில் - செந்தமிழ்ச்சொற்களாற்செய்த நூறுபதிகங்களிலும், பொதிந்த - நிறைந்துள்ள, பொருள்-பொருள்களில், ஒரு கூறும்-(நூற்றில்) ஒரு பகுதியளவும், நுவல்கில - சொல்லினவில்லை; (எ - று.)

பலவாகிய வேதங்களெல்லாம் ஆழ்வார்திருவாய்மொழியிற்கூறியவற்றில் நூற்றிலொருபங் களவுங்கூடக் கூறினவில்லை யென்பதாம். அனந்தாவைவேதா: என்றதனால் ஆற்றின் மணலின் றொகை மறைகளென்றார். மிகுதியைவிளக்கவேண்டி இப்படியே "நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" "மிக்குவரு மின்னீர்க் காவிரி, யெக்கரிட்ட மணலினும் பலவே" என்பனமுதலாகப் பிறசான்றோர்களுங் கூறுதல் காண்க. வேறு ஆவன:—இருக்கு, தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், எசு, சாமம், அதர்வணம் என்பன. திருமாலுமீசனும் பின்சென்றும் தூது செலத்துணிந்தும் வளர்த்த தமிழாற்புனைந்தமையால் செஞ்சொலென்றார். பத்துப்பாடலென்கின்ற நியமனத்தைக்கொண்டமையால் பதிகமென்றார். நூற்றில் என்பதனை ஒரு கூறு என்பதனோடுங்கூட்டிப் பொருள்கொள்ளுதல் சிறப்பு. மாக்கமலம் சேற்றில்பொதியவிழ்க்குமெனவே சேற்றில் தாமரைமலர்தல்போல தகுதியில்லாத உயிர்கள் உலகமயக்கத்திற்பட்டு வருந்துவதையறிந்த ஆழ்வார் மிகுந்த கருணையோடு அவர்களுக்கு அருளிச்செய்வாரென்பதாம். (கக)

இலவே யிதழுள வேமுல்லை யுள்ளியம் புமொழியுஞ்
சிலவே யவைசெழுந் தேனுக்குமே தமிழ்ச் செஞ்சொற்களாற்
பலவே தமுமொழிந் தான்குரு கூர்ப்பது மத்திரண்டு
சலவேல் கழுமுள வேயது காணென் றனியுயிரே.

பொருள்—அகப்பொருள்.
திணை—உரிப்பொருளாற் குறிஞ்சி.
கிளவி—பாங்கற்கூட்டம்.
துறை—அஃது, இவ்விடத் திவ்வியற் றென்றல்.

உரை:—பல - பற்பலவாகிய, வேதமும் - வேதத்தின் கருத்தையெல்லாம், செம் தமிழ் சொற்களால் - செவ்வியதமிழ்ச்சொற்களினாலே,

மொழிந்தான் - பாடியருளிய பராங்குசரவதரித்த, குருகூர்-குருகூர்ப்பதியிலே, (நண்பனே!), பதுமத்து - ஒரு தாமரைமலரிலே, இதழ்-சில இதழ்கள், இலவே - நிறத்தில் முள்ளிலவமலரேயாம்; உள் - அவ்விதழ்களுக்குள்ளே, முல்லை - முல்லையரும்புகளும், உளவே - சில உள்ளனவாம்; உள - அவைகளிலிருந்து, இயம்பும் - சொல்லப்படுகின்ற, மொழியும் - வார்த்தைகளும், சிலவே - சிலவுண்டாம்; அவை - அவ்வார்த்தைகள்தாம், செழும்தேன் - செழுமையான தேனை, ஒக்கும் - நிகர்க்கும்; (இன்னும் அத்தாமரைமலரிலே), இரண்டு சலம் வேல்களும் - கோபஞ்செய்வனவாகிய இரண்டு வேலாயுதங்களும், உளவே-உள்ளனவேயாம்; அது - அம்மலரையுடைய வடிவந்தான், என் - எனது, தனி- ஒப்பற்ற, உயிரே - உயிரேயாகும்; காண் - நீ சென்று அதனைப்பார்; (எ - று.)

நண்பனே! யான் கருதிய தலைவியினிடம் ஆழ்வார் குருகூர்; அவளியல்பு இலவமலர்போன்ற இதழும் முல்லையரும்பொத்த பற்களும் தேனொத்த சொற்களும் தாமரைமலர்போன்ற முகமும் வேல்போன்ற கண்களுமாம்; அந்தப்பெண் என்னுயிரேயாவளென்பதாம். அவள் எவ்விடத்திலிருக்கிறாளென்றதற்கு இடம் குருகூரென்றான். இயல்பெவ்வண்ணமென்பதற்கு இதழ் - இலவென்றான். மொழிபெறாது வருந்திய தலைவன் அவள் வறிதுநகைத்தலை இயற்கைப் புணர்ச்சியிற் கண்டனனாதலின் இதழுள் முல்லையுளவென்றான். அவள் வழிபாடு மறுத்தபொழுது சில சொற்கூறியதனைக்கேட்டவனாதலின் சிலவேசொல்லென்றான். பிற்பாடு அச்சொல்லைப் பெருமையால் சிலவென்றானெனினுமாம். அருமையைச் செய்தலால் தேனொக்குமென்றான். தன் மனத்தை அவள் வசப்படுத்தலால் முகத்தைத் தாமரைமலரெனறான். அவள் விழிகள் தன்மேற்பாய்ந்து துன்பஞ்செய்தலால் சலவேல்களென்றான். அவள் இன்றியமையாமையின் என் உயிரென்றான். கைகோள்-களவு. கூற்று - தலைவன்கூற்று. கேட்போர் - பாங்கன். இடம்-முன்னிலை. காலம் - இறந்தகாலம். மெய்ப்பாடு - உவகை. பயன்-பாங்கற்குணர்த்தல். இலவு, முல்லை - மலர்களுக்கு முதலாகுபெயர்கள். இயம்பும்மொழி, ம் - விரித்தல்விகாரம். உள-முதல் விளக்காக இரண்டிடத்துங் கூட்டப்பட்டது. (கஉ)

உயிருருக் கும்புக் குணர்வுருக் கும்முட லத்திலுள்ள
செயிருருக் கொண்டநந் தீங்குருக் குந்திரு டித்திருடித்
தயிருருக் குந்நெய்யொ டுண்டா னடிச்சட கோபன்சந்தோ
டயிருருக் கும்பொரு நற்குரு கூரெந்தை யந்தமிழே.

உரை:—உருக்கும் நெய்யொடு - உருக்குவதற்குரிய வெண்ணெயுடனே, தயிர்- தயிரையும், திருடிதிருடி-ஆயர்பாடியில் எல்லாவீடுகளிலுஞ்சென்று திருடி, உண்டான் - விழுங்கிய கண்ணபிரானது, அடி - திருவடியைத் தொழுபவராகிய, சடகோபன் - சடகோபனென்னும் பெயருடையவரும், சந்தோடு - சந்தனமரங்களுடனே, அயிர் - நுண்மணலையும் கொணர்ந்து, உருக்கும் - கரையோரங்களில் ஒதுக்கித்தள்ளுகின்ற, பொருநல் - பொருநையென்னுந்தாமிரபர்ணி நதியையுடைய, குருகூர் - குருகூர்ப்பதியிலவதரித்தருளிய, எந்தை - எந்தந்தைபோல்வாராகிய பராங்குசரது, அம்தமிழ் - அழகிய தமிழ்ப்பாடல்கள், (படிக்கும்பொழுது), உயிர் உருக்கும் - நம் உயிரை உருகச்செய்யும்; புக்கு -

உள்ளே புகுந்து, உணர்வு - அறிவை, உருக்கும் ------; உடலத்தில் உள்ள - நம்சரீரத்திலமைந்துள்ள, செயிர் - குற்றமே, உருகொண்ட - வடிவமாகக் கொண்டிருக்கிற, நம் தீங்கு உருக்கும் - நம்முடைய தீவினைகளெல்லாம் போக்கும்; (எ - று.)

குருகூர் ஆழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியானது உயிரையும் உணர்வையும் செயிரைக்கொண்ட தீங்கையும் போக்குமென்பதாம். படிக்கும்பொழுதுங் கேட்கும்பொழுதும் உயிரையும் உணர்வையுந் தன்வசப்படுத்திக்கொள்ளுதலால் உயிருமுணர்வு முருக்குமென்றார். தீங்கு - காமக்குரோதலோபாதிகள்; இவை வேண்டிய அளவு துன்புறுத்தி இம்மைக்குப்பழியும் மறுமைக்கு நரகுந்தருதலால் செயிருருக் கொண்ட தீங்கு என்றார். கண்ணபிரான் ஆயர்பாடியில் வீடுகள்தோறும்புகுந்து தயிரையும் வெண்ணெயையும் திருடியுண்டமை வெளிப்படை. மற்றைய மொழிகள் போலாகாமல் தனக்கு அரசுவீற்றிருத்தற்கு நாடுடைமையும் இலக்கணவரம்புடைமையும் நோக்கி அந்தமிழென்றார். பொருளையெனினும் பொருநலெனினும் பொருந்தும். உடலத்து, அத்து - சாரியை.

அந்தமி லாமறை யாயிரத் தாழ்ந்த வரும்பொருளைச்
செந்தமி ழாகத் திருத்தில னேனிலத் தேவர்களுந்
தந்தம்வி ழாவு மழகுமென் னாந்தமி ழார்கவியின்
பந்தம்வி ழாவொழுகுங் குருகூர்வந்த பண்ணவனே.

உரை :--ஆர் - சுவை நிரம்பிய, தமிழ்கவியின் - தமிழ்ப்பாடல்கள் போல, பந்தம் - கிரமமாக, விழா - உற்சவங்கள், ஒழுகும் - நடந்தேறி வருகின்ற, குருகூர் - குருகூர்ப்பதியில், வந்த - அவதரித்த, பண்ணவன் - சிறந்தவரான சடகோபர், அந்தம் இலா - முடிவில்லாத, மறை ஆயிரத்து - ஸாமவேதசாகை ஆயிரத்திலும், ஆழ்ந்த - மறைந்திருக்கிற, அரும்பொருளை - அருமையாகிய விஷயத்தை, செம்தமிழாக - செவ்விய தமிழ்ப்பாடலாக, திருத்திலனேல் - திருத்தமமையப்பாடியருளாவிட்டால், நிலம்தேவர்களும் - பூசுரராகிய பிராமணர்களும், தம்தம் - அவரவர்கள் கொண்டாடப்படுகிற, விழாவும் - உற்சவங்களும், அழகும் - அவர்களுள் அமைதியும், என்னும் - எத்தன்மையவாய் முடியும்? (எ-று.)

குருகூராழ்வார் வேதத்தைத் திருவாய்மொழியாக வெளிப்படுத்தாவிட்டால் பிராமணர்களும், அவர்கள் வேள்விமுதலிய விழாக்களும் அழகும் என்ன பயன்படுமென்பதாம். "பரத்துவாஜோ அத்திரி" என்ற வாக்கியத்தின்படி பரத்துவாச முனிக்கு இந்திரன் வேதமாகிய நான்கு மலைகளைக்காட்டி அவற்றில் ஒவ்வொருபிடியெடுத்துக் கொடுத்தவையே வேதமாக வழங்கப்படுவன என்றிருத்தலால் அந்தமிலா மறையென்றார். ஆழ்ந்தஅரும்பொருளாவது-நாராயணனுக்கேபரத்வங்கூறுதல். இம்மொழியின் சுவையேற்றம் நோக்கிச் செந்தமிழென்றார். ஆகாயத்தில் தேவர்களைப்போலப் பூமியில் பெருஞ்சிறப்புடைமையால் அந்தணர் நிலத்தேவரென்ற பெயர்பெற்றார்; பூசுரரென்பதன் பொருளுமிதுவே. சுவை நிரம்பிய தமிழ்க்கவிகள் படிக்கப்படிக்க இன்பந்தருதலால் பார்க்குந்தோறு மகிழ்ச்சிதருகின்ற விழாவினுக்குவமித்தார். (இதனால் ஆசிரியர்க்குள்ள இம்மொழியிடத்தன்பு விளங்குவதாயிற்று.) வைஷ்ணவமதத்தை நிலைநிறுத்தியவராதலிற் பண்ணவனென்றார்; பண்ணவன் - குரு. நிலத்தேவர்களென்னுமுயர்திணையோடு விழாவும் அழகுமென்னும் அஃறிணையைக்கூட்டி மிகுதிபற்றி அஃறிணைமுடிபாற் கூறினார். (௧௪)

பண்ணப் படுவன வும்முள வோமறை யென்றுபல்லோ
ரெண்ணப் படச்சொற் றிகழச்செய் தானிய லோடிசையின்
வண்ணப் படைக்குத் தனித்தலை வேந்தன் மலருகுத்த
சுண்ணப் படர்படப் பைக்குரு கூர்வந்த சொற்கடலே.

உரை :—இயலோடு - இயற்றமிழோடு, இசையின் - இசைத்தமிழு மாகிய, வண்ணம் - அழகிய, படைக்கு - சேனைக்கு, தனி - ஒப்பற்ற, தலைவேந்தன் - தலைமைவாய்ந்த அரசரும், மலர் உகுத்த - பூக்களிலிருந்து உதிர்க்கப்பட்ட, சுண்ணம் - மகரந்தங்கள், படர் - பரவிய, படப்பை - நீர்நாடாகிய, குருகூர் வந்த - குருகூரிலவதரித்த, சொல் கடல் - தமிழ்ச்சொற்கடல் போல்பவருமாகிய பராங்குசர், மறை-வேதங்கள், பண்ணப்படுவனவும் - இனிப்புதியனவாகச் செய்யப்படுபவைகளும், உளவோ என்று - இருக்கின்றனவோவென்று, பல்லோர் - பலவகைப்பட்டவர்களும், எண்ணம் பட - தங்கள் மனத்தில் நினைக்கும்படியாக, சொல் - சொற்கள், திகழ - விளங்குமாறு, செய்தான் - பாடியருளினார் ; (எ - று.)

குருகூரிலவதரித்த சொற்கடலாகிய நம்மாழ்வார் வேதங்களினிச் செய்யப்படுவனவும் முளவோவென்று கூறும்படி திருவாய் மொழியைப் பாடியருளினாரென்பதாம். வேதத்திற் கூறப்படும் பொருள் நிலைமையினும் மேலானபொருளை வெளிப்படுத்தலால் பண்ணப்படுவனவும் முளவோமறையென்றார் ; இதனை "மிக்க விறைநிலையு மெய்யா முயிர் நிலையுந், தக்கநெறியுந் தடையாகித் - தொக்கியலும், ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன். யாழினிசை வேதத் தியல்" என்பதனாலுமறிக. கடல் - உவமையாகு பெயர். (கரு)

கடலைக் கலக்கி யமுதம ரர்க்களித் தான்களித்தார்
குடலைக் கலக்குங் குளிர்சங்கி னான்குறை யாமறையின்
றிடலைக் கலக்கித் திருவாய் மொழியெனுந் தேனைத்தந்தா
னடலைப் பிறப்பறுத் தென்னையு மாட்கொண்ட நாயகனே.

உரை :— களித்தார் - கட்குடியராகிய அசுரர்களுடைய, குடலை கலக்கும் - குடர்களெல்லாங்கலங்கச்செய்கின்ற, குளிர்சங்கினான் - குளிர்ச்சிபொருந்தியசங்கத்தையுடைய மாயோனானவன், கடலைக்கலக்கி- சமுத்திரத்தைக்கடைந்து, அமுது - அதிலுண்டாகிய அமிருதத்தை, அமரர்க்கு - தேவர்களுக்கு, அளித்தான் - கொடுத்தருளினான் ; (அப்படிப்போல) நடலை - வஞ்சனையாகிய, பிறப்பு அறுத்து - பிறவியைப்போக்கி, என்னையும்——, ஆட்கொண்ட - அடிமையாகக்கொண்டருளிய, நாயகன் - நம்மாழ்வாரானவர், குறையா - குறைவில்லாத, மறையின் - வேதங்களின், திடலைக்கலக்கி - பெரியதிடலாகிய முட்டுக்களையிடித்தெறிந்து, திருவாய்மொழியெனும் - திருவாய்மொழியென்று சொல்லப்படுகிற, தேனை——, தந்தான்-தந்தருளினார் ; (எ - று.)

மாயோன் சமுத்திரத்தைக்கடைந்து தேவர்களுக்கு அமிருதங் கொடுத்தருளினான் ; அப்படிப்போல நம்மாழ்வார் வேதங்களின் முட்டுப் பாடுகளைப் பெயர்த்தெடுத்துத் திருவாய்மொழிபாடி அடியார்களுக்குக் கொடுத்தருளினாரென்பதாம். தவத்தால் நீங்குவதுபோலத்தோற்றி

நீண்டும்பற்றிக்கொள்ளுதலால் நடலைப்பிறப்பென்றார். தமிழில் ஒப்பாருமிக்காருமில்லாச்சிறப்புடைமைபால் நாயகனென்றார். அடியவர்க்கு மகிழ்ச்சிசெய்தலால் குளிர்சங்கென்றார். பரத்துவாசனுக்கு இந்திரன் நான்குவேதமலைகளைக்காட்டி அவற்றில் ஒவ்வொருபிடியெடுத்துக்கொடுத்து உலகத்தில்பரவச்செய்த பெருமையால் குறையாமறையென்றார். கடலை வேதமாகவும் அமுதத்தைத் தேனாகவும் அமரர் அடியராகவும் சங்கினை நாயகனாகவும் உவமித்தமைகாண்க. இது எடுத்துக்காட்டுவமையணி. என்னையும், உம் - இழிவு சிறப்பு. (கசு)

நாய்போற் பிறர்கடை தோறு நுழைந்தவ ரெச்சினச்சிப்
பேய்போற் றிரியும் பிறவியி னேனைப் பிறவியெனு
நோய்போ மருந்தென்னு நுன்றிரு வாய்மொழி நோக்குவித்துத்
தாய்போ லுதவிசெய் தாய்க்கடி யேன்பண்டென் சாதித்ததே.

உரை :—பிறர் கடை தோறும் - அயலார் வாயில்கள்தோறும், நாய்போல் நுழைந்து - நாயைப்போல உள்ளேபுகுந்து, அவர் எச்சில் - அவர்களுடைய எச்சிலை, நச்சி - விரும்பி, பேய்போல் - பிசாசைப்போல, திரியும் - அலைகின்ற, பிறவியினேனை - பிறப்புடையவனாகிய என்னை, பிறவி எனும் - பிறப்பென்கிற, நோய் - பிணிகள், போம் மருந்து என்னும் - போகத்தக்க மருந்தென்று சொல்லப்படுகிற, நுன - உமது, திருவாய்மொழி - திருவாய்மொழிப் பிரபந்தத்தை, நோக்குவித்து - யான்பார்க்கும்படி கருணைசெய்து, தாய்போல் - பெற்றதாயைப்போல, உதவிசெய்தாய்க்கு - உபகாரஞ்செய்த உமக்கு, அடியேன் - தொண்டனாகிய நான், பண்டு - முன்னாளில், என்சாதித்தது - என்ன உபகாரம் செய்ததுண்டு? (எ - று.)

நாய்போல நுழைந்து பேய்போலத் திரியுமென்பா லன்புகூர்ந்து நுமது திருவாய்மொழியைப் பார்த்துப் பிறப்பறுக்கும்படி உதவி செய்த உமக்கு யான் முன்செய்த நன்றிதான் யாதோ? என்றதாம்.

தம் தாழ்ச்சியைக்குறித்துக் கடைப்பட்ட நாயை உவமித்தார். ஓயாமல் பிறந்து உழலுதலால் மாறாமல் அலைகின்ற பேயை உவமித்தார். எச்சில் - எஞ்சியது; மிச்சமானதென்பதாம்: எஞ்சு பகுதி, இல் - பெயர்விகுதி. நோய்போம் மருந்து என்பதில் போம் என்ற காரியப்பொருளாகிய பெயரெச்சம் மருந்து என்னும் காரணப்பெயரைக்கொண்டது. நுன் - பெயர்த்திரிசொல். (கஎ)

சாதிக்கு மேபர தத்துவத் தைச்சம யத்திருக்கைச்
சேதிக்கு மேயொன்று சிந்திக்கு மேயத னைத்தெரியப் [ச்
போதிக்கு மேயெங்கு மோங்கிப்பொ துநிற்கு மெய்ம்மையைப் பொய்ம்மை
சோதிக்கு மேயுங்கள் வேதமெங் கோன்றமிழ்ச் சொல்லெனவே.

உரை ;—எம் கோன் - எங்கள் தலைவராகிய நம்மாழ்வாரது, தமிழ் சொல் என - தமிழ்ப்பிரபந்தம்போல, உங்கள்வேதம் - உங்களுடைய வேதங்களெல்லாம், பரதத்துவத்தை - மேலான கடவுளின் நிலைமை இன்னதென்பதை, சாதிக்குமே - உறுதிப்படுத்துமோ? சமயம் திருக்கை - அன்னிய மதங்களின் மாறுபாடுகளை, சேதிக்குமே - அழிக்குமோ? ஒன்று சிந்திக்குமே - ஒரு பொருளை ஆராய்ந்தறியுமோ? (அப்

படி அறிந்தாலும்), அதனை - அறிந்த அவ்விஷயத்தை, தெரிய போதிக்குமே - பிறர்க்குத் தெரியும்படி உணர்த்துமோ? எங்கும் ஓங்கி - எவ்விடத்திலும் சிறப்படைந்து, பொதுநிற்கும் - பொதுவாய் நிற்கின்ற, மெய்யை - சத்தியத்தையும், பொய்யை - அதற்கு மாறான அசத்தியத்தையும், சோதிக்குமே - ஆராய்ந்தறியுமோ? (எ - று.)

நம்மாழ்வார் பிரபந்தம்போல உங்கள் வேதம் பரம்பொருள் நிலையை நிறுத்திக்காட்டுமோ? புறமதங்களின் மாறுபாட்டை அழிக்குமோ? ஒன்றை ஆராய்ந்தறியுமோ? தெரிந்தாலும் பிறர்க்குச் சொல்ல முடியுமோ? மெய்யையும் பொய்யையும் பகுத்தறியுமோ? இவையொன்றும் செய்ய இயலாவென்பதாம். எல்லார்க்கும் மேலானவரென்பது பற்றிக்கோன் என்றார். உங்கள் என்றது புறமதத்தவரை என்க. வேதம் ஆங்காங்கு எல்லாக்கடவுளருக்கும் படிப்படியாகப் பரத்துவஞ் சொல்லுதலால் திருவாய்மொழிபோல ஒரேகடவுளைக் குறிக்காமை பற்றிச் சாதிக்குமோவென்று எதிர்மறையாகக் கூறினாரெனினுமாம். இப்பாடல்களிலுள்ள ஏகாரங்களெல்லாம் வினாவாகக் கூறியிருப்பினும் எதிர்மறைப்பொருள் படுதல் காண்க. (கஅ)

சொல்லென்கே னேமுழு வேதச் சுருக்கென்கே னெவர்க்கு
நெல்லென்கே னுண்ணு நீரென்கே னேமறை நேர்நிறுக்குங்
கல்லென்கே னேமுதிர் ஞானக் கனியென்கே னேபுகல
வல்லென்கே னேகுரு கூரெம்பிரான் சொன்ன மாலையையே.

உரை:—குருகூர் - திருக்குருகூரிலுள்ள, எம்பிரான் - நம்மாழ்வார், சொன்ன - அருளிச்செய்த, மாலையை - பாடலாகிய மாலையை, சொல் என்கேனே - இயல்பாகிய தமிழ்ச்சொல்லென்பேனே? முழு வேதம் - எல்லாவேதத்திலுமுள்ள, சுருக்கு என்கேனே - சுருக்கமான சாரமென்பேனே? எவர்க்கும் - யாவருக்கும், நெல் என்கேனே - உணவுப்பொருளாகிய நெல்லென்பேனே? உண்ணும் - பருகுகின்ற, நீர் என்கேனே - நீரென்பேனே? மறை - வேதங்களை, நேர் நிறுக்கும் - நேரே தராசில் நிறுத்துப்பார்ப்பதற்குரிய, கல் என்கேனே - படிக்கல்லென்று சொல்லுவேனே? ஞானம் முதிர் - ஞானமாகிய சுவை முற்றிய, கனி என்கேனே - பழமென்பனே? புகலவல் என்கேனே - பலவிதமாகச் சொல்லுவதற்கு எனக்கு வலிமையுண்டென்பேனே.

குருகூர் நம்மாழ்வார் பாடல்களைத் தமிழ்ச்சொல்லென்பேனே? வேதசாரமென்பேனே? உணவுப்பொருளென்பேனே? நீரென்பேனே? படிக்கல்லென்பேனே? பழமென்பேனே? பலவிதமாகச் சொல்ல வல்லமையுண்டென்பேனே? என்னசொல்லுவேனென்பதாம். ஒன்றோடொன்று அந்தாதியான தொடர்புடைமையால் மாலையென்றார். இது தமிழ்ச்சொல்லென்பார்க்கு இதுவே வேதச்சுவையைத்திரட்டிச் சுருக்கிவைத்திருத்தலால் சொல்லென்பனே சுருக்கென்பனே என்று ஐயத்தாற் கூறினர். திருவாய்மொழியின் பொருளாலுலகு நன்மை பெறுவதை நோக்கி உள்ளரிசியாலுலகு பிழைத்தற்குரிய நெல்லையுவமித்தார் எனைய வெளிப்படை. (கக)

*மாலைக் குழலியும் வில்லியு மாறனை வாழ்த்தலர்போம்*
*பாலைக் கடம்பக லேகடந் தேகிப் பணைமருதத்*
*தாலைக் கரும்பி னரேலென்னு மோசையை யஞ்சியம்பொற்*
*சாலைக் கிளியுறங் காத்திரு நாட்டிடஞ் சார்வர்களே.*

பொருள்—அகப்பொருள்.
திணை—பாலை.
கிளவி—கற்பொடு புணர்ந்த கௌவை.
துறை—கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்.

உரை:—மாலை - பூமாலையணிந்த, குழலியும் - கூந்தலையுடைய உன் மகளும், வில்லியும் - கையில் வில்லையுடைய அவள் தலைவனும், மாறனை - நம்மாழ்வாரை, வாழ்த்தலர் - துதியாதவர்கள், போம் - செல்லத்தகுந்த, பாலை கடம் - பாலைநிலத்துவழியை, பகலே கடந்து ஏகி - இன்றைப் பகலிலேயே தாண்டிச் சென்று, மருதத்துப்பணை - மருத நிலத்துவயல்களில், கரும்பின் ஆலை - விளைந்துள்ள கரும்புகளை ஆட்டுகிற ஆலைகளில், நரேல் என்னும் ஓசையை - நரேலென்று ஒலிக்கிற ஒலியைக்கேட்டு, அம்பொன்சாலை - அழகிய பொலிவுபெற்ற வீடுகளில் வளர்க்கிற, கிளி - கிளிகள், அஞ்சி - பயந்து, உறங்கா - தூங்காத, திருநாட்டு இடம் - சிறந்த தமது நாட்டினிடத்தை, சார்வர்கள் - அடைவார்கள் ; (எ - று.)

உன் புதல்வியும் அவள் கணவனும் நம்மாழ்வாரைத் துதியாதவர் போகின்ற கொடும்பாலைவழியைத் தாண்டி இனித் தமது நாட்டையடைவார்களென்பதாம். செவிலியைத் தேற்றுபவராதலின் அவள் வருத்தமின்றிச் சென்றாளென்பது தோன்ற மாலைக்குழலியென்றார் ; எனவே இடைவெயிலில் தலைவியும் தலைவனும் "உவந்து அலர்சூட்டி உள்மகிழ்ந்து இருந்து" புறப்பட்டபிறகு இவர்கள் கண்டாரென்றறிக. எதிர்த்துவந்த சிங்கத்தைக்கொன்று அவளுக்குஅச்சமுண்டாகாதபடி வில்லின் நாணேற்றிக்கையிலேந்திச் செல்கின்றமையால்வில்லியென்றார்.

களவித்தலைவன் பெயர் கூறாமையால் அகப் பொருளாயிற்று. "போக்கெல்லாம் பாலை" ஆதலால் திணை - பாலை. தலைவி கற்புநிலை தவறாமல் ஒருவனைக் கைக்கொண்டபடியே சென்றதாலெழுந்த பழிச்சொல்லாதலால் கற்பொடு புணர்ந்த கௌவையாயிற்று. தேடிச் சென்ற செவிலியை எதிர்வந்தோர் கூறித்தேற்றுதல் துறைக்கருத்து. கைகோள் - களவு. கூற்று - கண்டோர்கூற்று. கேட்போர் - செவிலி. இடம் - முன்னிலை. காலம் - நிகழ்காலம். மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - செவிலியை மீளவுரைத்தல். ஆதலால் நீமீள்வாயாக என்ற சொல் எஞ்சிநின்றது. (உ0)

*சாரற் குறிஞ்சி தழுவும் பொழிற்றளிர் மெல்லடித்தண்*
*மூரற் குறிஞ்சி நகைமுக நோக்கற்கு நீமுடுகுஞ்*
*சூரற் குறிஞ்சி நெறிநினை தோறுந் துணுக்கெனுமால்*
*வாரற் குருகைப் பிரான்றிரு வாணை மலையவனே.*

பொருள்—அது. திணை—குறிஞ்சி.
கிளவி—வரைவுகடாதல்.
துறை—நெறியருமை கூறி வரவு விலக்கல்.

உரை :—குருகைப்பிரான் - குருகூர் நம்மாழ்வாரது, திருஆணை - சிறந்த ஆக்கினை (கட்டளை) கொண்டுள்ள, மலையவனே - பொதியில் மலையிலிருக்கிற தலைவனே! சாரல்-மலைச்சார்பாகிய, குறிஞ்சி தழுவும் - குறிஞ்சிநிலந் தழுவப்பட்ட, பொழில் - சோலையிலே, தளிர்மெல் அடி - தளிர்போன்ற மெல்லிய அடிகளையும், தண் - குளிர்ந்த, குறிஞ்சிமூரல் நகை- குறிஞ்சியரும்புபோன்ற பற்களையுமுடைய தலைவியினது, முகம் நோக்கற்கு-முகத்தைப்பார்ப்பதற்கு, நீ——, முடுகும்-விரைந்துவருகிற, சூரல் - பிரப்பங்காடுகள் நெருங்கிய, குறிஞ்சிநெறி - மலைவழியை, நினைதோறும் - நினைக்கும்பொழுதெல்லாம், துணுக்கெனும் ஆல் - அவள் துணுக்கென்று நடுங்குவளாதலால், வாரல் - நீ வாராது நீங்குவாய்.

நம்மாழ்வார் ஆக்கினையைச் சிரத்தில் வகிக்கும் பொதியிலின் தலைவனே! சோலையில் தலைவியானவள் அவள் முகத்தைப்பார்த்து மகிழ்தலுக்கு நீ விரைந்துவருகிற மலைவழியை நினைக்குந்தோறும் துணுக்கென்று நடுங்குவளாதலால் நீ வாராதொழிவாய்; என்பதாம். எனவே தலைவன் ஆற்ருனாயினன்; பின்பு ஒருவழியாக ஆற்றுவானும்; எப்படியோவெனில், "பிரான்றிருவாணையை உடையவனே" என்றமையால் அவ்வாணையை உடையார்க்கு ஊறுபாடுகள் வாராவென்று தோழி அறிந்திருந்தும் என்னை வரவேண்டாமென்று கூறியது வேறொன்றினை நினைத்தன்றே? அது தானும் நான் அவளை மணஞ்செய்து கொள்ள வேண்டியே என்று மனவுறுதிகொண்டு மறுநாள் மணஞ் செய்யப் புகுவானும். இங்ஙனம் கூறுதல் தலைவனை நன்கு மதியாமை யான வழுவாயினும் இருவரும் மணஞ்செய்துகொள்ளவேண்டிக் கூறும் அன்பின் மிகுதியால் வழுவமைதியாயிற்று. இப்படியன்றித் தலைவனை வாரவேண்டாமென்று பிரான்மேல் ஆணையிட்டுமறித்தாளென்று உரைப்பின் ஆணையிட்டுமறித்ததனால் தலைவன் வாராதேயொழியவும் அதனால் தலைவி யிறந்துபடவுஞ் செய்தவளாம். அங்ஙனஞ் செய்யவே "நாணவு நடுங்கவு நாடாள் தோழி" என்னுஞ் சூத்திரத்துக்கு விரோதமாம்; ஆதலால் இவ்விஷயங்களை கல்வியறிவுடையோர் ஆய்ந்தறிவாராக.

தளிர்மெல்லடித்தண்மூரற் குறிஞ்சிநகை - அன்மொழித் தொகை பன்மொழித்தொடர். குறிஞ்சி மூரல், மூரல்-அரும்புக்கு உவமையாகு பெயர். "முல்லை, யாழ்கடற்றானைவேந்தே! அணியெயிறீன்றதன்றே" என்ற சிந்தாமணிச் செய்யுளுரையை நோக்குக. துணுக்கெனல் - அச்சக்குறிப்பு. கைகோள் - களவு. கூற்று - தோழிகூற்று. கேட்போன் - தலைவன். இடம் - முன்னிலை. காலம் - எதிர்காலம். மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன் - வரைவுகடாதல். (உக)

மலையார முங்கட லாரமும் பன்மா மணிகுயின்ற
விலையார மும்விர வுந்திரு நாடனை வேலைசுட்ட
சிலையா ரமுதி னடிச்சட கோபனைச் சென்றிறைஞ்சுந்
தலையா ரெவரவ ரேயெம்மை யாளுந் தபோதனரே.

உரை :—மலை - பொதியில் மலையிலுள்ள, ஆரமும் - சந்தனமரமும், கடல் ஆரமும் - கடலிலுள்ள முத்துக்களும், பல் மா மணி குயின்ற - பலவாகிய சிறந்த இரத்தினங்களிழைத்த, விலை ஆரமும் - விலைபெற்ற மாலைகளும், விரவும் - பொருந்தியிருக்கிற, திருநாடனை - சிறந்த பாண்டிநாட்டிலுள்ளவராகிய, வேலை - சமுத்திரத்தை, சுட்ட சிலை - அம்புவிட்

டெரித்த கோதண்டமென்னும் வில்லையுடைய, ஆர் - அரிய, அமுதின் - அருமருந்தன்ன இராமபிரானுடைய, அடி - திருவடிகளில் பற்றுள்ள, சடகோபனை - நம்மாழ்வாரை, சென்று இறைஞ்சும் - போய் வணங்குகின்ற, தலையார் - தலையையுடையவர், எவர் - யாவரோ, அவரே ——; எம்மை - எங்களை, ஆளும் - ஆண்டுகொள்ளுகின்ற, தபோதனர் - தவமாகிய செல்வத்தையுடையவராவர்; (எ - று.)

மூவகை ஆரங்களும் பொருந்திய பாண்டிநாட்டிலுள்ளவரும் இராமபிரானடித்தொண்டருமாகிய நம்மாழ்வாரை வணங்குபவர் யாவரோ அவரே எங்களுக்குத் தலைவராவாரென்பதாம். விலையாரம் இந்திரன் கொடுத்த மாலையுமுடைய பாண்டிநாடென்றுரைக்கலுமொன்று; அதற்கு "கோவா மலையாரங் கோத்த கடலாரம், தேவர்கோன் பொன்னாரம் தென்னர்கோன் மார்பினவே" என்ற சிலப்பதிகாரத்தையும் நோக்குக. இராமாமிருதமென்னும் பெயருடைமையால் அமுதென்றார்; அன்றி மனத்திற் கொண்டாரை நிலைபெறவாழ்வித்தலாற் கூறினாரென்றலுமாம். வேலைசுட்டது:—இராமாவதாரத்தில் இராமபிரான் தென் கடலருகுவந்து இலங்கைக்குச் செல்ல வழிவேண்டி வருணனை அழைத்தலும் அவன் வாராமையால் சினங்கொண்டு அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்துக் கடலை வற்றச்சுட்டு வருணன் வந்து அடைக்கலம் புகக் காத்தருளினானென்பதாம். அமுது - உவமையாகுபெயர். குயின்ற, குயில் - பகுதி. அவரே, ஏ - பிரிநிலை. (உஉ)

போந்தே றுகவென் றிமையோர் புகலினும் பூந்தொழுவின்
வேந்தே றடர்த்தவன் வீடே பெறினு மெழிற்குருகூர்
நாந்தே றியவறி வன்றிரு வாய்மொழி நாளுநல்குந்
தீந்தேற லுண்டுழ லுஞ்சித்தி யேவந்து சித்திக்குமே.

உரை:—போந்து - எங்கள் விமானத்தில்வந்து, ஏறுக என்று - ஏறிக்கொள்ளுகவென்று, இமையோர் - தேவர்கள், புகலினும் - சொன்னாலும், பூ - அழகிய, தொழுவின் - கொட்டிலினிடத்துள்ள, வேந்து - தலைமைபெற்ற, ஏறு - எழுகாளைமாடுகளை, அடர்த்தவன் - அடக்கிய கண்ணபிரானது, வீடே பெறினும் - பரமபதத்தையடையப் பெற்றாலும், எழில் குருகூர் - அழகிய குருகூர்ப்பதியில், நாம்தேறிய - நாங்கள் தெளிவடையச்செய்த, அறிவன் - பேரறிவாளராகிய நம்மாழ்வாரருளிச்செய்த, திருவாய்மொழி ——, நாளும் - தினமும், நல்கும் - கொடுக்கின்ற, தீம் தேறல் - இனிய தேன்போன்ற சுவையை, உண்டு உழலும் - பருகிஉலாவுகின்ற, சித்தியே - ஒப்பற்றபயனே, வந்து ——, சித்திக்கும் - நான் பெறும்படி எனக்குக் கைகூடாநிற்கும்; (எ - று.)

என்னைத் தேவர்வந்தழைத்தாலும் நான் பரமபதமடைந்தாலும் குருகூர் நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழியின் இனிய சுவையை உண்டு மகிழுஞ்சித்தியே எனக்குக் கைகூடியிருக்கும் என்பதாம். இது அப்பிரபந்தத்தின் சுவைமிகுதியைத் துதித்தவாறு. ஆராயுங்காலத்திலே தெளிவடைந்த மகிழ்ச்சியால் நாம் என்று தன்மைப்பன்மையாற் கூறினார். படிக்குந்தோறுஞ் சுவைதருதலால் நாளும் நல்குமென்றார். ஏனைய பயன்போலாகாமல் மேம்பட்டமையால் சித்தியென்றார். ஏறு - விலங்கின் ஆண்பாற் பெயர்; இங்குக்காளைக்காயிற்று. வீடே, ஏ - தேற்றம். தேறல் - கள்ளின்தெளிவுமாம்; அதற்கேற்ப உண்டு உழலுமென்ற

தனால் இது ஏகதேசவுருவகவணி. கண்ணன் எருடர்த்தது:—நப்பின்னைப்பிராட்டியாரை மணஞ்செய்விக்கவேண்டி அவள் தந்தையானவன் ஆசுரவிவாகமாக நியமித்துத் தன்தொழுவிலுள்ள கொழுத்த எருதுகளைப் பிடித்தடக்கட்டுபவனுக்கு என் மகளைக் கொடுப்பேனென்றதை யறிந்த கண்ணபிரான் அங்ஙனமே அவற்றையடக்கி அவளை மணம்புரிந்துகொண்டானென்பதாம். (உ௩)

சித்தர்க்கும் வேதச் சிரந்தெரிந் தோர்கட்குஞ் செய்தவர்க்குஞ்
சுத்தர்க்கு மற்றைத் துறைதுறந் தோர்கட்குந் தொண்டுசெய்யு
பத்தர்க்கு ஞானப் பகவர்க்கு மேயன்றிப் பண்டுசென்ற [ம்
முத்தர்க்கு மின்னமு தஞ்சட கோபன் மொழித்தொகையே.

உரை:—சடகோபன் - நம்மாழ்வார் பாடியருளிய, மொழித்தொகை - பாடல்களின் தொகுதியானது, சித்தர்க்கும் - எண்வகைச் சித்தியுடையவர்க்கும், வேதச்சிரம் - வேதத்தின் தலையாகிய வேதாந்தத்தை, தெரிந்தோர்கட்கும் - அறிந்தவர்களுக்கும், செய் தவர்க்கும் - தவத்தை செய்பவர்க்கும், சுத்தர்க்கும்-பரிசுத்தமுடையவர்க்கும், மற்றைத்துறை- வேறுமார்க்கங்களிலிருந்து, துறந்தோர்கட்கும் - எல்லாப்பற்றும்விட்ட துறவிகளுக்கும், தொண்டுசெய்யும் - கடவுளுக்கு அடிமைசெய்கின்ற, பத்தர்க்கும் - அடியார்களுக்கும், ஞானப்பகவர்க்குமே அன்றி - ஞான மிகுத்த பெரியோர்களுக்குமேயல்லாமல், பண்டு - முன்னாளில், சென்ற ——, முத்தர்க்கும் - முத்திபெற்றவர்களுக்கும், இன் அமுதம் - இனிய அமிருதமேயாம்; (எ - று.)

நம்மாழ்வார் பாடல்கள் சித்தர் முதலாகிய எல்லார்க்கும் இனிய அமிருதமாகவேயிருக்குமென்பதாம். சித்தி எட்டாவன:— அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. சுத்தர் - மனத்திற் பரிசுத்தமுடையவர். பகவர் - வீரம் கீர்த்தி வைராக்கியம் இவற்றில் மிக்கவர். முத்தியடைந்தவர் பரமபதத்தில் தேவராயிருந்து இதனைக்கேட்டு மகிழ்வாராதலில் அவர்க்கும் இன்னமுதமெனறார். வேதாந்தமான உபநிஷத்துக்களை ஆராய்பவர் அதனிலும் இதன் கருத்துத் தெளிவாய் விளங்குதலால் அவர்க்கும் அமுதென்றார். இதிலுள்ள உம்மைகள் எண்ணுப்பொருளன. பகவர்க்குமே, ஏ - பிரிநிலை. (உச)

தொகையுள வாய பனுவற்கெல் லாந்துறை தோறுந்தொட்டாற்
பகையுள வாமற்றும் பற்றுள வாம்பழ நான்மறையின்
வகையுள வாகிய வாதுள வாம்வந்த வந்திடத்தே
மிகையுள வாங்குரு கூரெம்பி ரான்றன் விழுத்தமிழ்க்கே.

உரை:—தொகை உள ஆய - சேர்க்கப்பட்டுள்ளனவாகிய, பனுவற்கு எல்லாம் - சாஸ்திரங்களிலெல்லாம், துறைதோறும் - ஒவ்வொரு பகுதிகள்தோறும், தொட்டால் - உற்றுநோக்கினால், பகை உளவாம் - ஒன்றற்கொன்று விரோதமுள்ளனவாம்; மற்றும் - மீட்டும், பற்றுளவாம்- தொடர்ச்சியுள்ளனவாகும்; பழ நால்மறையின் - பழமையாகிய நான்கு வேதங்களின், வகைஉளவாகிய - பகுதியுள்ளனவாகிய, வாதுஉளவாம் - விரோதங்களுமுள்ளனவாகும்; (அப்படியன்றி,) குருகூர் - திருக்குருகூரிலவதரித்த, எம்பிரான் தன் - எங்களிறைவனாகிய நம்மாழ்வாரு

டைய, விழு தமிழ்க்கு - சிறந்த தமிழ்ப்பாடல்களில், வந்த வந்த இடத்து - பார்த்தபார்த்தஇடங்களிலெல்லாம், ஏ - சிறந்த, மிகை உளவாம் - மேம்பாடுகள் உள்ளனவாகின்றன ; (எ - று.)

எல்லாச்சமயநூல்களிலும் உற்றுநோக்குமிடத்து ஒவ்வொன்றிலும் முன்னுக்குப்பின் விரோதமாகக்கூறுவனவுள்ளன ; அப்படியன்றிக் குருகூர் நம்மாழ்வார்பாடல்களில் பார்க்குமிடந்தோறும் சிறந்த மேம்பாடான பொருள்களமைந்துள்ளனவென்பதாம். நான்மறையின்வாது - வேதவிரோதம் ; அஃதாவது, வேதத்திற்கூறும்பொருளுக்கு விரோதமாகக்கூறுவது. வந்த இடம் - வந்திடம் ; பெயரெச்சவிகுதிதொக்கது. "ஏபெற்றுகும்" என்றதனால் ஏ என்னும் ஓரெழுத்தொருமொழி உரிச்சொல்லாயமைந்தவிடத்துப் பெருமையையுணர்த்தும். (உரு)

விழுப்பா ரினியெம்மை யார்பிற வித்துயர் மெய்யுறவந்
தழுப்பா தொழிமி னருவினை காளும்மை யப்புறத்தே
யிழுப்பா னொருவன்வந் தின்றுநின் றானிள நாகுசங்கந்
கொழுப்பாய் மருதஞ் சுலாங்குரு கூரெங் குலக்கொழுந்தே.

உரை :—அருவினைகாள் - நீங்குதற்கரியவினைகளே! இள நாகு சங்கம் - மிக்கஇளையசங்கங்களில், கொழு - உழுகின்றகொழுவானது, பாய் - பாயப்பெற்ற, மருதம்சுலாம் - மருதநிலங்கள்சூழ்ந்துள்ள, குருகூர் ———, எம் குலம் - எம்போல்வாராகிய தொண்டர் கூட்டங்களுக்கு, கொழுந்து - கொழுந்துபோல்வாராகிய, ஒருவன் - ஒப்பற்ற நம்மாழ்வார், உம்மை - உங்களை, அப்புறத்தே - எங்களிடத்தில் நெருங்கவொட்டாமல் அப்பால், இழுப்பான் - இழுத்தெறியவேண்டி, வந்து ———, இன்று - இப்பொழுது, நின்றான் - எம்உள்ளத்தில் எழுந்தருளியிருக்கின்றார் ; (ஆதலால்,) மெய்உறவந்து - மெய்யாகவே எங்களைக்கிட்டிவந்து, அழுப்பாது - அப்பாமல், ஒழிமின் - நீங்கிவிடுங்கள் ; இனி - இனிமேல், எம்மை - எங்களை, பிறவித்துயர் - பிறப்பாகியதுன்பத்தில், விழுப்பார் யார் - தள்ளுபவர்யாவர் இருக்கின்றார்கள் ? (எ - று.)

வினைகளே ! குருகூரிலவதரித்த ஒப்பற்ற நம்மாழ்வார் உங்களை நீக்கவேண்டி எம்முள்ளத்தெழுந்தருளியிருக்கின்றார். ஆதலால் கிட்ட நெருங்காதீர் ; இனி எம்மைப் பிறவியில்தள்ளுபவர் யாவர் இருக்கின்றார்கள் ? என்பதாம். ஆழ்வார் மனத்திலிருப்பதைக் காட்டி அச்சுறுத்தி வினைகளை யொழித்துவிட்டால் இனிப் பிறவியில் புகாதிருத்தல் நிச்சயமென்றுகொண்டு விழுப்பார்யாரென்றார். ஊர்ந்துவருகிற சங்குகளை உழுதுவருகிற கொழுவானது வயிற்றில்குத்தித்தள்ளுதல்போல, அடர்ந்துவரும்வினைகளை ஆழ்வார்கருணைசென்றழிக்குமென்பது தொகைமொழியின்கருத்து. இளநாகு - மீமிசைச்சொல். கொழுந்து உவமையாகுபெயர் "ஆயர்குலக்கொழுந்து" என்றார்பிறரும். கொழு - கலப்பைப்படைவாள்நுனியில்தைக்குமிரும்பு. (உசு)

கொழுந்தோடிலையுமுகையுமெல்லாங்கொய்யுங்கொய்ம்மகிழ்க்கி
விழுந்தோடுவெதொர்சருகும்பெறுள்விறன் மாறனென்று
லழுந்தோ டளரு மனமுருகுங்குரு கூரறையி
லெழுந்தோட வுங்கருத் துண்டுகெட் டேனிவ்விளங்கொடிக்கே.

பொருள்—அகப்புறப்பொருள்.
திணை—பெருந்திணை.

துறை—மாலை பெறாமல் வருந்தித் தலைமகள் ளேங்கிய தறிந்த பாங்கி புலம்பல்.

உரை:— கொழுந்தோடு - கொழுந்துகளும், இலையும், முகையும் - அரும்புகளும், எல்லாம் - மற்றுள்ள மலர்காய்களும், கொய்யும் கொய் மகிழ் கீழ் - மிகக் கொய்யும்படியாகிய மகிழமரத்தின் கீழ்ச் சென்று, விழுந்து ஓடுவது - அங்கேகாற்றால்விழுந்து ஓடுவதாகிய, ஓர் சருகும் பெறாள் - ஒருசருகேனும்பெற்றாளில்லை; விறல் - வலிமையுடைய, மாறன் என்றால் - நம்மாழ்வாரென்று அயலிற்கூறினால், அழும் - அழுகின்றனள்; தோள் தளரும் - தோள் தளர்ச்சியடைவாள்; மனம் உருகும் - மனம்கரைவாள்; குருகூர் அறையில் - குருகூரென்றுசொன்னால், எழுந்து ஓடவும் - தான்எழுந்து ஓடிச்சென்று அவ்வூரையடையவும், இ - இந்த, இளங்கொடிக்கு - இளமையானகொடிபோன்ற பெண்ணுக்கு, கருத்து உண்டு - நினைவுஉண்டாயிருக்கிறது; கெட்டேன் - நான்யாதுசெய்வன் கெட்டேன்! (எ - று.)

நம்மாழ்வாரைச்சேரவிரும்பிய இப்பெண் அவர்வருவதற்கு அடையாளமாக முன்னாடியே அவர்மகிழமாலையை வரவிடுக்காமையால் அம்மலரையாவது அணைத்துக்கொண்டு காமத்தைக்கழிக்கலாமென்று அம்மரத்தடியிற்சென்றாலோ எல்லாங்கொய்யக்கூடிய அதன்சருகும் பெற்றாளில்லை; அவர்பெயரைச்சொன்னால் அழுகின்றாள்; தளர்கின்றாள்; உருகுகின்றாள்; குருகூரென்றால் அவட்கு அங்கு ஓடவுங்கருத்துண்டு ஆஅ! கெட்டேன்! என்றாள்என்பதாம். காமத்திக்கு ஆற்றாளென்பது தோன்ற இளங்கொடியென்றார். இவள் இன்னுங்காமத்தால் மிகவருந்திப்புலம்புவள்போலுமென்பார் எல்லாங் கொய்யக்கூடிய மகிழின்சருகும் பெற்றாளில்லையென்றார். ஆற்றாமைமிகுதியினால் அழுமென்றார். அணைத்துமகிழ்வது தோளாதலால் அதுபெறாமை ஏதுவாகத்தோள் தளருமென்றார். மனத்தை அவர்பால் விடுத்தமையால் உருகுமென்றார். யாமிங்கிருத்தலாலெழுந்தோடவில்லை கருத்துமட்டுமுண்டென்றார். தோழியாற்செய்யுமுபசாரமனைத்துஞ் செய்தும் பயன்படாமையால் கெட்டேனென்றாள். தோழிசெய்யுமுபசாரமாவது மலரணையிலும் சந்திரகாந்தச்சிலையிலும் படுக்கச்செய்தல்; கொங்கைகளில் தளிர்களையும் சந்தனத்தையும் பிறவற்றையும் அப்புதல்; பன்னீர்தூவுதல் முதலியவாம். இது கிளவித்தலைவனது இயற்பெயரைக்கூறினமையால் அகப்பொருளாகாமல் அகப்புறப்பொருளாயிற்று. கையற்றுப்புலம்புதலால் கந்தருவத்தின் வழுவியபெருந்திணையாயிற்று. தலைவன்வருதற்கடையாளமாகமுன்னாடி மாலையைவரவிடுக்கவில்லையேயென்று வருந்திய தலைவியின் வருத்தங்கண்ட தோழிபுலம்பினாளென்பது துறையின்கருத்து. (உஎ)

கொடியெடுத்துக்கொண்டு நின்றேனினிக்கொடுங்கூற்றினுக்கோ
ரடியெடுத் துக்கொண்டென் பால்வர லாகுங்கொ லாரணத்தின்
படியெடுத் துக்கொண்ட மாறனென் றாற்பது மக்கரங்கண்
முடியெடுத் துக்கொண்ட வந்தணர்தாளென் முடியெனவே.

உரை:—ஆரணத்தின்படி-வேதத்தைப்போல, (நான்குபகுதியாக), எடுத்துக்கொண்ட - தமிழில் எடுத்துக்கொண்டு கூறிய, மாறன் என்

ரூல் - நம்மாழ்வார் என்று யார்சொன்னாலும், பதுமக்கரங்கள் - தாமரைப்பூப்போன்ற கைகளை, முடியெடுத்துக்கொண்ட - தலையில் அஞ்சலிசெய்துகொண்ட, அந்தணர் - எல்லாவுயிர்களிடத்தும் அன்புபொருந்திய மேலோர்களுடைய, தாள் - பாதங்கள், என்முடி என - எனது தலையிற் சூடப்படுவன வென்று, கொடி எடுத்துக்கொண்டு நின்றேன் - விருதுக்கொடி பிடித்துக்கொண்டு நிற்கின்றேன்; (ஆதலால்), இனி - இனிமேல், கொடுங்கூற்றினுக்கு - கொடிய யமனுக்கு, ஓர் அடி எடுத்துக்கொண்டு - ஒரு காலையெடுத்துக்கொண்டு, என்பால் வரல் ஆகும்கொல்-என்னிடத்தில் வருதல் கூடுமோ? [கூடாதென்பதாம்]; (எ-று.)

நம்மாழ்வாரென்று யார் கூறினும் அன்பினால் அஞ்சலிசெய்கின்ற கருணையாளர்களுடைய திருவடிகளே என்முடியிற் சூடுவனவென்று விருதாக யான் கொண்டிருக்கின்றமையால் கூற்றுவன் அஞ்சாமல் என்னிடத்து அடியெடுத்துவைக்கக்கூடுமோ? கூடாதென்பதாம்.

நான்கு பிரபந்தங்களைச் செய்தமையின் ஆரணத்தின்படி யென்றார். கரங்கள் முடியெடுத்துக்கொண்டவென்றது அன்பு மேலீட்டினால் என்க. அந்தணர் - அழகியதண்மையுடையார் என்றதே பொருத்தமுடைத்து. அந்தணர். வைஷ்ணவப்பிராமணரென்றால் குறைபாடு என்னையெனின் அதில் தோன்றிய சிலர் பொருளாசை மேலீட்டினால் பிறர் நூல் உரைமுதலியவற்றை இகழ்ந்துகூறி நாகமே குடியாகக்கொள்ளுதலால் முற்கூறிய அழகிய தண்மையுடையாரென்பதே உரையென்க.

என்முடி யாதெனக் கியாதே யரிய திராவணன்றன்
பொன்முடி யாற்கட றூர்த்தவில் லான்பொரு நைத்துறைவன்
றன்முடி யாலவன் றாளிணைக் கீழ்எப் பொருளுந் தழீஇச்
சொன்முடி யாலமு தக்கவி யாயிரஞ் சூட்டினனே.

உரை:—இராவணன் தன் - இராவணனுடைய, பொன் முடியால் - பொன்னாகிய கிரீடமணிந்த தலைகளைக்கொண்டு, கடல் தூர்த்த - சமுத்திரத்தைத் தூரச்செய்த, வில்லான் - கோதண்டமென்னும் வில்லையுடையவனாகிய, அவன் - அந்த இராமபிரானுடைய, இணை தாள் கீழ் - இரண்டு திருவடிகளிலும், பொருநை துறைவன் - தாமிரபருணியாற்றங்கரையி லவதரித்த நம்மாழ்வார், தன் முடியால் - தம்தலையால் வணங்கி, எ பொருளும் - எல்லாப்பொருள்களையும், தழீஇ - ஒரு சேரக்கொண்டு, சொல் முடியால் - சிறந்த சொற்களாலமைந்த, அமுதம் - அமிர்தம்போன்ற, ஆயிரம் கவி - ஆயிரம் பாடல்களை, சூட்டினன் - பாடிச்சேர்ப்பித்தனர்; (அவ்வாழ்வாரைத் துதிக்கின்ற), எனக்கு———, என் முடியாது - என்னகாரியமுடியமாட்டாது? யாதே அரியது - எது தான் அரியதாகும்? [எல்லாம் முடியும் அரிதொன்றுமில்லையென்பதாம்] (எ - று.)

இராவணனைக்கொன்ற இராமபிரான் திருவடிகளில் நம்மாழ்வார் ஆயிரம்பாடல் பாடிச்சூட்டினார்; அவரடியனாகிய எனக்கு முடியாதகாரியந்தான் யாது? அரியதுதான் யாது? [ஒன்றுமில்லை] என்பதாம். இராவணன் - இலங்கைக்கிறையவன்; ஸ்ரீ கைலாஸமலையைப் பெயர்த்து அதன்கீழ் அகப்பட்டுக்கொண்டு ஓயாமற் கதறினமையால் இப்பெயர்பெற்றனன்; இராவணம் - அழுகை. அவன் தன் தலைகள் வெட்டுண்டால் மீளமுளைக்கும்படி பிரமனிடத்தில் வரம்பெற்றான்.

பின்பு இராமபிரான் போரில் அவன் தலைகளைவெட்டிக் கடலிற் குவித்த னன்; வெட்ட வெட்ட முளைத்தமையால் மார்பிலோரம்பெய்து அவனைக்கொன்றனன். எப்பொருளும் - முதற்கடவுளாகிய மாயோன் நிலையும், அக்கடவுளையடையும் நெறியும், அடைதற்குரிய உயிர்களினிலையும், அடைதலாற்பெறும் பேறும் பிறவுமாம். எனக்கு - இடைநிலைத் தீவகம். தமிழ் இ - சொல்லிசையளபெடை. அமுதக்கவி - உவமத்தொகை.

சூட்டிற் குருகுறங் குங்குரு கூர்தொழு தேன்வழுதி
நாட்டிற் பிறந்தவர்க் காளுஞ்செய் தேனென்னை நல்வினையாங்
காட்டிற் புகுதவிட் டுய்யக்கொண் மாறன் கழல்பற்றிப்போய்
வீட்டிற் புகுதற்கு முண்டே குறைமறை மெய்யெனிலே.

உரை :—சூட்டில் - நெற்போரில், குருகு - நாரைமுதலிய பறவை, உறங்கும் - தூங்குகின்ற, குருகூர் - திருக்குருகூரையும், தொழுதேன் - வணங்கினேன்; வழுதிநாட்டில் - பாண்டிநாட்டில், பிறந்தவர்க்கு-பிறந்தவராகிய இறைவனிடத்தில் அன்புடையவருக்கு, ஆளும் செய்தேன் - அடிமையுமாயினேன்; (ஆதலால்), மறை - வேதமானது, மெய் எனில், உண்மையாயிருக்குமானால், என்னை-———, நல்வினை ஆம் காட்டில் - நல்ல தவஞ்செய்தலால் மேன்மையுற்ற காட்டில், புகுதவிட்டு ———, உய்யக்கொள் - பிழைக்கும்படி அருள்செய்கின்ற, மாறன் - நம்மாழ்வாருடைய, கழல் - பாதங்களை, பற்றி போய் - புணையாகக்கொண்டு சென்று, வீட்டில் புகுதற்கும் - மோட்சத்தை அடைதற்கும், குறை உண்டே - தடையுண்டோ? (இல்லையென்றதாம்;) (எ - று.)

யான் ஆழ்வார் அவதரித்த குருகூரை வணங்கினேன்; பாண்டி நாட்டிலுள்ள கடவுள்பாலன்புடையவர்களுக்கும் அடிமையாயினேன்; வேதம் உண்மையா யிருக்குமானால் நற்றவத்தில் என்னைவிட்டு ஆழ்வார் பாதங்களை புணையாகக்கொண்டு மோட்சத்திற்குச் செல்லத்தடையுண்டோ? என்பதாம். தாம் கவலையற்று மோட்சத்திற்சென்று வசிக்கலாமென்பதை யுள்ளடக்கிப் போரில் நாரை கவலையின்றி யுறங்குமென்று உவமையால் விளக்கினார். இங்ஙனமே நாடுகளைச் சிறப்பித்தல் பண்டை வழக்கு; "பொய்கை நாரை போர்விற் சேக்கும்" என்றார் ஐங்குறு நூற்றிலும். குருகுறங்குங் குருகூர் எனச்சொல் நயந்தோன்றக்கூறியது காண்க. வழுதி - கொடையுடையானுக்கும் பெயராதலால் வீடுவேண்டின் மறுமல் கொடுப்பாரென்று கொண்டு அப்பெயராற் கூறினார். ஆளும், புகுதற்கும் - உம்மைகள் இறந்தது தழுவிய எச்சப்பொருளன. உண்டே, ஏ. எதிர்மறை. (௩௰)

மெய்யுமெய் யாயது பொய்யும்பொய் யாயது வேறுபடுத்
துய்யுமெய் யாயவு பாயம்வந் துற்ற துறுவினையைக்
கொய்யுமெய் வாள்வல வன்குரு கைக்கர சன்புலமை
செய்யுமை யன்றனக் கேதனித் தாளன்பு செய்தபின்னே.

உரை :— உறுவினையை - மிக்கதீவினைகளை, கொய்யும் - வெட்டியழிக்கின்ற, மெய் - சத்தியமாகிய, வாள்வலவன் - வாள்யுத்தத்தில் வல்லவரும், குருகைக்கு - குருகூர்க்கு, அரசன் - இறைவரும், புலமைசெய்யும் - தம்மையடைந்தவர்களுக்கு உபதேசித்தருளுகின்ற, ஐயன் தனக்கே - தலைவருமாகிய நம்மாழ்வாருக்கே, தனி-ஒப்பற்ற, தாள்-திருவடி

களுக்கு, அன்பு செய்தபின் - நான் பக்தி செய்யத்தொடங்கிய பிற்பாடு, மெய்யும் - தத்துவப்பொருளெல்லாம், மெய் ஆயது - உண்மையாக விளங்கிற்று; பொய்யும் - பொய்ப்பொருளும், பொய் ஆயது - பொய்ப் பொருளென்று தோன்ற விளங்கிற்று; வேறுபடுத்து - இங்ஙனம் வேறு கப் பகுத்துக்காட்டி, உய்யும் - பிழைப்பதற்குரிய, மெய் ஆய - உண்மை யாகிய, உபாயம் - தந்திரமும், வந்து உற்றது - வந்து பொருந்திற்று.

யான் நம்மாழ்வாருக்குத் தொண்டுசெய்யத் தொடங்கியபின்பு தான் தத்துவஞானம் உண்மையாக வெளிப்பட்டது ; அஞ்ஞானமும் நீங்கிற்று ; இங்ஙனம் பகுத்தறிந்து பிழைத்தற்குரிய தந்திரமும் வந்து பொருந்திற்றென்பதாம். உண்மைநிலை தெரியாமல் அஞ்ஞானம் மூடப் பெற்றிருந்து பிறகு தெளிவடைந்ததனால் மெய்யும் மெய்யாயது என் றார். அது மெய்யாதலும் அதற்கு மறுதலையாகிய பொய்யும் பொய்யா கியதென்பதுதானே இயையினும் மகிழ்ச்சி மிகுதியால் அதனையும் உடன் கூறினார். பொய்ப்பொருள் - தாரபுத்திர தனாதி ஏஷணைத் திரயங்கள். பிழைத்தல் - பரமபதத்தைநாடும் வழி. கொய்தற்கேற்ப வினையைப் பகையென்றமையால் இது ஏகதேசவுருவகவணி. எல்லாரிலு மேலான வனாதலால் ஐயனென்றார். (௩௧)

செய்யன் கரிய னெனத்திரு மாலைத் தெரிந்துணர
வையங் கரியல்ல மாட்டா மறைமது ரக்குருகூ
ரையன் கவியல்ல வேற்பிற விக்கட லாழ்வதல்லா
லுய்யும் வகையொன் றும் யான்கண் டிலேனிவ் வுயிர்களுக்கே.

உரை :—திருமாலை - திருமகள்கணவனாகிய மாயோனை, செய்யன் (என) - சிவந்த நிறமுடையவனென்றும், கரியன் என - கரியநிறமுடை யவனென்றும், தெரிந்து உணர - ஆராய்ந்து தெரிந்துகொள்ளுதற்கு, வையம் - உலகத்துயிர்கள், கரி அலல - பொருந்திய சாட்சியாகமாட் டாவாம்; மறை - வேதங்களும், மாட்டா - அறியவல்லன அல்ல ; (ஆதலால்), மதுரம் - இனிமையாகிய, குருகூர் - திருக்குருகூரில் அவ தரித்தருளிய, ஐயன் - நம்மாழ்வாருடைய, கவி அல்லவேல் - பாடல் கள் அல்லாவிட்டால், பிறவிக்கடல் - பிறப்பாகியசமுத்திரத்தில், ஆழ் வது அல்லால் - அழுங்குவதுஅல்லாமல், இ உயிர்களுக்கு - இந்த உயிர் களுக்கு, உய்யும்வகை - ஈடேறும்வழி, ஒன்றும் - ஒன்றினையும், யான் - நான், கண்டிலேன் - பார்த்தேனில்லை ; (எ - று.)

மாயோன் சிவந்தவடிவனோ கறுத்தவடிவனோ வென்று அறிவதற்கு உலகத்தாராலுமில்லை ; வேதங்களாலுமில்லை ; ஆதலால் உயிர்கள் நம் மாழ்வார் பாடலில்லாவிட்டால் பிறவிக்கடலில் அழுந்துவதேயல் லாமல் அவ்வுயிர்கள் ஈடேறும் வழியை யான் பார்த்தேனில்லை என் பதாம். செய்யன், கரியன்— சிவப்போ கறுப்போ என்னும் உலக வழக்கை நோக்கிக் கூறியவாம். வையம்—இடவாகுபெயர். தமிழ்க் குருகூர் என்பார் - அதன் மறுபெயராகிய மதுரமென்னும் மொழியாற் கூறினார். எல்லாருக்கும் மேலாவான் என்பது பற்றி ஐயன் என் றார். ஒருநாளும் முடிவு பெறாமையும் கடத்தலருமையும் நோக்கிப் பிறவியைக் கடலென்றார். (௩௨)

உயிர்த்தாரை யிற்புக் குறுகுறும் பாமொரு மூன்றனையுஞ்
செயிர்த்தார் குருகைவந் தார்திரு வாய்மொழி செப்பலுற்றான்
மயிர்த்தாரை கள்பொடிக் குங்கண்க ணீர்மல்கு மாமறையு
ளயிர்த்தா ரயிர்த்த பொருள்வெளி யாமெங்க ளந்தணர்க்கே.

உரை:— உயிர்த்தாரையில் - உயிர்செல்லுகின்ற வழியிலே, புக்கு - சென்று, உறு - பொருந்துகின்ற, ஒரு - ஒப்பில்லாத, குறும்பு ஆம் மூன்றனையும் - காமம் வெகுளி மயக்கமாகிய முக்குற்றங்களையும், செயிர்த்தார் - கடிந்து விலக்கியவராகிய, குருகை வந்தார்-குருகூரில வதரித்த நம்மாழ்வாரது, திருவாய் மொழி - திருவாய்மொழியென்னும் பிரபந்தத்தினை, செப்பல் உற்றால் - சொல்லத்தொடங்கினால், எங்கள் அந்தணர்க்கு-தத்துவநூல் ஆராய்ச்சியுடைய எங்கள்பெரியோர்களுக்கு, மயிர்த் தாரைகள் பொடிக்கும் - சரீரத்திலுள்ள மயிரொழுங்குகளெல்லாம் சிலிர்க்கும்; கண்கள்-கண்களில், நீர் மல்கும் - ஆனந்தக்கண்ணீர் பெருகும்; மாமறையுள்-சிறந்தவேதத்தின் பொருள்களுள், அயிர்த்தார்-சந்தேகித்தவர்களுக்கு, அயிர்த்தபொருள் - சந்தேகித்த அர்த்தங்களெல்லாம், வெளி ஆம் - நன்றாகவிளங்கும்; (எ - று.)

முக்குற்றமும்போக்கிய குருகூர்நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியைச் சொல்லத்தொடங்கினால் அதனைக் கேட்கும் தத்துவ ஆராய்ச்சியுடையவர்களுக்கெல்லாம் மயிர் புளகிக்கும்; கண்ணீர் வடியும்; அன்றி வேதப்பொருளில் சந்தேகமுற்றவர்களுக்கு அந்தச் சந்தேகமும் நிவர்த்தியாகும் என்பதாம். என்றும் நீங்கா இயல்பினவாதலால் உயிர்த்தாரையிற் பொருந்திய முக்குறும்பென்றார். அவை தம்மையடையாதபடி இருந்தமையால் செயிர்த்தார் என்றார். மயிர் புளகித்தலும் கண்ணீர்விடுதலும் பக்தியினால் தோன்றிய புறமெய்ப்பாடு. வேதாந்தத்தில் பொருந்தியிருத்தலால் தத்துவ ஆராய்ச்சியுடையாரை அந்தணரென்றார். உபநிடதப்பொருளை அறிந்து மகிழ்பவர் அந்தணராதலால் அவ்வுபநிடதங்களிலும் இது சிறந்ததாகக்கண்டுமயிர்புளகிக்கும், கண்ணீர்மல்கும் என்றுரைப்பினும் அமையும். (௩௫)

அந்தணர்க் கோநல் லருந்தவர்க் கோவன்றி யோகியராய்
வந்தவர்க் கோமற வாதியர்க் கோமக ரக்குழைசேர்
சுந்தரத் தோளனுக் கோவவன் றொண்டர்கட் கோசுடர்தோய்
சந்தனச் சோலைக் குருகைப்பி ரான்வந்து சந்தித்ததே.

உரை:—சுடர்தோய் - சூரியனும் சந்திரனுமாகிய இரண்டுசுடர்களும் தவழப்பெற்ற, சந்தனம்சோலை - சந்தனமரச்சோலைகள் சூழ்ந்த, குருகை - திருக்குருகூரில், பிரான் - நம்மாழ்வார், வந்துசந்தித்தது - வந்துஅவதரித்ததானது, அந்தணர்க்கோ - பிராமணர்களுக்காகவோ, நல் அரும் தவர்க்கோ - நல்ல அரியதவத்தைச்செய்கின்றவர்களுக்காகவோ, அன்றி - அல்லாமல், யோகிராய் வந்தவர்க்கோ - யோகம் செய்பராகி அவதரித்தவர்களுக்காகவோ, மறவாதியர்க்கோ - மாறுபட்டசமயங்களிலிருந்து வாதஞ்செய்கிறவர்களுக்காகவோ, மகரம் குழைசேர் - காதிலணிந்த மகரகுண்டலந்தாழப்பெற்ற, சுந்தரம்தோளனுக்கோ - அழகியதோள்களையுடைய இறைவனுக்காகவோ, அவன்தொண்டர்கட்கோ-அவனுடைய அடியார்கட்காகவோ; (அறியோம்); (எ - று.)

குருகூரில் நம்மாழ்வார் அவதரித்தருளியது அந்தணர் முதலானவர்களுக்காகவோ என்பதாம். வேதக்கடலிற்புகுந்து நெறிதெரியாது மயங்காமல் அந்நெறியைத் தெரிவித்தலின் அந்தணர்க்கோ என்றார். முதற்கடவுளை யறியாது பிறதெய்வங்களைவிரும்பித் தவத்தில் உழல்வாரைத் தெளிவித்தலால் அருந்தவர்க்கோ என்றார். யோகத்தால் அரிதினறியும் உண்மைப்பொருளைத் திருவாய்மொழியைக்கொண்டு எளிதின் உணரச்செய்ததினால் யோகியராய்வந்தவர்க்கோ என்றார். புறமதங்களை அடக்குதலால் மறவர்தியர்க்கோ என்றார். மகரக்குழை - முதலைவடிவாகச் செய்தகாதணி. சந்தனச்சோலை மிகுந்தகுளிர்ச்சியுடைமையின் ஆழ்வார்பாடலும் அத்தன்மையது என்டதைக்குறிப்பாலுணர்த்தினமைகாண்க. ஓகாரங்கள் ஐயப்பொருளன. (௩௪)

சந்தியுஞ் சந்திப் பதமு மவைதம்மி லேதழைக்கும்
பந்தியும் பல்லலங் காரப் பொருளும் பயிலுகிற்பீர்
வந்தியும் வந்திப் பவரை வணங்கும் வகையறிவீர்
சிந்தியுந் தென்குரு கூர்தொழு தாட்செய்யுந் தேவரையே.

உரை :—சந்தியும் - பதப்புணர்ச்சியிலக்கணமும், சந்தி - அப்படிப் புணர்கின்ற, பதமும் - சொல்லிலக்கணமும், அவைதம்மில் - அந்தச் சொற்களால், தழைக்கும் - அடுக்கப்பட்டுப்பெருகுகின்ற, பந்தியும் - வரிசையான செய்யுளிலக்கணமும், பல் அலங்காரம் பொருளும் - பலவகைப்பட்ட அணியிலக்கணப்பகுதிகளும், பயிலுகிற்பீர் - கற்றறிகின்ற புலவர்களே! (இவற்றால் முத்திமார்க்கத்தையறியமாட்டீர்); தென்குருகூர் - அழகியதிருக்குருகூரை, சிந்தியும் - நினையுங்கள்; தேவரை - அதிலவதரித்தநம்மாழ்வாரை, தொழுது - கைகுவித்து, ஆள் செய்யும் - அவருக்கு அடிமைசெய்யுங்கள்; வந்தியும் - நமஸ்கரியுங்கள்; வந்திப்பவரை - அப்படிவணங்குபவரையாவது, வணங்கும் - நீங்கள்வணங்குங்கள்; வகை - முத்திமார்க்கத்தை, அறிவீர் - அறிந்துகொள்ளுவீர்கள்.

பஞ்சலக்ஷணங்களும் படித்துழலுகின்ற புலவர்களே! அவ்விலக்கணங்களால் முத்திமார்க்கமறியமாட்டீர்: குருகூரை மனத்தில்நினையுங்கள்; நம்மாழ்வாரை அஞ்சலிசெய்து அவர்க்கு அடிமையாகுங்கள்; வணங்குங்கள்; வணங்குபவரை வணங்குங்கள்; நீங்கள் முத்திமார்க்கம் அறிவீர்களென்பதாம். அலங்காரப்பொருளுமென்றதற்கு உவமைமுதலிய அணியியல்பொருந்திய பொருளிலக்கணமுமென் றுரைப்பினும் அமையும். பூசுரராலும்வணங்கப்பெறுதலால்ஆழ்வாரைத்தேவரென்றார். அவர் அவதரித்த ஊராதலின் அழகியகுருகூரென்றார். நெடுந்தூரத்திருப்பவர் வருதற்கிசையாதாதலின் அங்கிருந்தே கருதுங்களென்றார். அவ்வூர் ஏனையமுத்திநகரங்கள்போன்றதாதலில் சிந்திக்க முத்திசித்திக்குமென்பது துணிபு. ஆட்செய்யக்கிட்டாவிடினும் அடியாரைத்தரிசித்தவிடத்துவணங்குங்களென்றார். மற்றைநான்கைக்கூறிவிட்டதனால் உபலட்சணத்தால் பொருளையுங்கூட்டிப்பஞ்சலட்சணமென்னுமாம். வந்தியும் முதலிய, உம் - புதியன புகுதலால் ஏவலுக்குவந்தமையறிக. (௩௫)

தேவரை யேறிய மூதறி வாட்டியைச் சீரழித்தீர்
பூவரை யேறிய கோதையுள் ளம்புகுந் தாரெவரென்
றேவரை யேறி மொழிகின்ற போதியம் பிற்றிறைவர்
மூவரை யோகுரு கூரரை யோசொல்லு முந்துறவே.

பொருள்—அகப்புறப் பொருள்.
திணை—கந்தருவத்தின் வழுவிய பெருந்திணை.
கிளவி—அறத்தொடு நிற்றல்,
துறை—பாங்கி செவிலியர்க் கறத்தொடு நிற்றல்.

உரை:—(நீங்கள்), தேவரை - தெய்வத்தை, ஏறிய - ஆவேசமாகப் பெற்ற, மூதறிவாட்டியை - முதிர்ந்த அறிவையுடையவளான கட்டுவிச்சியை, சீர் அழித்தீர் - நிலைகுலையச் செய்தீர்கள்; பூ வரை - மலர்கள் மட்டும், ஏறிய - சூடப்பெற்ற, கோதை - கூந்தலையுடைய தலைவியது, உள்ளம் - மனத்தில், புகுந்தார் - புகுந்து வருத்துகின்றவர், எவர் என்று - எவர்தாமென்று, ஏ - பெருமை மிக்க, வரை ஏறி - நம் குறிச்சியில் வந்து, மொழிகின்ற போது - சொல்லுகின்ற காலத்தில், இறைவர் - தலைவராகிய, மூவரையோ - திரிமூர்த்திகளையோ? குருகூரரையோ - அன்றிக் குருகூர் நம்மாழ்வாரையோ? கூறிற்று - சொல்லியது; முந்து உற - முன்னதாக, சொல்லும் - சொல்லுங்கள்; (எ - று.)

நீங்கள் கட்டுவிச்சியாகிய மூதறிவாட்டியின் பெருமையைக் கெடுத்து விட்டீர்கள்; நம் தலைவியின் மனத்திற் புகுந்தார் யாவரென்று வினவுகின்றபொழுது மூவர் புகுந்தாரென்றோ அல்லது குருகூர் ஆழ்வார் புகுந்தாரென்றோ அவள் கூறியது. அதனைச் சொல்லுவீரென்பதாம். கட்டு - ஒருவிதக்குறி; முறத்தில் நெல் முதலியவற்றை வைத்துக் கடவுளைப்பரவி அந்த நெல்லில் ஒரு பிடியளவெடுத்துத் தனியே வைத்து இந்நெல் ஒற்றைப்பட்டால் தெய்வத்தாலாயிற்றென்றும் இரட்டைப்பட்டால் பிற நோய் முதலியவென்றுங் கூறுவதோர் குறியென்று சில நூல்களால் தெரிகின்றது. இக்குறி, கட்டு வைத்தல், கழங்கு பார்த்தல், கன்னமெடுத்தல் எனப் பலவகைப்படும். கட்டு வைத்து உரைப்பவள் கட்டுவிச்சி. அறிவுடைய முதிர்ந்தவளாதலால் மூதறிவாட்டியென்றாள். இவளுக்கு நோய் வந்த மூலமறிந்து கூறாமல் மாறாகக்கொண்டுகுறிபார்க்கத்தொடங்கியதனால்அவளைச்சீரழித்தீரென்றாள். தெய்வத்தால் தீண்டப் பெற்றிலளென்பது தோன்றப் பூவரையேறிய கோதை யென்றாள். தெய்வந் தீண்டப் பெற்றால் பூவைச்சூடு மறிவு பெறாளென்று இங்ஙனங் கூறினளாம். தலைவன் பிரிந்ததனால் வருந்திய மனத்தினளாய் அணி முதலிய அணியப்பெறாமல் பூமட்டுஞ்சூடிய கோதையெனினுமாம். திரிமூர்த்திகளிலும் மேலாக ஆழ்வாரை இவள் மனங்கொண்டிருப்பதனால் அந்த மூவரில் யாரேனும் இவள் உள்ளம் புகுந்தாருண்டோ என்று நகையாடிக் கூறினாள். நம்மாழ்வாரையே இவள் கருதி இருக்கிறாளென்பதைக் கொள்ளுங்களென்பாள் அவரை யீற்றிற் கூறிமுடித்தாள். தலைவனது இயற்பெயர் கூறுதல் அகப்பொருள் கந்தருவ வழக்கமில்லாமையால் "பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே" என்ற சிறப்புடைய பெருந்திணையன்றிக் கந்தருவத்தின் வழுவிய பெருந்திணையாயிற்று. அறத்தொடு நிற்றல் - தலைவி தருமவழி தவறவில்லை யென்றதை நிலை நிறுத்துதல். தலைவியின் அபிப்பிராயத்தை யறி

க்த தோழி தாய்மார்க்கறிவித்தல் துறையின் கருத்து. முதுமையெ ன்னும் பண்புப் பெயர் ஈறு போய் ஆதி நீண்டது. ஆட்டி - பெண் பாற்பெயர். "அன்ன பிறவு மவற்றொடு சிவணி, மன்னிய வினைய நிமி த்த மென்ப" (தொல் - பொரு - உ௬௭.) என்ற சூத்திரவுரையில் கைக் கிளைக்கும் பெருந்திணைக்கும் மெய்ப்பாடு வரையறையின்றி வேண்டிய வாறு வரப்பெறுமென்றதனால் இதற்கு ஒன்றனை நிலையிட்டுரைக்க வில்லை. பயனுமப்படியே கொள்க. (௬௬)

துறவா தவர்க்குந் துறந்தவர்க் குஞ்சொல்ல வேசுரக்கு
மறவா வவையிங்கொ ராயிர நிற்கவந் தோசிலர்போய்
மறவா தியர்சொன்ன வாசக மாமலட் டாவைப்பற்றிக்
கறவாக் கிடப்பரங் கென்பெற வோதங்கள் கைவலிப்பே.

உரை :—துறவாதவர்க்கும் - இல்லறத்திலிருப்பவர்க்கும், துறந்த வர்க்கும் - துறவறத்திலிருப்பவர்க்கும், சொல்லவே - சொல்லும்பொழு திலேயே, சுரக்கும் - கருணையாகிய பாலைச்சுரக்கின்ற, அறம் - தரும வடிவமாகிய, ஓர் ஆயிரம் ஆ அவை - ஒரு ஆயிரம் பசுக்கள், இங்கு நிற்க - இவ்விடத்திருக்கையில், அந்தோ - ஐயோ ! சிலர்போய் - சிலர் சென்று, மறம் வாதியர் - மாறுபட்ட வாதங்களைச் செல்லுகின்ற புறச்ச மயிகள், சொன்ன - சொல்லிய, ஆசு - குற்றத்தை, அகம் ஆம் - தன் னிடத்திற்கொண்ட நூல்களாகிய, மலடு ஆவைப்பற்றி - மலட்டுப்பசு க்களைப் பிடித்துக்கொண்டு, கறவா - கறந்து, கிடப்பர் - உழலுவார் ; அங்கு - அந்தப்பசுவினிடத்தில், தங்கள் கைவலிப்பே - அவர்கள் கை வருந்துவதானது, என்பெறவோ - வேறு யாது பயனைப் பெறுவதற்கா கவோ ? (எ - று.)

யாவர்க்கும் சொல்லினஅளவிலே பயனைத்தருகின்ற காமதேனு வையொத்த திருவாய்மொழி ஆயிரம் பாடல்களுமிருக்க அவற்றைவிட் டுப் புறச்சமயிகள் சொன்ன மலட்டுப்பசுக்கள்போன்ற நூல்களிற் சென்று பயன்கருதி வருந்துவார் அதனால் தங்கள் கைவருந்துவது வேறு யாதுபயனைக் கருதியோ ? ஒன்றுமில்லை யென்பதாம். துறவா தவர்க்கு இருமைப்பயனையும், துறந்தவர்க்கு மறுமைப்பயனையும் தன் னை நினைத்தவுடனே கொடுத்தலாலும் மற்றும் வேண்டியவர்க்கு வேண் டியபடியே காமதேனுவைப்போலக் கொடுத்தலாலும் திருவாய்மொழி யைக் காமதேனுவாக உருவகப்படுத்திக் கூறினார். புறச்சமையத்தார் நூல்கள் மலட்டுப்பசுவைப்போலப் பயன்கொடாதொழிவதன்றித் தம் மைப் படித்தவர்க்கு நரகத்தையுங் கொடுப்பதால் குற்றம் பொருந்திய மலட்டுப்பசுவென்றார்,

மறவாதியரென்று பன்மைப்பெயராற் கூறினமையால் ஆசுகளை அகத்திற்கொண்டபல நூல்களே யென்பது வெள்ளிடை மலைபோல விளங்கிக்கிடக்க இதனை நன்குஓராமல்எல்லாச்சமயத்தாராலும்புகழும் மாணிக்கவாசகர் திருவாசகமென்று ஒன்றனைச்சுட்டிக் கூறி எரிவாய் நரகிற் காளாகின்றாருஞ்சிலருளர். ஆ அவை, அவை- பகுதிப்பொருள் விகுதி. அந்தோ - இரக்கக் குறிப்பிடைச்சொல் ; தனித்தமிழ் மொழி; " அந்தோற் றேவும் " என்றதனாலறிக. ஆசகம் - அன்மொழித்தொகை. இப்பாடல் உருவகவணி. (௬௭)

கைதலைப் பெய்தரும் பூசலிட் டுக்கவி யாலுலகை
யுய்தலைச் செய்ததும் பொய்யென் றுமோசென் றவ்வூ ரறிய
வைதலைத் தேசுது மோகுரு கூரென்னு மாறறியாப்
பைதலைக் கோகுதட் டிட்டெட்டி லேற்றிய பண்பனையே.

பொருள்—புறப்பொருள்.
திணை—பொருந்திணை.
கிளவி—இருபாலில் பெண்பாற் கூற்று.
துறை—தலைவி மடலூரத் தோழிசாற்றுதல்.

உரை:— குருகூர் என்னும் ஆறு அறியா - குருகூரென்று சொல்லுவதற்குந் தெரியாத, பைதலை - எந் தலைமகளை, கோகு - தன் தோள்களை, தட்டிட்டு - தட்டிக்கொண்டு, எட்டில் - பனைமடலாலாகிய குதிரையில், ஏற்றிய - ஏறும்படி செய்த, பண்பனை - இயல்புடைய தலைவனை, (குறித்து), கை - கைகளை, தலை பெய்து - தலைக்குமேல் தூக்கி, அரும் பூசல் இட்டு - பேரிரைச்சலிட்டு, கவியால் - செய்யுட்களால், உலகை - உலகத்திலுள்ள உயிர்களை, உய்தலைச்செய்ததும் - ஈடேறும்படி செய்ததும், பொய் என்று மோ - பொய்யென்று சொல்லுவோமோ? சென்று - அந்தக்குருகூர் புகுந்து, அவ்வூர் அறிய - அவ்வூராரறியும்படி, வைது ———, அலைத்து - துன்பப்படுத்தி, ஏசுதுமோ - இகழ்வோமோ? [யாதுசெய்வோம்?.]

குருகூரென்று சொல்லவுங் கற்றறியா எமது தலைமகளை இப்படி மடலூரும்படி செய்த நம்மாழ்வாரைச்சென்று பெரும்பூசலிட்டு நமது பாடலாலுலகத்தை வாழ்வித்தது பொய்யென்போமா? அவ்வூரார் அறியும்படி வைது அலையச்செய்து ஏசுவோமா? யாதுசெய்வோமென்பதாம். தலைவிபால் அன்பு மிகுதியால் பெண்பாலை ஆண்பாலாகப் பைதலென்றாள். பைதல், ஆண்மகனில் சிறுவனுக்கும் துன்பத்திற்கும் பெயர். "பைத்தலை யரவெனக் கனன்று பைதலை, யித்தனை போதுகொண்டிருப்பதோவென்றே" இங்கு அனுமானைப் பைதலென்றதும், "பைதலை வாகிப் பசக்குவ மன்றே... கண்" இங்குத் துன்பத்துக்கும் ஆயினமையுமறிக. ஆண்பாற் குழந்தைகளை பிள்ளையென்பதனால் - கிளிப்பிள்ளையென்னும் வழக்குப்பற்றிக் கிளிப்பைதலென்றார் ஆழ்வாரும். கோகுதட்டுதல் - தோள்தட்டுதல்; கோகுகட்டிட்டு என்று பாடமோதி கோகு உகட்டிட்டு என்று பதம் பிரித்தார் பூர்வாசாரியரெனின் அதுவும் எட்டுப்பிரதியில் தட்டென்பது கட்டென்று பிறழ்ந்திருக்கக்கண்டு அங்ஙனமே வைத்து உரையெழுதியிருக்கலாமன்றி உகட்டென்றவேரொருநூலிலுங் காணப்படாப்பதம் இவர்களுக்குத் தோன்றிப் பொருள்பட்டமையிறும் பூதென்க. பனைமடற்குதிரை - பனங்கருக்குக்களை வெட்டி ஒரு குதிரைபோலக்கட்டி அதன்மேலேறிநின்று இளையோரைக்கொண்டு அப்பெண்ணிருக்குந்தெருவழியே மூன்றுநாள் வரையிலிழுக்கச்செய்து அந்நாட்களுக்குள் அப்பெண்ணைக் கொடாவிட்டால் நாலாநாள் மலைமேலேறிவிழுந்திறப்பது ஆண்பால் மடற்கூற்று. பெண்பால் மடலேறுதற்கு விதியில்லாமையால் பொருந்தாதாயினும் பிற்காலத்தார் இங்ஙனம் எழுதுதலால் இது புறத்திணையில் அடக்கலாயிற்று. (௩அ)

பண்ணுந் தமிழுந் தவஞ்செய் தனபழு நான்மறையு
மண்ணும் விசும்புந் தவஞ்செய் தனமகிழ் மாறன்செய்யு
ளெண்ணுந் தகைமைக் குரியமெய் யோகியர் ஞானமென்னுங்
கண்ணும் மனமுஞ் செவியுந் தவஞ்செய்த காலத்திலே.

உரை :—மகிழ்மாறன் - மகிழமாலையணிந்த நம்மாழ்வார் பாடியருளிய, செய்யுள் - பாடல்களை, எண்ணும்-தியானிக்கின்ற, தகைமைக்கு- தகுதிக்கு, உரிய - ஏற்ற, மெய் - உண்மையான, யோகியர் - யோகசாதனையுள்ளவர்களுடைய, ஞானம் என்னும் கண்ணும் - அறிவாகிய மனக்கண்ணும், மனமும் - உள்ளமும், செவியும் - காதுகளும், தவஞ்செய்த- தவஞ்செய்தன ; காலத்திலே ———, பண்ணும்-குறிஞ்சிப்பண் முதலிய இராகங்களும், தமிழும் - தமிழ்மொழியும், தவஞ்செய்தன ———; பழ நால் மறையும் - பழமையாகிய நான்கு வேதங்களும், மண்ணும் - பூவுலகும், விசும்பும் - விண்ணுலகும், தவஞ்செய்தன ——; (எ - று.)

நம்மாழ்வார் பாடியருளிய பாடல்களைத் தியானித்தற்குரிய யோகியர்களுடைய ஞானக்கண்ணும் மனமும் செவியுந் தவஞ்செய்தன ; காலத்திலே பண்களும் தமிழ்மொழியும் மறையும் மண்ணும் விண்ணும் தவஞ்செய்தன வென்பதாம். எனவே யோகியர் இவர் பாடல்களை யேகருதுவார்களெனவும் இப்பாடல்களுக்கு பண்கள் இன்றியமையாதனவெனவும்,தமிழுக்கு இந்நூல் ஒரு ஏற்றமுடையதெனவும், நான்கு மறையுமென்றதனால் நான்கு வேதங்களின் சாரமேயிவர் நூலெனவும், மண்ணும் விசும்புமென்றதனால் இருமைப்பயனும் இந்நூலளிக்குமெனவும் கூறினாராயிற்று. பண் - முற்கூறப்பட்டது. மண், விசும்பு-இடவாகு பெயர்கள்.

காலத்தி லேகுரு கூர்புக்குக் கைக்கொள்மின் கடைநா
ளாலத்தி லேதுயின் றோர்கொண்ட வையிரண் டாயமைந்த
கோலத்தி லேமுளைத் தக்கொழுந் தோடிக் குணங்கடந்த
மூலத்தி லேசெல்ல மூட்டிய ஞானத்தெம் மூர்த்தியையே.

உரை :—கடை நாள் - உலகமொடுங்கும் ஊழிக்காலத்தில், ஆலத்திலே - ஆலிலையிலே, துயின்றோர் - பள்ளிகொண்டருளிய வாசுதேவர், கொண்ட - தாம் எடுத்துக்கொண்ட, ஐயிரண்டாய் அமைந்த - பத்தாக எண்ணப்பட்ட, கோலத்திலே - வடிவங்களிலே, முளைத்து - தோன்றி, கொழுந்து ஓடி - மேலோங்கி வளர்ந்து, குணம் கடந்த - முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டு நின்ற, மூலத்திலே செல்ல - காரணப்பொருளிடத்திலே செல்லும்படி, மூட்டிய ஞானத்து - மெய்ஞ்ஞானத்தை எமக்குத் தந்தருளிய, எம் மூர்த்தியை - நம்மாழ்வாரை, குருகூர் - அவர் அவதரித்த திருக்குருகூரில், காலத்திலேபுக்கு - உரிய காலத்திலே புகுந்து, கைகொள்மின் - தரிசித்து நற்பயனைக் கைப்பற்றுங்கள் ; (எ - று.)

ஆலிலையிற் பள்ளிகொண்ட மாயோனது தசாவதாரங்களில் ஈடுபட்டுக் காரணப்பொருளாகிய அவ்வாசுதேவனிடத்துச் செல்லும்படியான மெய்ஞ்ஞானத்தை நமக்குத்தந்தருளிய நம்மாழ்வாரை உரியகாலத்திலே சென்று வணங்கிப் பிழையுங்கள் என்பதாம். எல்லாம் அழிந்த முடிவிலும் நிலைபெற்றுவிளங்குதலால் கடைநாள் ஆலத்திலே துயின்றோர் என்றார். பத்து அவதாரங்களும் கருமவசமல்லா மற்றன்னிச்சையாலெடுத்தமையால் கொண்ட என்றார். தனக்கென ஒருபொருளை விரும்பிலாராதலால் கொண்மினேனென்றார். உலகெலாமொடுங்குங் கற்பகாலத்தில் அவற்றை அழியாதபடி மாயோனவன் தன்வயிற்றடக்கி ஆதிசேடன் வடிவான ஆலிலையில் யோகநித்திரை செய்தருளுவனென்பராதலால் கடைநாள் ஆலத்திலே துயின்றோரென்றார். ஆலத்தில், அத்து - சாரியை, (௪0)

மூர்த்தத் தினையிம் முழுவே ழுலகை முழுகுகின்ற
தீர்த்தத் தினைச்செய்ய வேதத் தினைத்திரு மால்பெருமை
பார்த்தற் கருளிய பாரதத் தைப்பணித் தானுநின்ற
வார்த்தைக் குருகைப் பிரானுங்கண் டாரம் மறைப்பொருளே.

உரை :—மூர்த்தத்தினை - உயிர் நிலையினையும், இ - இந்த, முழு ஏழ் உலகை - எழுலகமுழுவதினையும், முழுகுகின்ற - படிகின்ற, தீர்த்தத்தினை - பரிசுத்தரான கடவுள் நிலையையும், செய்ய - செவ்விய, வேதத்தினை - வேதங்களையும், திருமால் பெருமை - சிறந்தமாயோன் பெருமையை, பார்த்தற்கு - அருச்சுனனுக்கு, அருளிய - சொல்லியருளிய, பாரதத்தை - கீதையடங்கிய மகாபாரதத்தையும், பணித்தானும் - வெளியிட்டருளிய வியாஸமுனிவரும், நின்ற - நிலைபெற்ற, வார்த்தை - திருவாய்மொழியையுடைய, குருகைபிரானும் - குருகூர் நம்மாழ்வாரும், ஆகிய அவ்விருவருமே, அ மறைப்பொருள்-அந்த மறைவாயுள்ள உண்மைப்பொருளை, கண்டார் - அறிந்தவராவார்கள்.

உயிர்நிலை, உலகநிலை, கடவுள்நிலை, என்னும் மூவகை நிலைமைகளையும் நான்குவேதங்களையும் ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தையும்வெளியிட்டருளிய வியாதமுனிவரும் நிலைபெற்ற திருவாய்மொழியைப்பாடியருளிய நம்மாழ்வாரும் ஆகிய அவ்விருவருமே அந்தமறைவாயுள்ள உண்மைப்பொருளையறிந்தவராவார்களென்பதாம். மூவகைநிலையை வேதாந்தசூத்திரத்தால் வெளியிட்டமை வெளிப்படை. வேதாந்த சூத்திரங்களடங்கிய உத்தரமீமாஞ்சையும் வேதமும் பாரதமும் கூறும்பொருளெல்லாம் இந்தத்திருவாய்மொழி கூறுமெனவும் அந்த வியாதமுனிபோல இந்த ஆழ்வார் மகோபகாரியாயுலகத்துக்கு நன்மைசெய்தவரெனவுங் கொள்ளக்கிடந்தமை காண்க. (௩௪)

பொருளைச் சுவையென்று போவதெங் கேகுரு கூர்ப்புனித
னருளைச் சுமந்தவன் கண்ணின் கடைதிறந் தாறுபட்டுக்
குருளைச் சுமந்து வெளிபரந் தோட்டருங் கொள்ளைவெள்ள
முருளைச் சுடர்மணித் தேரையந் தோவந் துதைக்கின்றதே.

பொருள்—அகப்பொருள்.
திணை—பாலை.
கிளவி—பொருள் வயிற்பிரிவு.
துறை—நெஞ்சொடு மறுத்தல்.

உரை :—(நெஞ்சமே!) குருகூர் புனிதன் - திருக்குருகூரிலவதரித்தபரிசுத்தரான நம்மாழ்வாருடைய, அருளை - கருணையை, சுமந்தவள் - அடைந்தவளாகிய தலைவியின், கண்ணின் கடை திறந்து - கடைக்கண்ணைத்திறந்து கொண்டு, ஆறுபட்டு - ஒரு ஆறாகி, வெளி பரந்து - வெளியிற்பரவி, குருளை சுமந்து - காட்டில் விலங்கின் குட்டிகளை அடித்துக் கொண்டு, ஓட்டரும் - ஓடிவருகின்ற, கொள்ளை வெள்ளம் - மிகுதியான கண்ணீர் வெள்ளமானது, உருளை - சக்கரங்களையுடைய, மணி சுடர் - இரத்தினங்கள் பிரகாசிக்கின்ற, தேரை - என்னுடைய தேரை, வந்து உதைக்கின்றதே - வந்துதடுக்கின்றதே; அந்தோ - ஐயோ! பொருளை ——, சுவை என்று - சிறப்புடையதென்று கொண்டு, எங்கே போவது - எப்படிநான்போகலாகும்? (எ - று.)

நெஞ்சமே நம்மாழ்வார் அருள்பெற்ற நம்தலைவியின் கடைக்கண்ணில் நின்று வடிகின்ற கண்ணீர் வெள்ளமானது நாம்போகும் வழியில் குறுக்கேவந்து தடுக்கின்றதே! ஐயோ! நாம் எப்படிப்பொருள் சம்பாதிக்கப்போவது என்பதாம். குருகூர்ப்புனிதன் அருளைச்சுமந்தவள் கண்ணீர்வெள்ளமானதால் அதற்குத்தப்பி எப்படிப்போவதென்று நெஞ்சத்தோடுகூறிச் செலவழுங்கினேன். பிரிவாதலிற் பாலையாயிற்று. "தாயத்தார்செய்தது தேவரும் பிதிருமின்புறார்" என்பது விதியாதலால் தானே பொருள் சம்பாதித்து அதனால் அறஞ்செய்யவேண்டி வேற்று நாடுகளைவென்று அவ்வரசராலிடுகிற கப்பங்களைப்பெற்றுவருதற்குப் போனமையால் பொருள்வயிற்பிரிவென்று பெயராயிற்று. மெய்ப்பாடு-அசைவுபற்றிய பெருமிதம். பயன்-நெஞ்சொடு கூறியாற்றுதல். ஓட்டரும் - ஓட்டந்தருமென்பதன் விகாரம். (௪௨)

வந்தடிக் கொண்டன கொங்கைகண் மாறன் குருகைவஞ்சி
கொந்தடிக் கொண்ட குழலுங் கலையுங் குலைந்தலையப்
பந்தடிக் குந்தொறு நெஞ்சம் பறையடிக் கின்றதென்றாற்
செந்தடித் தன்ன மருங்கிற்குண் டோநிற்குஞ் சிக்கனவே.

பொருள்—அகப்பொருள்.
திணை—குறிஞ்சி.
கிளவி—இருவருமுளவழியவன் வரவுணர்தல்.
துறை—ஆடிடம் புகுதல்.

உரை:—மாறன் - நம்மாழ்வார் அவதரித்த, குருகை - திருக்குருகூரில், வஞ்சி - இம்மாதின், கொங்கைகள்———, வந்து - தோன்றி, அடிகொண்டன - மார்பில் அடிபரந்து பெருத்தன; செந்தடித்து அன்ன - செவ்விய மின்னல்போன்ற, மருங்கிற்கு - இடைக்கு, நிற்கும் - நிலைநிற்கக்கூடிய, சிக்கனவு உண்டோ - அக்கொங்கைகளைத் தாங்கும்வலிமையுண்டோ ? (இல்லை) ; என்றால் - கொங்கைப் பெருமையும் இடையின் துவட்சியும் இப்படியென்றால், கொந்து - பூங்கொத்துக்கள், அடிக்கொண்ட - கூடப்பெற்ற,* குழலும் - தலைமயிரும், கலையும் - இடையிற்கட்டிய சேலையும், குலைந்து - நிலைகுலைந்து, அலைய - சோர, பந்து அடிக்குந்தொறும் - இவள்பந்தடிக்கும்போதெல்லாம், நெஞ்சம் - என்மனமானது, பறை அடிக்கின்றது - துடிக்கின்றது.

ஆழ்வார் குருகூரில் இம்மாதின் கொங்கைகள் பருக்கின்றன; இடைக்கு அவற்றைத் தாங்கும் வலிமையுண்டோ ? (இல்லை ;) இந்நிலைமையில்இவள் குழல்குலைந்து கலையலையப்பந்தடிக்கும்போதெல்லாம் என் மனந்துடிக்கின்றதே யென்பதாம். இதிற்கூறியபடியே "அடிக்கொண்டகுவவுக் கொங்கை" என்றார் இராமாயணத்திலும். மார்பிடமெலாங் கவர்ந்து வட்டமிட்டடியிட்டு நாளுக்குநாள் மேல்வளர்தலால் அடிக்கொண்டனவென்றான். வஞ்சி - ஒருகொடி ; கொடிபோன்ற இடையுடையாளாதலால் அப்பாரத்தை இடைதாங்காதென்னுங்குறிப்பால் வஞ்சியென்றான். பின்னும் ஆடுதல்நோக்கி ஆற்றாமையால் உண்டோ சிக்கனவென்று வெளிப்படக் கூறினான். பந்தாடுமிடத்திற் புகுந்த தலைமகன் தலைவிபந்தடிப்பதை நோக்கிக் கூறினதாகத் துறைகூறினமையில் இதுகிளவியிலடங்கவில்லை யெனினும் ஒன்றனுள் அடக்கவேண்டியிருத்தலால் இருவருமுளவழி யவன்வரவுணர்தலின் பாற்படுத்தலாம். மெய்ப்பாடு - உவகை. பயன் - தலைமகளைச்சார்தல். (௪௩)

கனவா யினவுந் துரியமு மாயவை யுங்கடந்து
மனவா சகங்களை வீசிய மாறனை மாமறையை
வினவா துணர்ந்த விரகனை வெவ்வினை யைத்தொலைத்த
சினவா ரணத்தைக் குருகைக் கரசனைச் சேர்ந்தனமே.

உரை:—கனவு ஆயினவும் - சொற்பனாவத்தையின் பகுதிகளையும், துரியமும் ஆயவையும் - துரியாவஸ்தை முதலியவைகளையும், கடந்து - தாண்டி, மனம் வாசகங்களை - மனோவாக்குக்களையும், வீசிய - கடந்த, மாறனை - மாறனென்னும் பெயருடையவரும், மா மறையை - சிறந்த வேதங்களை, வினவாது உணர்ந்த - பிறர்பால் ஓதாமல் உணர்ந்த, விரகனை - அறிவுடையோரும், வெவ்வினையை - கொடிய தீச்செயல்களெல்லாம், தொலைத்த - போக்கிய, சினம் - கோபத்தையுடைய, வாரணத்தை - யானை போன்றவரும், குருகைக்கு அரசனை - திருக்குருகூர்க்குத் தலைவருமாகிய நம்மாழ்வாரை, சேர்ந்தனம் - யாம் சரணமாக அடைந்தோம்; (எ - று.)

கனவு துரியம் முதலிய ஐந்து அவஸ்தைகளையும் தாண்டி எம் மனோவாக்குக்கு எட்டாத மாறனென்பவரும் அரசனுமாகிய நம்மாழ்வாரை நாம் சரணமாக வடைந்தோம் என்பதாம். ஆயினவும் என்பதனால் கனவின் முன்னுள்ள சாக்கிராவஸ்தையும் பின்னுள்ள சுழுத்தியாவஸ்தையுங் கொள்ளப்படும். ஆயவையும் என்பதனால் துரியாதீதாவஸ்தையும் கொள்க. அதன் உட் பகுதி பலவாதலால் ஆயவை என்றுபன்மையாற் கூறினார்; எனவே அவத்தை ஐந்து என்றவாறும்; அவையாவன:—சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன: இவற்றின் பொருள் முறையே விழித்திருத்தல், கனநிலை, அயர்ந்து தூங்குதல், உயிரொடுங்கிச் சமாதியிருத்தல், கடவுளொடு கலத்தல், என்பனவாம். மனத்தால் எண்ணுதற்கும் வாயினாற் சொல்லுதற்கும் எட்டாத நிலைமையராதலால் மனவாசகங்களை வீசிய மாறனென்றார். 'மயர்வற மதிநலம்' அருளப் பெற்றவராதலால் வினவாதுணர்ந்த விரகனென்றார். சடமென்னுவாயுவைக் கோபித்தவராதலால் வினைதொலைத்த சினவாரணமென்றார். இது ஒரு பொருண்மேல் பல பெயர் வந்து சேர்ந்தனமென்ற ஒரு வினையைக் கொண்டது. யாம் - தோன்றா எழுவாய். (௪௪)

சேரா தனவுள வோபெருஞ் செல்வர்க்கு வேதஞ் செப்பும்
பேரா யிரந்திண் பெரும்புய மாயிரம் பெய் துளவத்
தாரார் முடியா யிரங்குரு கூர்ச்சட கோபன் சொன்ன
வாரா வமுதக் கவியா யிரமவ் வரியினுக்கே.

உரை;—அ அரியினுக்கு - அந்த மாயோனுக்கு, வேதம் - வேதங்களால், செப்பும் - சொல்லப்படுகிற, பேர் ஆயிரம் - திருப்பெயர்கள் ஆயிரங்களாம்; திண் - வலிய, பெரும் புயம் - பெரிய தோள்களும், ஆயிரம் - ஆயிரங்களாம்; துளவம் பெய் - திருத்துழாய் வைத்துத் தொடுத்த, தார் - மாலை, ஆர் - பொருந்திய, முடி - திருமுடிகள், ஆயிரம் - ஆயிரங்களாம்; (அப்படி யெல்லாம் ஆயிரமா யமைந்தன போல,) குருகூர் - திருக்குருகூரிலவதரித்த, சடகோபன் - நம்மாழ்வார், சொன்ன - சொல்லியருளிய, ஆரா - தெவிட்டாத, அமுதம் கவி - அமிர்தம் போன்ற பாடல்

கள், ஆயிரம் - ஆயிரங்களாம்; (ஆதலால்,) பெருஞ் செல்வர்க்கு - பெரிய அனுபோகப் பொருளுடையார்க்கு, சேராதன உளவோ - அடையப் பெறாதவைகளு முண்டோ? [எல்லாம் அடையும்;] (எ - று.)

மாயோனுக்குத் திருப்பெயர்கள் ஆயிரம்; தோள்களுமாயிரம்; முடிகளும் ஆயிரம்; அப்படிப்போல நம்மாழ்வார் பாடல்களுமாயிரம்; ஆதலால் பெருஞ் செல்வரை யடையப் பெறாதவையு முண்டோ? எல்லாம் அடையுமென்பதாம். உலக குருவாகிய ஸ்ரீ சங்கராசாரியருரை செய்தருளிய ஏற்றமுடைமையால் ஸகஸ்ரநாமமென்னு நூலைக் கூற வந்தவர் - அதன் தமிழ் மொழியாகிய பேராயிர மென்றார். புயமாயிரம், முடியாயிரம் - இவற்றிலுள்ள ஆயிரங்கள் மிகுதிப் பொருளன. திண் பெரும் புயம் - பண்புத்தொகை; பன்மொழித்தொடர். இதன் முதலடி வேற்றுப் பொருள் வைப்பணி. (௩௫)

அரிவளை பொன்மகி ழாயிழைக் கீயுங்கொ லந்திவந்து
முரிவளை முத்துஞ் சினையு மயங்க முறைசெறுத்து
வரிவளை யும்மன்ன முந்தம்மி லேவழக் காடவெம்
புரிவளை யூடறுக் குங்குரு கூரெம் புரவலனே.

பொருள்—அகப்புறப் பொருள்.
திணை—நெய்தல்.
கிளவி—தூதிற் பிரிவு.
துறை—காமக் கிழத்தி காதல் நிலைக்கு
நாமக் குழலி பாங்கி நவர்தல்.

உரை:—முரி - வளைந்த, வளை - சங்கு பெற்ற, முத்தும்———, சினையும் - அன்னப்பறவை ஈன்ற முட்டையும், மயங்க - வேறுபாடு தோன்றாமல் கலந்திருக்க, (அவற்றை ஈன்ற), வரி வளையும் - கோடுகளையுடைய சங்கும், அன்னமும் - அன்னப் பறவையும், முறை செறுத்து - முறையே கோபித்து, தம்மிலே - தங்களுக்குள்ளே, வழக்கு ஆட - விவகாரம் பேச, (அப்பொழுது), வலம்புரி வளை - வலம்புரிச் சங்கானது, ஊடு - அவ்விரண்டின் நடுவிலே சென்று, அறுக்கும் - அந்த வழக்கைத் தீர்த்து விடுகிற, குருகூர் - திருக்குருகூரி லெழுந்தருளிய, எம் புரவலன் - எம் இறைவன், அரி - வண்டுகள், வளை - வளைந்து மொய்க்கப் பெற்ற, பொன் - பொன் போன்ற, மகிழ் - தமது மகிழம்பூ மாலையை, அந்தி வந்து - மாலைக் காலத்தில் வந்து, ஆயிழைக்கு - ஆராய்ந்தணிந்த ஆபரணங்களையுடைய தலைவிக்கு, ஈயுங்கொல் - கொடுத்தருளுவானோ?

குருகூரிலிருக்கும் எம் தலைவன் அந்திக் காலத்தில் வந்து எம் தலைவிக்குத் தன் மகிழமாலை அளிப்பானோ என்பதாம். முத்தும் சினையும் வேற்றுமை தெரியாமல் ஒரு தன்மையா யிருக்கக் கண்டு மாறுபாடாய் ஒன்றனை ஒன்று எனது எனது என்று முத்தைப் பெற்ற சங்கும் சினையைப் பெற்ற அன்னமும் வாது கூறலும் இடையிலே வலம்புரி சென்று விலக்கிவிடும் நாடெனவே இரண்டு அரசர் தம்முள் மாறுபட்டுப் போர் தொடங்க எத்தனித்தபொழுது இடையில் இத்தலைவன் இருவரையும் சமாதானப்படுத்த வேண்டித் தூதிற்குச் சென்றானென்பதை உள்ளுறையுவமையாற் கூறியது காண்க. "ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன" என்றமையால் அரசர்க்குத் தூதுபோதலுரித் தென்க. தூதிற் பிரிவு

கற்பிற் குரியதனால் தலைவி மாலைவேண்டாளென்பது தெளிவாகும்; ஆகவே இங்குக் காமக்கிழத்தியே மாலை வேண்டற் குரியவளாவாள். இளவித்தலைவன் மாலையைச் சூட்டிக் கூறினமையாலிது அகப்புறமாயிற்று. இரங்குதலால் திணை - நெய்தலாயிற்று. காமக் கிழத்தியாவாள் - சேரிப்பரத்தையின் மகளாகித் தலைவனைத் தானு மணந்துகொண்டு வேற்றொருவனையும் விரும்பா நிலையிலிருப்பவ ளென்க. (௬௬)

புரைதுடைத் துப்பெரும் பொய்யுந் துடைத்துப் பிறர்புகலு
முரைதுடைத் தங்குள்ள வூச றுடைத்தெம் முறுபிறவித்
துரைதுடைத்தாட்கொண்டதொண்டர்பிரான்றுறை நீர்ப்பொரு
கரைதுடைக் குங்கட லேதுடை யேலன்பர் கால்சுவடே. [நைக்

பொருள்—அகப்பொருள்.
திணை—நெய்தல்.
கிளவி—ஒருவழித்தணத்தல்.
துறை—சென்றோன் நீடலிற், காமமிக்க கழிபடர் கிளவி.

உரை:—எம் - எம்முடைய, உறு - மிக்க, துரை பிறவி - விரைந்து பற்றுகிறபிறவிகளை, துடைத்து - போக்கி, ஆட்கொண்ட - என்னை அடிமையாகக்கொண்ட, தொண்டர்பிரான் - அன்பர்களின் தலைவரான நம்மாழ்வார்க்குரிய, துறை நீர் பொருநை - துறைகள்பொருந்திய நீரையுடைய தாமிரபருணியாற்றின், கரை துடைக்கும் - கரையைமோதுகின்ற, கடலே - சமுத்திரமே! புரைதுடைத்து - எனக்குள்ள காமமாகிய துன்பத்தைப்போக்கி, பெரும்பொய்யும் துடைத்து - தாம்சொல்லும் வார்த்தைகளில் பொய்யில்லாதபடிபோக்கி, பிறர்புகலும்-அயலார் கூறுகின்ற, உரை துடைத்து - பழிச்சொல்லுகளுக்கும் இடங்கொடாமற்போக்கி, அங்கு - புன்னைமாச்சோலையாகிய அவ்விடத்தில், உள்ள - யாம்கட்டியுள்ள, ஊசல் - அறுந்துபோனகொடியூஞ்சலை, துடைத்து - மீட்டும்கட்டி அதிலுள்ளவருத்தத்தைப்போக்கின, அன்பர் - எம் தலைவருடைய, கால்சுவடு - தேர்க்கால்சென்றவழியை, துடையேல் - அழித்துவிடாதேகொள்; (எ - று.)

கடலே! எம்தலைவர்வந்துசென்றதேர்க்காலின் சுவட்டைத்துடைக்காதே என்பதாம். கைக்கிளையில் தலைவனைநோக்கியவுடன் தனக்குண்டாகிய காமத்துன்பத்தைநீக்கினமையால் புரைதுடைத்தென்றாள். கடல்தெய்வத்தைக்காட்டி உன்னைப்பிரியேன்என்று சத்தியஞ்செய்ததனால்தான் வேறுகருதாதபடிமெய்யென்பாள் பொய்யுந்துடைத்தென்றாள். பிரிந்தால் தலைவிக்குவேறுபாடுண்டாகுமே அதனைப் பிறர்கண்டால் பழிப்புக்கு இடமாகுமேயென்று பிரியாதிருந்தமை தோன்றப் பிறர்புகலுமுரைதுடைத்தென்றாள். ஊசல் - அடும்புமுதலிய கொடிகளை ஒன்றாகத்திரித்து மரக்கிளைகளில்கட்டித்தொங்கவிட்டு அதிலே ஊஞ்சலாடுதல் இக்காலத்திலுமுளது. இரங்கலால்நெய்தற்றிணையாயிற்று. தலைவியைப்புணர்ந்த பின் தலைவன் யாதேனும் ஒருகாரியத்தின்மேற்பிரிகின்றது ஒருவழித்தணத்தலாம். அங்ஙனம்பிரிந்த தலைவன் குறித்தநாளில் வாராமல்தாமதித்ததனால் தலைவி கடலைநோக்கிப் புலம்புவது துறையின் கருத்து. இதுபோல "நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர், ஊர்ந்தவழிசிதைய வூர்ந்தாய் வாழி கடலோதம்" என்றார்பிறரும். கை

கோள் - களவு. கூற்று - தலைவிகூற்று. காலம் - எதிர்காலம். மெய்ப்பாடு - அழுகை. பயன் - கடலொடுபுலம்பியாற்றுதல். (௬௭)

சுவடிறக் கத்தொட ராசைக் களிற்றைத் தொடர்ந்திரண்டு
கவடிறக் கட்டிய பாசத் தளைகண் டரிந்துசங்கக்
குவடிறக் குத்திய மாறப் பெயர்க்கொலை யானைநங்கா
யிவடிறத் தொன்றும் படரந்தி வான மிருள்கின்றதே.

பொருள்—அகப்புறம்.
திணை—நெய்தல்.
கிளவி—ஒருசார்பகற்பகுதி.
துறை—பாங்கிபுலம்பல்.

உரை :—நங்காய் - பெண்ணே! படர் - துன்பத்தைச்செய்கின்ற, அந்தி - மாலைவேளையாகிய இப்பொழுது, வானம் - ஆகாயமெங்கும், இருள்கின்றதே - இருள்மூடுகின்றதே; இரண்டு கவடு இற - தலையில் கவையாயுள்ள இரண்டுகட்டுத்தறிகளையும் ஒடியும்படியாக, கட்டிய - கட்டியிருக்கிற, பாசத்தளை - அன்பாகிய சங்கிலிகளை, கண்பரிந்து அறுத்தெறிந்து, தொடர் - தன்னைத்தொடர்ந்த, ஆசை களிற்றை - ஆசையாகியயானையை, சுவடு இறக்க - அடிச்சுவடுதெரியாமல் ஒடிப்போம்படி, தொடர்ந்து - பின்தொடர்ந்து வெருட்டி, சங்கம் - தமிழ்ச்சங்கமாகிய, குவடு இற - மலையானதுசிதறும்படி, குத்திய - குத்திப்பெயர்த்த, மாறப்பெயர் - மாறனென்னும்பெயருடைய, கொலையானை - கொலைசெய்யவல்லயானையானது, (இன்று), இவள் திறத்து - இவள் நிமித்தமாக, ஒன்றும் - வருமோ? (எ - று)

நங்கையே! அந்திவானமிருண்டுவிட்டதே; சுற்றத்தாரிடத்தெழுகின்ற அன்பாகிய சங்கிலியை அறுத்தெறிந்து தன்னைத்தொடர்ந்த ஆசையாகியயானையை அடிதெரியாமலோடிப்போம்படிவெருட்டிச் சங்கமாகிய மலையைக்குத்திப்பெயர்த்த மாறனாகிய கொலையானை இவள்நிமித்தமாக இன்றுவருமோ? என்பதாம். பேருணவைக்கொள்கின்ற யானைபோல பெரும்பொருளைப்பற்றவிரும்புவதனால் ஆசையை யானையாக உருவகப்படுத்தினார். இரண்டுகவடு இற - உட்பகைபுறப்பகையாகிய இரண்டுவஞ்சனையும் அழிபடஎனவுமாம். சுற்றத்தை நீங்காமல் பிணித்தலால் அன்பைத்தளையென்றார். சினந்து மலையைமுட்டிப்பெயர்த்தல் யானைக்கியல்பாதலால் ஆழ்வார் பாடல் - சிறுசங்கத்தவரைவென்றமை தோன்ற அதனைமலையாகக்கூறினார். அன்னியமான பொய்ச்சமயங்களை அழித்தலினால் ஆழ்வாரைக் கொலையானையாகக்கூறினார்; எனவே இத்துறைமுழுதும் உருவகமாகக் கூறினமையால் முற்றுருவகமாயிற்று. இரங்கலால் திணைநெய்தலாயிற்று. இருவரையும் மணஞ்செய்விக்க எண்ணியதோழி அவ்விருவரையும் குறியிடத்துச்சேர்ப்பியாமல் தந்திரஞ்செய்தலால் தலைவன்புலந்து அப்பால் போதலும் மற்றையோர்கூற்றுநிகழ்தலின் ஒருசார்பகற்குறியாயிற்று. (௬௮)

இருளாய்ப் பரந்த வுலகங் களைவிளக் கும்பிரவி
பொருளாய்ப் பரந்தது தான்பொது நிற்றலின் மற்றதுபோன்
மருளாய்ப் பரந்த மயக்கத் துயக்கற்ற மாறனெங்கோ
னருளாற் சமயமெல் லாம்பர னுண்டென் றறிவுற்றதே.

உரை;—இரவி அது தான் - சூரியனுனது, பொருள் ஆய் பரந்து - காணும் பொருளாகி, பொது நிற்றலின் - பொதுவாய் நிற்றலினல், இருள் ஆய் பரந்த - இருள் மிகுத்துப் பாவிய, உலகங்களை - உலகங்களையெல்லாம், விளக்கும் - அவ்விருளைப் போக்கி விளங்கச் செய்யும்; அது போல் - அதனைப்போல, மருளாய் - மனமயங்கும்படி, பரந்த - பாவிய, மயக்கம் - மாயையினது, துயக்கு அற்ற - துன்பம் நீங்கப்பெற்ற, எங்கோன் மாறன் - எங்கள் தலைவரும் மாறனென்னும் பெயருடையவருமாகிய நம்மாழ்வாருடைய, அருளால் - கருணையினல், சமயம்எல்லாம் - எல்லாச்சமயமும், பரன் உண்டு என்று - தங்களுக்கு நாராயணனே முதற்கடவுளாக உளனென்று, அறிவு உற்றது - அறிந்து கொண்டது.

சூரியன் தான் பொதுவாய் நின்று உலகத்தின் இருளைப்போக்கிப் பொருள்களை அறிவிக்கும்; அதுபோல நம்மாழ்வார் கருணையானது எல்லாச் சமயத்தவர்களிடத்திலுமுள்ள அஞ்ஞானத்தை நீக்கி மெய்ப்பொருளைத்தெரிவித்தலால் எல்லாரும் நாராயணனே முதற்கடவுளாக வுளனென்றறிந்து கொள்ளலாயிற்றென்பதாம். எவ்விதத்தாலும் நீங்குதலருமை நோக்கி மருளாய்ப் பரந்த மயக்கென்றார். பிறந்தபொழுதே பற்றின்றி நின்றமையால் துயக்கற்ற மாறனென்றார். விளக்கும் மிரவு, ம் - விரித்தல் விகாரம். அது - பகுதிப் பொருள் விகுதி. தான் - சாரியை. மற்று - அசைநிலை. எல்லாம் - தொகுதி யொருமையாதலின் ஒருமை முடிபு கொண்டது. (௪௯)

அறிவே யுனைத்தொழு தேன்மற்றை யாகம வாதியரைச்
செறிவே னெனவொன்று சிந்தைசெய் யாதுசெய் தாரையில்லா
நெறிவேத நின்ற நிலையுணர்ந் தோன்குரு கூர் நிலத்தைப்
பிறிவே னெனவுமெண் ணைதென்னை வீடு பெறுத்தினையே.

உரை;—மற்றை - வேத சம்பந்த மில்லாத, ஆகம வாதியரை - ஆகம நூல்களைக்கொண்டு வாதம் புரிவோரை, செறிவேன் என - யான் அடைவேனென்று, ஒன்று - இவ்விஷயத்திலை, சிந்தை செய்யாது - கருதாமல், செய்தாரை இல்லா - ஒருவராலுஞ் செய்யப்படாத, நெறி - நல்ல வழி கூறுகின்ற, வேதம் - வேதத்தில், நின்ற - பொருந்தியுள்ள, நிலை - தத்துவ நிலைகளை, உணர்ந்தோன் - அறிந்தவரான நம்மாழ்வாரவதரித்த, குரு கூர் நிலத்தை - திருக்குருகூரென்னும் திவ்விய தேசத்தை, பிறிவேன் எனவும் - நான் பிரிந்துபோவேனென்றும், எண்ணாது - நினையாமல், என்னை ———, வீடு பெறுத்தினை - மோக்ஷத்தைப் பெறச் செய்தனையாதலால், அறிவே - எனது அறிவே! உனை - உன்னை, தொழுதேன் - வணங்குகின்றேன்; (எ - று.)

ஆகமவாதியரை நான் சேர்வேனென்று நினையாமலும் ஆழ்வார் குருகூரைப் பிரிவேனென்றெண்ணாமலும் எனக்கு மோக்ஷமடையச் செய்தனையாதலால் அறிவே! உனைத் தொழுதேனென்பதாம், மற்றை யாகம மென்றதனல் 'அங்கம், பூர்வம், பகுசுருதி' என்கின்றசைனுகம முதலியவற்றை யென்க. வேதம் அநாதியாதலால் செய்தாரையில்லா மறை யென்றார். நின்ற நிலை - நாராயணனுக் கேபரத்துவங் கூறிய நிலை. பிறிவேன், பிறி - பகுதி. (௫0)

பெறும்பாக் கியமுள்ள போதும் பிழைப்புமுண் டேபிறர்பால்
வெறும்பாக் களைத்தி மெலிகின்ற வென்னை வினைகொடுபோ
யெறும்பாக் கியதமி யேனை யமரார்க்கு மேறவிட்டான்
குறும்பாக் கியமுப் பகைதவிர்த் தாண்ட குருகைமன்னே.

உரை :—குறும்பு ஆக்கிய - பெரியோரால் இவை குற்றமென்று நீக்கப்பட்ட, முப்பகைதவிர்த்து - 'காமம் வெகுளி மயக்கம்' என்னும் மூன்று உட்பகைகளைப்போக்கி, ஆண்ட - அடிமைகொண்ட, குருகை மன் - திருக்குருகூர்த்தலைவராகிய நம்மாழ்வார், பிறர் பால் - அன்னியரிடத்தில், வெறும்பா களைத்தி பயனற்றபாடல்கள்பாடி, மெலிகின்ற என்னை - தளர்கின்றேனும், வினை - தீவினையானது, கொடுபோய் - கொண்டுசென்று, எறும்பு ஆக்கிய - எறும்பளவாகச்சிறுமைப்படுத்திய, தமியேனை - தனிமையேனுமாகிய என்னை, அமரார்க்கும் - தேவர்களுக்கும், ஏறவிட்டான் -மேலாகச்செய்தருளிவிட்டார் ; (ஆதலால்), பெறும் பாக்கியம் உள்ளபோதும் - ஒருவர்பெறக்கூடியசெல்வமுள்ளகாலத்தில், பிழைப்பும் - அதற்கு ஒருகெடுதியும், உண்டே-உண்டாமோ ? [இல்லை.]

குருகூர் நம்மாழ்வார் மெலிகின்றேனும் தமியேனுமாகிய என்னை அமரரிலுமேலாகச்செய்துவிட்டாராதலால் ஒருவர் பெறக்கூடிய செல்வமுள்ளகாலத்தில் அதற்கொருகெடுதியுமுண்டாமோ? இல்லையென்பதாம். பிறரைப்பாடி இம்மைப்பயன்சிறிதுபெற்றாலும் மறுமைக்குப் பயன்படாமையால் வெறும்பாவென்றார். எறும்பு - சிறுமைப்பொருளுணர்த்தற்குக்கூறினார். தீவினையில் தனக்குஒத்தவரில்லையென்பார் தமியேனென்றார். அமரர் - அமிருதமுண்டு சாவாமலிருக்கப்பெற்றதனால் அமரரெனப்பட்டார். காமம் - வேறொருபொருளின்மேற்செல்லும் பற்றுள்ளம். வெகுளி - கோபம். மயக்கம் - ஒன்றனை வேறொன்றாகக் கருதுதல். ஆளுகைக்குரியோரரசரென்பதுதோன்ற ஆண்டமன்னென்றார். போது - பொழுது என்பதன் மரூஉ. உண்டே, ஏ - எதிர்மறைப் பொருள்படநின்றது. கொடு - கொண்டுஎன்பதன்தொகுத்தல்விகாரம். அமரார்க்கும் - ஐந்தனுருபுமயக்கம்; எல்லைப்பொருளது. மன் - எழுவாய். விட்டான் - பயனிலை. இதன் முதலடி வேற்றுப்பொருள்வைப்பணி.

குருகூர் நகரெம் பிரானடி யாரொடுங் கூடியின்புற் [றா
ரொருகூ ரையிலுறை வார்க்குமுண் டேயெம்மை யுள்ளுஞ்சுற்
றிருகூர் வினையு மறுத்திறப் பார்க்கு மியற்கையவ்வூ
ரருகூ ரருகி லயலய லார்க்கு மரியதன்றே.

உரை :—எம்மை - எங்களை, உள்ளும் சுற்றும் - உள்ளேயுஞ்சுற்றிக்கொண்டிருக்கிற, கூர் - மிகுந்த, இருவினையும் - நல்வினைதீவினையாகிய விரண்டும், அறுத்து - போக்கி, இற பார்க்கும்-அவைகளழியும்படியாகப் பார்க்கின்ற, இயற்கை- இயற்கையானது, குருகூர்நகர்-திருக்குருகூரென்னும்பதியில், எம்பிரான் - எழுந்தருளியிருக்கிறதலைவரான நம்மாழ்வார்க்கு, அடியாரொடு- தொண்டருடன், கூடி - சேர்ந்து, இன்புற்று- மகிழ்ந்து, ஒருகூரையில் - ஒரேவீட்டினுள், உறைவார்க்கும் -வசிக்கின்ற எங்களுக்கும், உண்டு- உண்டாகும்; (அப்படிப்பட்ட இயற்கையானது), அவ்வூர் அருகூர் - அந்த அடியாரிருக்கிறஊருக்கருகிலுள்ள ஊரிலிருப்பார்க்கும், அருகு இல் - அவர்வீட்டின்சமீபத்திலுள்ள, அயல்அயலார்க்கும் - அயல்வீட்டுக்கயல்வீட்டிலுள்ளவர்களுக்கும், அரியது அன்று - அரியதொருகாரியமில்லை ; (எ - று.)

எம்மைச்சூழ்ந்துள்ள இருவினைப்பற்றை யொழிக்கு மியல்பானது நம்மாழ்வாரி னடியவரோடுவாழ்கின்றவெமக்குண்டு; அவ்வியல்பானது அவ்வூருக்கு அயலூர் அவ்வீட்டுக்கு அயல்வீடு இவற்றிலிருப்பவர்களுக்கும் அரியதொருகாரியமில்லை என்பதாம். உண்டே, ஏ - தேற்றம். உள்ளும், உம் - இறந்ததழுவியவெச்சம். இறப்பு ஆர்க்கும் என்றுபிரித்து இறத்தலைச்செய்யும் என்றும் பொருள்கொள்ளலாம். அவ்வூர் - அடியாரிருக்கும் ஊரென்பதேபொருந்தியவுரை. (ருஉ)

அன்றாத வன்றிலை யும்மன் றுவித்தென்னை யன்னையுடன்
பின்றாத வண்ணமெல் லாம்பின் றுவித்துப் பிறைக்கொழுந்தை
யொன்றாத வண்ண முபாய மியற்றிய வூழ்வினையை
வென்றான் குருகைப் பிரான்மகி ழேயன்றி வேறில்லையே.

பொருள்—அகப்புறப்பொருள்.
திணை—பெருந்திணை.
துறை—மாலையால் வந்த வருத்த முரைத்தல்.

உரை :—அன்றாத - பகைமைகொள்ளாத, அன்றிலையும் - அன்றிற் பறவைகளையும், அன்றுவித்து - பகைமையாக்கி, என்னை——, அன்னையுடன் - தாயோடு, பின்றாதவண்ணம் எல்லாம் - மாறுபடாதவகையெல்லாம், பின்றுவித்து - மாறுபடச்செய்து, பிறைக்கொழுந்தை - இளமையாகியசந்திரனை, ஒன்றாதவண்ணம் - என்மனத்தோடு பொருந்தாதபடி, உபாயம் இயற்றியது - தந்திரஞ்செய்தது, (யாதோவெனில்?) ஊழ்வினையை - பழவினைத்தொடர்ச்சியை, வென்றான் - நீக்கினவராகிய, குருகைப்பிரான் - திருக்குருகூர்நம்மாழ்வருடைய, மகிழே அன்றி - மகிழ மலர்மாலையேஅல்லாமல், வேறில்லை - வேறொன்றுமிப்படிச்செய்யவில்லை; (எ - று.)

தலைவனைப் பிரிந்த தலைவிக்கு அன்றில்கத்துகிறவோசை செவியிற்பட்டால் விரகத்தையதிகப்படுத்துமென்பதுபற்றி அன்றிலைவிரோதப்படுத்தி என்றார். தலைவனைப்பிரிந்திருக்கிறபொழுது உள்ளம் தலைவனிடத்தே செல்லுமாதலால் அப்பொழுது அருகிலிருந்த தாய் கேட்பதற்குத் தக்கவிடைகொடாமைபற்றி அன்னையுடன் விரோதப்படுத்தி என்றார். பிரிந்தார்க்கு நிலவு வருத்தத்தைச்செய்யுமாதலால் அதனையும் விரோதித்து என்றார். அன்றுதல் - விரோதித்தல்; அன்றுவித்து, வி - பிறவினைவிகுதி. வென்றான் - வினைப்பெயர். மகிழே, ஏ - தேற்றம். அன்றி - எதிர்மறைவினையெச்சம். வேறுஇல்லை - குறிப்புமுற்றுக்கள்.

வேறே நமக்கிவ னன்புடை மெய்யடி யானென்றுள்ளந்
தேறே னெனலது தேறத் தகுஞ்செந் தமிழ்ப்புலவர்க்
கேறே யெதிகளுக் கின்னமு தேயெறி நீர்ப்பொருநை
யாறே தொடர்குரு கூர்மறை யோர்பெற்ற வாணிப்பொன்னே.

உரை :—செந்தமிழ்ப்புலவர்க்கு ஏறே - செவ்வியதமிழ்பயின்ற வித்துவான்களுள் சிங்கம்போன்றவரே! யெதிகளுக்கு-முற்றத்துறந்தமுனிவர்களுக்கெல்லாம், இன் - இனிமையாகிய, அமுதே - அமிர்தம்போன்றவரே! எறிநீர்-அலைவீசுகின்றநீர்ப்பெருக்கையுடைய, பொருநையாறே-தாமிரபருணிநதியானது, தொடர் - தொடர்ந்துவரப்பெற்ற, குருகூர் - திருக்குருகூரிலுள்ள, மறையோர் - அந்தணர்கள், பெற்ற - அடையப்

பெற்ற, ஆணிப்பொன்னே - மாற்றறியும்பொன்போன்றவரே! 'இவன்- இந்தக்கம்பன், நமக்குவேறே-நமக்கு அன்னியனானவனே, அன்புடை- அன்புபொருந்திய, மெய்யடியானென்று -உண்மையான அடியவனென்று, உள்ளம்தேறேன் - நான் மனத்தில்தெளியமாட்டேன்,' எனல் - என்று தள்ளாதொழிக; அதுதேறத்தகும் - அது நம்பவேண்டியகாரியமாகும்; (எ - று.)

ஏறே! அமுதே! குருகூர்ப்பொன்னே! இவன்வேறானவனென்றும் இவனைத்தெளியமாட்டேனென்றும் சொல்லாதருள்செய்க. அது நம்பவேண்டியகாரியமாகுமென்பதாம். எல்லாரிலும் சிறந்தமைபற்றி ஏறென்றார்; அழியாவாழ்க்கை கொடுத்தல்பற்றி அமுதென்றார்; பிறர் கவியின் ஏற்றத்தாழ்வுகளை அறிதற்குத்தக்கபாடல்கள் செய்தமையால் வேறுபொன்னையறியுமாற்றுப்பொன்னென்றார். இம்மூன்றும் உவமையாகுபெயர். எனல் - எதிர்மறை அல்லீற்றுவியங்கோள். தகும் - இது தொழிற்பெயராய்த்தேற்றப் பொருள்பட்டுநிற்குஞ்சொல். (௧௪)

பொன்னை யுரைப்பதப் பொன்னொடன் றேபுலமைக்கொருவ
ருன்னை யுரைத்துரைத் தற்குள ரோவுயர் நாற்கவியும்
பின்னை யுரைக்கப் பெறுவதல் லாற்பெருந் தண்குருகூர்த்
தென்னை யுரைக்கு மியற்கு மிசைக்குஞ் சிகாமணியே.

உரை:—பெரும் - பெரிய, தண் - நீர்வளமிக்க, குருகூர் - திருக்குருகூரிலவதரித்தருளிய, தென் - தென்றிசைக்கண்ணதாகிய, ஐ - அழகிய, உரைக்கும் - தமிழ்மொழிக்கும், இயற்கும் - அதன்பகுதியாகிய இலக்கணத்திற்கும், இசைக்கும் - இசைத்தமிழ்க்கும், சிகாமணியே - சிரோரத்தினம் போன்றவரே! பொன்னை ———, உரைப்பது - உரைத்துமாற்றுப்பார்ப்பது, அ - அந்த, பொன்னொடு அன்றே - பொன்னுடனேயல்லவோ? (பார்ப்பது), புலமைக்கு - கல்வியறிவிற்கு, உயர்- உயர்ந்த, நாற்கவியும்-ஆசுமதுரசித்திரவித்தார கவிஞர்களையும், பின்னை- கடைசித்தரத்தில், உரைக்கப்பெறுவது அல்லால் - சொல்லத்தக்கதேயல்லாமல், உன்னை உரைத்து - முதலில் உம்மைக்கூறி, உரைத்தற்கு- உமக்கு ஒப்பாக உரைப்பதற்கு, ஒருவர் - வேறொருவர், உளரோ - இருக்கிறார்களோ? [இல்லை;] (எ - று.)

குருகூர்ச்சிகாமணியே! பொன்னை மாற்றுப்பார்ப்பதென்றால் பொன்னோடன்றோ வுரைத்துப்பார்ப்பது; அதுபோல உம்முடைய பெருமையை அறிவதென்றால் உம்மோடொத்த ஒருவரைக்காட்டியன்றோ அறியவேண்டும் அப்படியாருக்கிறார்கள்? ஒருவருமில்லையேயென்பதாம். நாற்கவி - திருமங்கையாழ்வாருமாம். புலமை - பலவேறுவகைப்பட்ட நூலுணர்ச்சிகளெல்லாம் ஒருங்கேகொண்ட பேரறிவுடைமை. ஏனையமொழிகளைப்போலாகாமல் சிறந்த பொருளிலக்கணத்தைத் தன்னிடத்தில் கொண்டிருத்தலால் ஐயுரையென்றார். ஆழ்வார் பிரபந்தத்தில் இலக்கணஅமைதி மிக்கிருத்தலாலும் அப்பிரபந்தம் பண்ணோடு பாட அமைந்திருத்தலாலும் அவ்விடயங்களைக்கொண்டு இயற்கும் இசைக்கும் சிகாமணி யென்றார். இதன்முதலடி எடுத்துக்காட்டுவமையணி, (௧௫)

## மறம்.

மணித்தா ரரசன்ற னோலையைத் தூதுவன் வாய்வழியே
திணித்தா சழியச் சிதைமின் றலையையெந் தீவினையைத்
துணித்தான் குருகைப் பிரான்றமிழாற்சுருதிப்பொருளைப் [யே.
பணித்தான்பணியன்றெனிற்கொள்ளுங்கொள்ளுமெம் பாவையை

மறம் - பல்வரிக்கூத்தில் ஒன்று ; அதுதான் மறவரின் மகளைவிரும்பிவிட்ட அரசனது தூதனைநோக்கிக் கடிந்து மறவரியல்பு தோன்றக் கூறுவது. வரிக்கூத்து - நாடகத்தமிழ்நூல்களிற் காண்க. பல்வரிக் கூத்திற் சிலவுறுப்புக்கள் கலம்பகமுதலியவற்றிற் காணலாம்.

உரை :-சுருதிப்பொருளை - வேதப்பொருள்களை, தமிழால் - தமிழ்ப் பாடல்களால், பணித்தான் - பாடியருளினவரும், எம் - எம்முடைய, தீவினையை - தீயவினைகளை, துணித்தான் - போக்கினவருமாகிய, குருகைப்பிரான் - குருகூர் நம்மாழ்வாரின், பணி அன்றெனில் - கட்டளையில்லையென்றால், (எம் பெண்ணைவிரும்பிய), மணித்தார் - இரத்தினமாலைகளணிந்த, அரசன்தன்-அந்த அரசனது, ஓலையை- திருமுகத்தை, தூதுவன் - அதனைக்கொணர்ந்த தூதுவனது, வாய்வழியேதிணித்து - வாயில்வைத்து நன்றாக அடைத்து, ஆசு - 'பெண்ணைக்கொடு' என்ற குற்றமெல்லாம், அழிய - நீங்கும்படி, தலையை - அத்தூதுவன் தலையை, சிதைமின் - வெட்டியெறியுங்கள் ; எம்பாவையை - எமதுபாவைபோல் வாளாகிய பெண்ணை, கொள்ளும் கொள்ளும்- நன்றாகக் கொள்வானேபோலும் ; (எ - று.)

வாயைத்திறந்திருந்தால் - பேரிரைச்சலிடுவானாதலின் முதலில் வாயை அடையுங்களென்றதாம். ஆழ்வாருக்கு அடிமையென்றறிந்திருந்தும் பெண்கேட்கவந்தது குற்றமாதலின் ஆசென்றதாம்; "மாதரைக் கொன்றுளார்களுளரென வரினும் வந்த, தூதரைக் கொன்றுளார்கள் யாவரே தொல்லை நல்லோய்" என்றபடி தூதரைக்கொல்லலாகாதேயெனின் அஃது அறப்போர்க்கேயன்றி மறப்போர்க்கில்லாமையால் வதைக்கஅமையுமென்க. கொள்ளும் கொள்ளும் - வெகுளிபற்றிவந்த அடுக்கு. பாவை - உவமையாகுபெயர் ; ஃது கொல்லிமலையில் தேவரும் முனிவருஞ்சேர்ந்துறையுங்காலத்து அங்குவந்து துன்புறுத்திய அசுரரை மயக்கவேண்டித் தேவதச்சனால் யந்திரத்தோடு செய்துவைத்திருந்ததொரு பெண்வடிவம் ; இது அவ்வசுரரைக்கண்டால் சிரித்துமயக்கிக்கொல்லுவது. (௫௬)

பாவைத் திருவாய் மொழிப்பழத் தைப்பசுங் கற்பகத்தின்
பூவைப் பொருகடற் போதா வமுதைப் பொருள்சுரக்குங்
கோவைப் பணித்தவெங் கோவையல்லா லென்னைக் குற்றங்கண்
னாவைப் பறிப்பினு நல்லரன் றேமற்றை நாவலரே. [டென்

உரை :—திருவாய்மொழி பழத்தை - திருவாய்மொழியென்னுஞ் சுவையுள்ள கனிபோன்றதும், பசுங்கற்பகத்தின் - பசுமையாகிய கர்பக மரத்தினது, பூவை - மலர்போன்றதும், பொருகடல் - மோதுகின்ற கடலில் நின்றும், போதா - வாராத, அமுதை - அமுதம்போன்றதும், பாவை-பாட்டாகியுமுள்ள, பொருள் - நால்வகைப்பொருளையும், சுரக்கும் - ஊற்றுமாறாதே பெய்வதாகிய, கோவைபணித்த - காமதேனுவை

யொத்த, எம் கோவை - எங்களிறைவராகிய நம்மாழ்வாரை, அல்லா - விரும்பாத, என்னை ———, குற்றம் கண்டு - முன்னமே பாடாதகுற்றத்தையறிந்து, மற்றை நாவலர் - இனிவேறுள்ளபுலவர்கள், என் - எனது, நாவை - நாக்கினை, பறிப்பினும் - பிடுங்கினாலும், நல்லர் அன்றோ - நல்லவரல்லரோ? [நல்லவரே.] (எ - று.)

திருவாய்மொழிபாடியருளிய நம்மாழ்வாரை விரும்பாத என்னை அவரை முன்னமேபடாதிருந்த குற்றத்திற்காக மற்றை நாவலர் எனது நாக்கைப்பிடுங்கிவிட்டாலும் அது நல்லதேயாகுமென்பதாம். எங்கும் பரவிசிறப்பதென்னும் பொருளுந்தோன்றப்பாவென்றார், சுவையறிவார்க்குச் சுவைமிக்கிருத்தலினால் பழமென்றார். கேட்கக்குளிர்ந்திருத்தலின் கற்பகமலரைக்கூறினார். கடலிற்றோன்றிய அமுதம் எடுக்கக் குறைந்தும் உண்டதனாலெச்சிற்பட்டுமிருத்தலால் போதாவமுதென்றார். நால்வகைப்பொருள் :—அறம், பொருள், இன்பம், வீடு. நாவினால் வருணித்துச் சொல்லுஞ் சொல்லில் வல்லவராதலின் நாவலரெனப்பட்டார். நல்லதன்றோ எனறு பாடங்கொள்ளுதல் நேர். அன்றோ, ஓ - எதிர்மறை; இரண்டெதிர்மறை ஒரு உடன்பாட்டையுணர்த்தியது. இது ஒருபொருண்மேற் பலபெயரடுக்கிவந்து முடிக்குஞ்சொல் ஒன்றனைக்கொண்டது. (௫௭)

நாவலந் தீவிற் கவிகளெல் லாஞ்சில நாள்கழியப்
பூவலந் தீவது போல்வவல் லாற்குரு கூர்ப்புலவன்
கேவலந் தீங்கறுப் பான்கவி போலெங்கும் போய்க்கெழுமா
கூவலந் தீம்புன லுங்கொள் ளுமேவெள்ளங் கோளிழைத்தே.

உரை :—நாவல் அம் தீவில் - அழகிய சம்புத்தீவில், கவிகள் எல்லாம் - பிறர்பாடிய பாடல்களெல்லாம், சில நாள் கழிய - சிலநாட்கள் சென்றபின், பூ - மலர், வலம் - மணம்முதலிய வன்மைகள், தீவது போல்வ அல்லால் - கெட்டழிதல்போல்வனவாகிக் கெடுமேயல்லாமல், குருகூர் - திருக்குருகூரில் அவதரித்த, புலவன் - புலவரும், தீங்கு - உயிர்களின் குற்றங்களை, கேவலம் - முழுவதும், அறுப்பான் - ஒழிப்பவருமாகிய நம்மாழ்வாருடைய, கவிபோல் - திருவாய்மொழிப் பாடல்களைப்போல, எங்கும்போய் - எவ்விடத்தும்பரவி, கெழுமா - விளங்காதனவாகும்; கூவல் - கிணற்றிலுள்ள, அம்தீம்புனலும் - அழகிய இனிய நீரானதும், வெள்ளம் - பெருவெள்ளத்தை, கோள் இழைத்துக்கொள்ளுமே - தாழ்மைப்படுத்தி மேற்கொள்ளுமோ? [கொள்ளாது.] (எ-று.)

உலகத்தில் பிறர்பாடல்கள் சிலகாலத்தில் கெட்டழிந்துபோகுமேயல்லாமல் நம்மாழ்வார் பாடல்கள்போல எங்கும் போய்ப்பரவாவாம்; கிணற்றுநீர் பெருவெள்ளத்தைத் தாழ்மைப்படுத்த இயையுமோ இயையாதென்பதாம். பூ மலர்ந்தவுடன் மணம் வீசிப்பின்பு இல்லாமற்போவதுபோலப் பிறர்கவிகள் பாடும்பொழுது வெகுசிறப்புப்போலத் தோன்றிப் பின்பு பயன்படாதெனக் கொள்க. நாவலம், அம் - சாரியையுமாம். தீவது - தொழிற்பெயர். அறுப்பான் - வினைப்பெயர். கெழுமா - எதிர்மறைப்பலவின்பால்முற்று. கொள்ளுமே, ஏ - எதிர்மறைப்பொருளில் வந்தது. இதன் கடையடி எடுத்துக்காட்டுவமையவணி

இழைத்தா ரொருவரு மில்லா மறைகளை யின்றமிழாற்
குழைத்தார் குருகையிற் கூட்டங்கொண் டார்கும ரித்துறைவர்
மழைத்தார் தடக்கைக ளாலென்னை வானின் வரம்பிடைநின்
றழைத்தா ரறிவுந்தந் தாரங்கும் போயவர்க் காட்செய்வனே.

உரை:—(கடவுளைத்தவிர), இழைத்தார் - செய்தவர், ஒருவரும் இல்லா - வேறு யாரு மில்லாத, மறைகளை - வேதத்தின் பொருள்களை, இன்தமிழால் - இனிய தமிழ் மொழியினலே, குழைத்தார் - செய்தருளினவரும், குமரித்துறைவர் - கன்னியாகுமரி யென்னுந் தீர்த்தத்தையுடையவருமாகிய, குருகையில் - குருகூரில், கூட்டம் கொண்டார் - அடியார் கூட்டத்தோடு எழுந்தருளியிருக்கிற நம்மாழ்வார், வானின் - பரமபதத்தினது, வரம்பிடை நின்று - எல்லையினுள்ளிருந்து, மழைத்து - மேகத்தினது தன்மை, ஆர் - நிரம்பிய, தடம் - பெரிய, கைகளால்——, என்னை அழைத்தார் - என்னை வாவென்றழைத்தார் ; (அங்ஙனம் அழைத்ததன்றி), அறிவும் தந்தார் - அங்கே செல்வதற்கு வேண்டிய அறிவையும் கொடுத்தார் ; (ஆதலால் யான்), அங்கும் போய் - அவ்விடத்துஞ் சென்று, அவர்க்கு - அந்த ஆழ்வாருக்கு, ஆட் செய்வன் - அடிமைத் தொழில் செய்வேன் ; (எ - று.)

வேதப் பொருளைத் தமிழில் விரித்துரைத்த குமரித்துறைவராகிய குருகூர் நம்மாழ்வார் பரமபதத்திலிருந்து தடக்கைகளால் என்னை வாவென்றழைத்தாராதலால் நான் அங்கும் போய் அவர்க்கு அடிமை செய்வேனென்பதாம். இழைத்தாரொருவரு மில்லாமறை யெனவே வேதம் கடவுளா லமைக்கப்பெற்ற தென்பதாம். அளவிலாத இலக்கண இன்பமுடைமையின் இன்றமிழென்றார். கைமாறு கருதா அருள் செய்யுங் கைகளாதலால் மேகத்தின் தன்மைய வென்றார். அங்கும், உம்- இங்குத்துதித்ததன்றியும் என இறந்தது தழுவியவெச்சப் பொருளது.

ஆட்செய்ய லாவதெல் லாஞ்செய் தடியடைந் தேனதன்றிக்
தாட்செய்ய தாமரை யென்றலை யேற்றனன் றண்குருகூர்
நாட்செய்ய பூந்தொடை மாறனென் றேனினி நாட்குறித்துக்
கோட்செய்ய லாவதுண் டேயென்ற னாருயிர் கூற்றினுக்கே

உரை:—தண் - குளிர்ந்த, குருகூர் - திருக்குருகூரில் எழுந்தருளியிருக்கிற, செய்ய - சிவந்த நாள் பூ-அன்று பூத்தமகிழமலர்களாலாகிய, தொடை - மாலைகளையுடைய, மாறன் என்றேன் - நம்மாழ்வாரென்று கூறினேன் ; ஆள் - அவர்க்கு அடிமையாக, செய்யல் ஆவது எல்லாம் - என்னாற் செய்யக்கடவதெல்லாம், செய்து———, அடி அடைந்தேன் - அவர் திருவடிகளை யடைந்தேன் ; அது அன்றி - அதுவல்லாமல், செய்ய தாமரை தாள் - செந்தாமரை போன்ற அவர் திருவடிகளை, என்தலை எற்றனன் - என் தலையிற் சூடிக்கொண்டேன் ; இனி - இனிமேல், நாள் குறித்து - என் வாழ் நாளை உத்தேசித்து, என் தன் ஆர் உயிர் - எனது அரிய உயிரை, கூற்றினுக்கு - யமனால், கோள் செய்யலாவது - குற்றப்படுத்தற்காவது, உண்டே - உண்டாகுமோ ? [உண்டாகாது] ; (எ - று.)

யான் குருகூரில் நம்மாழ்வாரைத் தியானித்து அடிமைத்தொழில் செய்து அவரடியை யடைந்து அப்பாதங்களைச் சிரத்திலணிந்து கொண்டேன் ; இனி யமன் என்னுயிரைக் கோளிழைக்க இயலுமோ வென்பு

தாம். தாளாகிய தாமரை யென்று நேரினும் பொருள் கொள்ளலாம். அவரே தெய்வமென உறுதியாக் கொண்டிருத்தலால் ஆட் செய்யலாவ தெல்லாஞ் செய்தென்றார். அன்றி - எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம். உண் டே, ஏ - எதிர்மறைப் பொருள் தோன்றி நின்றது. (சுo)

கூறப் படாமறை யின்பொருள் கூறிக் குவலயத்தோர்
மாறப் படாவினை மாற்றிய மாறன் மகிழலங்க
னாறப் படாநின்ற போதமு தாகுமன் றினஞ்சம்
தேறப் படாதுகெட் டேன்மன்ற னாறுந்தண் டென்றலையே.

பொருள்—அகப்புறப்பொருள்.
திணை—பெருந்திணை.
துறை—மாலை பெறமல் வருந்துவ துரைத்தல்.

உரை:—கூறப்படா - ஒருவராலுஞ் சொல்லப்படாத, மறையின் பொருள் - வேதத்தின் பொருள்களை, கூறி - தமிழ்ப்பாடல்களால் வெளிப்படுத்தி, குவலயத்தோர் - உலகத்தவராலே, மாறப்படா - நீக்கப் படாத, வினை - தீவினைகளை, மாற்றிய - போக்கியருளிய, மாறன் - நம் மாழ்வாருடைய, மகிழ் அலங்கல் - மகிழ மலர் மாலையானது, நாறப்படாநின்றபோது - மணம்வீசுகின்றகாலத்தில், அன்றில் நஞ்சம்அது - அன்றிலினுடைய விடத்தையொத்த ஓசையானது, அமுதாகும் - அமுதாக விருக்கும்; மன்றல் நாறும் - மணம் வீசுகின்ற, தண் தென்றலை - குளிர்ந்த தென்றல் காற்றினையும், தேரப்படாது - நம்புவதற்கிடமில்லை; கெட்டேன் - இனி யான் வாழமாட்டேன்; (எ - று.)

கூறப்படாமறை - மக்களால் கூறப்படாத வேதமெனக. நாருத இந்த வேளையில் அன்றிலோசை நஞ்சுபோலிருத்தலால் ஓசையை நஞ்சென்றார். தீண்டப் பெற்றவுடன் தலைக்கேறும் விடம்போல அன்றிலோசைகேட்டவுடன் விரகம்தலைக்கேறுதலால் நஞ்சமென்றலுமாகும். கெட்டேன் "இனியான் உண்ணலும் உண்ணேன்வாழலும் வாழேன்" என்பதையடக்கி 'பசியடநிற்றல்' என்ற மெய்ப்பாடுதோன்றி நின்றது; வேறு மெய்ப்பாடு கூறினும் அமையுமேல்கொள்க. (சுக)

தென்றலைத் தோன்று முபநிட தத்தையென் றீவினையை
நின்றலைத் தோன்று நியாய நெறியை நிறைகுருகூர்
மன்றலைத் தோன்று மதுரகவியை மனத்துள் வைப்பா
ரென்றலைத் தோன்றெம் பிரான்களென் னாவுக் குரியவரே.

உரை:—தென் தலை தோன்றும் - இவ்வுலகத்தின் தெற்குத்திசையிலே உண்டாகிய, உபநிடதத்தை - உபநிடதப் பொருளாயும், என் தீவினையை - என் தீவினைகளை, நின்று - நிலைகொண்டு, அலைத்து - போக்கி, ஒன்றும் - பொருந்திய, நியாய நெறியை - நியாயமார்க்க முடையதாயும், நிறை - எல்லா வளங்களும் நிறைந்துள்ள, குருகூர் - திருக்குருகூரிலெழுந்தருளிய, மன் தலை - நம்மாழ்வார் வாக்கில், தோன்றும் - உண்டாகுகின்ற, மதுரம் கவியை - சொற்சுவை பொருட்சுவையுடைய திருவாய்மொழிப்பாடல்களை, மனத்துள் - தங்கள் மனத்திலே, வைப்பார் - வைத்துக்கொண்டிருப்பவர்களே, என் தலை - என்னுடைய சிரத்தின் மேலே, தோன்றும் - விளங்கிய திருவடிகளையுடைய, எம்பிரான்கள் - எமது தலைவராவார்கள்; (அவர்களே), என் நாவுக்கு - என்னுடைய நாவினால் துதிப்பதற்கு, உரியவர் - தக்கவராவார்; (எ - று.)

திருக்குருகூர் நம்மாழ்வார் பாடியருளிய, திருவாய்மொழிப்பாடல்களை மனத்துள் வைப்பவரே என்றால் வணங்குவதற்கும் துதிப்பதற்கும் உரியவராவார் என்பதாம், தத்துவப் பொருளை உள்ளடக்கிக் கொண்டமையின் உபநிடதமென்றார். தருக்க நியாயத்தால் பரத்துவ நிர்ணயஞ் செய்தலால் நியாயநெறி யென்றார். வேதம்போலாகாது எல்லாச் சாதியாரும் படித்துச் சுவை காணுந் தன்மையினால் மதுரகவி என்றார். ஒன்று - ஒன்று, வென நீட்டல் விகாரம் பெற்றது. பிரான் - என்னும் னகர ஈறேயுடைமையின் 'கள்' என்ற விகுதி பெற்றது. (சுஉ)

உரிக்கின்ற கோடலி னுந்துகந் தம்மென வொன்றுமின்றி
விரிக்குந் தொறும்வெறும் பாழாய் விடும்பிறர் புன்கவிமெய்
தெரிக்கின்ற கோச்சட கோபன்றன் றெய்வக் கவிபுவியிற்
சுரிக்கின்ற நுண்மண லூற்றொக்குந் தோண்டச் சுரத்தலினே.

உரை:—பிறர் - அயலாருடைய, புல் கவி - புன்மையாகிய பாடல்கள், உரிக்கின்ற - இதழிதழ்களாகப் பகுக்கப்படுகின்ற, கோடலின் - வெண்காந்தள் மலரினின்றும், உந்து - வீசுகின்ற, கந்தம் என - மணத்தைப்போல, ஒன்றும் இன்றி - சொல் பொருள் அணி முதலிய யாதொன்றுமில்லாமல், விரிக்குந் தொறும் - பதங்களைப் பிரித்துப் பார்க்கும் போதெல்லாம், வெறும் பாழாய்விடும் - வீணே பயனற்றதாய்ப் போய்விடும்; மெய் - கடவுளின் உண்மை நிலையை, தெரிக்கின்ற - யாவர்க்குந் தெரியச் சொல்லுகின்ற, கோ - இறைவனாகிய, சடகோபன் தன் - நம்மாழ்வாருடைய, தெய்வக்கவி - தெய்வத்தன்மையுள்ள பாடல்கள், புவியில் - பூமியில், தோண்ட - பறிக்கப் பறிக்க, சுரத்தலின் - தண்ணீரூறுதலால், நுண்மணல் - மிகச்சிறியனவாகிய மணல்களை, சுரிக்கின்ற - சுற்றிலுமுடையதா யிருக்கின்ற, ஊற்று - மணலூற்றினை, ஒக்கும் - ஒத்திருக்கும்; (எ - று.)

பிறர்கள் பாடும் பாடல்களெல்லாம் மணமில்லாத கார்த்திகைப் பூவை ஒத்திருக்கும்; நம்மாழ்வார் பாடல்கள் ஆராயுந்தோறுஞ் சுவை ருதலால் தோண்டுந்தோறுஞ் சுரக்கின்றமணலூற்றினை யொத்திருக்குமென்பதாம். காந்தள் - கார்த்திகை. இது கார்த்திகை மாதத்தில் மலர்தலால் இப்பெயர் பெற்றதென்பர்; கார்த்திகை மலர் பார்வைக்கு அழகாயிருத்தல் போலப் பிறர்கவி படிப்பதற்கு ஓசை முதலியவை குறையாதிருப்பினும் அக் கார்த்திகைமலர் நறுமண மில்லாதது போல அப் பிறர் கவியும் சொற்சுவை பொருட்சுவை நிரம்பாமையால் பயனற்றதாய் விடுமென்றார். கந்தம்மென, மகரம் - விரித்தல் விகாரம் பெற்றது. தொறும் இங்குத் தொழிற் பயில்வுப் பொருளைத் தந்தது. பாழாய்விடும், விடு - துணிவுப்பொருள் விகுதி. சுரத்தலின் - மூன்றாம் வேற்றுமை ஏதுப்பொருள். (சுங)

சுரக்குந் திருவும் வறுமையுந் தீருந் தொடக்குவிட்டுக்
கரக்கு மிருவினை மேன்மையுங் காணுங் கயல் குதிப்பத்
திரக்குங் கழைநெடுந் தாளிற் றொடுத்தசெந் தேனுடைந்து
பரக்கும் பழன வயற்குரு கூர்வளம் பாடுமினே.

உரை;—திரக்கும் - முத்துக்கள் தெறித்து விழப்பெற்ற, கழை - கரும்புகளின், நெடும் தாளில் - நீண்ட தூறுகளிலே, தொடுத்த - கட்டி

ண, செம் தேன் - சிவந்த தேனடைகளானவை, (பக்கத்திலுள்ள குளங்களிலிருக்கின்ற,) கயல் குதிப்ப - கெண்டை மீன்கள் துள்ளி மோதிவிழுதலாலே, உடைந்து - உடைபட்டு, பாக்கும் - தேன் பரவுகின்ற, பழனவயல் - மிக்க வயல்கள் சூழ்ந்த, குருகூர் - நம்மாழ்வாரவதரித்த திருக்குருகூரின், வளம் - மகிமைகளை, பாடுமின் - பாடுங்கள் ;(அப்படிப் பாடினீர்களாயின்), திருவும் சுரக்கும் -செல்வமும் பெருகும் ; வறுமையும் தீரும் - தரித்திரமும் நீங்கும் ; இருவினை - நல்வினை தீவினையாகிய இரண்டும், தொடக்கு விட்டு - தொடர்ச்சி நீங்கி, கரக்கும் - மறைந்து போகும்; மேன்மையும் காணும் - மேலாகிய பரமபத தரிசனமுமாகும்.

ஜனங்களே ! நம்மாழ்வாரவதரித்த திருக்குருகூரின் மகிமையைப் பாடுங்கள் ; செல்வமுண்டாகும் ; வறுமை நீங்கும் ; இருவினைப்பற்றொழியும்; மேன்மை யுண்டாகு மென்பதாம். திரக்குதல் - தெறித்து விழுதல். கயல் குதித்தலால் தேன் உடைந்து வயல்களிற் பரவுதல் போலக் குருகூர் மகிமையைக் கூறுதலால் நம்மாழ்வாரின் கருணை உங்களுக்கு நிரம்ப உண்டாகிப் பரவும் என்பது தொகை மொழியின் கருத்தெனக்கொள்க. திருமுதலியவற்றுள்ள உம்மைகள் எண்ணுப்பொருளன. குதிப்ப - காரணப் பொருளில் வந்த செயவெனெச்சவாய்பாடு. பழனவயல் - இருபெயரொட்டு. (௯௪)

பாடுங் கறங்குஞ் சிறைவண்டு பாடப்பைந் தாட்குவளைத்
தோடுங் கறங்குங் குருகைப்பி ரானிச் சுழல்பிறவி
யோடுங் கறங்கன்ன வாழ்க்கையை நீக்கி யுணர்வுதவி
வீடுந் திறந்துதந் தானையெந் நான்றும் விடகிலமே.

உரை:—பாடும் - எப்பக்கங்களிலும், கறங்கும் சிறை - சுழலுகின்ற சிறகுகளையுடைய, வண்டு - வண்டுகள், பாட - சத்தித்து நெருங்குதலால், பை தாள் - பசுமையான தண்டுகளையுடைய, குவளை தோடும் -நெய்தல் மலரின் இதழ்களும், (அவ்வண்டுகள் வந்து மோதலுக்கு ஆற்றாமல்), கறங்கும் - சுழலுகின்ற, குருகை - திருக்குருகூரிலுள்ள, பிரான் - மிக்க உபகாரமுடையவராய், இ - இந்த, சுழல் பிறவி யோடும் - சுழன்று வருகிறபிறப்பினுடன், கறங்கு அன்ன - காற்றாடி யொத்த, வாழ்க்கையை - சரீரவாழ்வை, நீக்கி - போக்கி விட்டு, உணர்வு உதவி - நல்லறிவு தந்து, வீடும் - பரமபதத்தையும், திறந்து தந்தானை - கதவு திறந்து தந்தருளினவரை, எ நான்றும் - எந்த நாளும், விடகிலம் - யாம் கைவிடமாட்டோம் ; (எ - று.)

குருகூரிலவதரித்து மக்களின் நிலையற்ற வாழ்வைப் போக்கி மோட்ச பதத்தினைத் திறந்து தந்தருளிய நம்மாழ்வாரை நாம் எந்நாளும் விடமாட்டோம் என்பதாம். வண்டு பாடி நெருங்கக்கண்ட குவளை மலர் சுழன்று எற்றுக்கொள்ளுதல் போல நம்மாழ்வார்பாடல்களை அன்போடு யாவர் பாடுகிறார்களோ அவர்களைப் பரமபதமானது தட்டாமல் எற்றுக்கொள்ளுமென்பது தொகைமொழியின் கருத்தென்க. சிலர் இதனையே உள்ளுறையுவம மென்பர். குருகை - மரூஉ மொழி. பிறவி, வாழ்க்கை - தொழிற்பெயர்கள். தந்தான் - வினைப்பெயர். விடகிலம், அ, கு - சாரியைகள். இல் - எதிர்மறை இடைநிலை. (௯௫)

விடவந்த காரவெம் பாலிற் பராங்குசர் மெல்லியலுக்
கிடர்வந்த தாலென் றிரங்கிப் புணர்ந்திலரின் னுயிரை
யடவந்த காலன்கொ லோவறி யேனின்றிவ் வந்திவந்து
படவந்த காரப் பெரும்புகை யோடிப் பரக்கின்றதே.

பொருள்—அகப்புறப்பொருள்.
திணை—பெருந்திணை.
துறை—வேலமர் கண்ணி மாலையம் பொழுது கண்டு,
ஏங்கிய தறிந்த பாங்கி புலம்பல்.

உரை:—வெம் - கொடிய, விடம் - நஞ்சுபோன்ற, அந்தகாரம் பாலில் - இருட்டையுடைய இராக்காலமாகிய பகுதியிலே, மெல்லியலுக்கு - மென்மையான சாயலையுடைய எம் தலைவிக்கு, இடர் வந்ததென்று - காமத்துன்பஞ் செய்கின்ற சந்திரன் உதித்து வந்ததென்று, இரங்கி - கருணைகூர்ந்து, பராங்குசர் - நம்மாழ்வார், புணர்ந்திலர் - வந்து புணர்ந்தாரில்லை; [இந்த வேளையில்], இன்று—, இ அந்தி - இந்த மாலைக்காலமானது, வந்துபட - வந்து நீங்குதலும், அந்தகாரம் பெரும் புகை - பெரிய புகைபோன்ற இருட்டானது, ஓடி - எங்குஞ் சென்று, பரக்கின்றது - பரவுகின்றது; (இப்படி வந்த இருட்டானது), இன் உயிரை - எம் தலைவியின் இனிய உயிரை, அட வந்த - கொல்லுவதற்கு வந்த, காலன் கொலோ - யமன் தானோ? அறியேனை - யானறிந்திலேன்; (எ - று.)

கொடிய இருள் பரவிய இரவில் எந்தலைவிக்குத் துன்பமுண்டாயிற்றே யென்று இரங்கிப் பராங்குசர் வந்து புணர்ந்தாரில்லை; இம்மாலைப் பொழுதில் இருள் பரவா நின்றது; தான் உயிரைக் கொண்டுபோகிற யமனோ? அறியேனென்பதாம். விடம், இருளுக்கு நிறத்தாலுவமை. இடர் - சந்திரனுக்குஆகுபெயர். ஆல் - அசை. காலன்கொல் - இடைச்சொற்றொடர்; கொல் - அசைநிலை யிடைச்சொல். ஓ - ஐயப்பொருளில் வந்த இடைச்சொல். மாலைப் பொழுதின் பின் இருளைப் பார்த்தலும் தலைவி விரகங்கொண்டு சோகமுறக்கண்ட தோழி இருளை மேலிட்டுவிடமாகக் கூறினாள். வெம்மையை இடர் என்பதனோடு கூட்டுக. இன்னும் தலைவர் வந்திலாமையில் இருள் பரவுவதைக் காலனோ வென்றாள். பராங்குசர் - அயல் மதங்களாகிய யானைகளை அடக்குகின்ற அங்குசம் போல்பவர். இங்கும் துன்பஞ் செய்யுங் காமனை யடக்குபவரென்றெண்ணிப் பராங்குச ரென்றாள். காமன் கொடுமைக்கு ஆற்றாளென்பது தோன்ற மெல்லிய லென்றாள். தலைவியின் துன்பத்தைக்கண்டு பொருளாய் வெளிப்படையாகப் புணர்ந்திலரென்று கூறினாள். கிளவித்தலைவன் பெயர் கூறினமையால் அகப்புறமாயிற்று. காமத்தை யாருமறியக் கூறிப்புலம்பினமையால் நான்குமணம் பெற்ற பெருந்திணையாகாமல் கந்தருவத்தின் வழுவிய பெருந்திணையாயிற்று. பராங்குசர் - தீர்க்க சந்தி. மெல்லியல் - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழி. (௫௫)

பரவாது கேட்டினிப் பைய நடசுரு திப்பசுக்கள்
சுரவாத வற்றைச் சுரப்பித் தவைசொரி யும்பொருட்பால்
கரவா துதவிய மாறன் கவியனை யாயினியோர்
சரவாத மிப்புற மப்புறங் காணத் தடம்பணையே.

பொருள்—அகப்பொருள்.
திணை—பாலைத்திணை.
கிளவி—உடன்போக்கு: உட்பகுதி—தேற்றல்.
துறை—(தலைவிக்குத்தலைவன்) தன்பதி யணுமைசாற்றல்.

உரை:—சுரவாத - அறிவுடையோர்க்கன்றிப் பிறருக்குப் பொருள் வெளிப்படாதனவாகிய, சுருதி பசுக்கள் அவற்றை - வேதங்களாகிய அந்தப் பசுக்களை, சுரப்பித்து - எல்லாருக்கும் பொருள் தோன்றச் செய்து, அவை - அந்த நாற்பகுதியாகிய பிரபந்தங்களும், சொரியும் - கொடுக்கின்ற, பொருள்பால் - பொருளாகியபாலை, கரவாது - மறைக்காமல், உதவிய - கொடுத்தருளிய, மாறன் - நம்மாழ்வாருடைய, கவி அனையாய் - பாடல்களை யொத்த பெண்ணே! இனி - இனிமேல், இப்புறம் - இந்தப்பாலை நிலத்தின் எல்லையானது, ஓர் சரம்வாதம் - ஓர் அம்பு வீழ்ச்சியளவுதான்; அப்புறம்-இதற்கு அப்பால், அ தடம்பணை - அந்தக்குருகூரின் எல்லையுளகப்பட்ட அகன்ற வயல்களேயாம்; காண் - நீபார்; ஆதலால், பரவாது - உன் மனத்தை அலையவிடாமல், கேட்டு - யான்சொல்லுகின்ற இதனைக்கேட்டு, இனி - இப்பொழுது முதல், பைய - மெல்ல, நட - நடப்பாயாக; (எ - று.)

தலைவியை இருளிடை யழைத்து உடன்கொண்டு போகின்ற தலைமகன் தன் ஊர் அருகிலிருப்பதனைக் காட்டித் தெளிவித்தனனென்க. திணை - பாலை. கைகோள் - களவு. கூற்று - தலைவன் கூற்று. கேட்போர் - தலைவி. இடம் - முன்னிலை. காலம் - எதிர்காலம். எச்சம் - நீ என்பது எஞ்சி நின்றது. மெய்ப்பாடு - உவகை. பயன் - தலைவியைத்தேற்றல். வேதத்தைப் பசுவாகவும் அதன்பொருளைப் பாலாகவும் அதனைச் சுரப்பிக்கச்செய்தனனென உருவகஞ்செய்தமையின் இது உருவகவணி. பெண்களிற் சிறந்தமையின் - எல்லாக்கவிகளுள்ளுஞ் சிறந்த மாறன்கவியோடு உவமித்தான். இன்னம் எவ்வளவுதூரமுளதோவென்று கவலைகொண்டதனை அறிந்தனனாதலின் பரவாது கேட்டு என்றான். நெறிமுழுதும் இவ்வண்ணமேயாமெனக் கொண்டு விரைந்து செல்லாதவாறு அப்பால் தடம்பணையுள்ளதஞல் பையநடவென்றான். இடையிலெதிர்த்த சிங்கம் முதலியவற்றை அவன் அம்பாலெய்ததனைத் தலைவி யறிந்துள்ளாளாதலின் அவள் அறிந்த அம்பின் வீழ்ச்சியைக்குறித்துக் காட்டிச்சரவாதமென்றான். ஆங்கே தடம்பணை அருகிலிருக்கிறதாகக்கொண்டு காண் என்றான். அப்பால் ஊர்போய்ச் சேரும் வரையில் அந்த மருதநிலமே யென்பது தோன்றத் தடம்பணையென்றான். தடம்பணை - உரிச்சொற்றொடர். (கஎ)

## மேகவிடு தூது.

தடம்பணைத் தண்பொருநைக்குரு கூரர் தகைவகுளா
வடம்பணைக் கொங்கையில் வைக்கின் றிலர்மற் றைமாலையெல்லா
முடம்பணைக் குந்தொறும் வெந்துகு மைந்துவெம் பாம்புமிழ்ந்த
விடம்பணைக் கொண்டனவே பனிதோய்ந்திடு மேகங்களே.

பொருள்—அகப்புறப்பொருள்.
திணை—பெருந்திணை.
துறை—பாகொத்த சொல்லி பைந்தொடை பெறஅவ்
மேகத்தைத் தூது போக விடுத்தல்.

உரை :—பனி - விடாமல் மழைபெய்வதை, தோய்ந்திடும் - மேற்கொண்டுள்ள, மேகங்களே - ஆகாயத்திற் செல்கின்ற மேகங்களே! தண்பொருநை - குளிர்ந்த தாமிரபர்ணி நதி சூழப்பெற்ற, தடம்பணை - அகன்ற வயல்களையுடைய, குருகூரர் - திருக்குருகூர் நம்மாழ்வார், (தமது), தகை - பெருமையுடைய, வகுளம் வடம்- மகிழமலர்மாலையை, பணை - பருத்த, கொங்கையில் - என் கொங்கைகளில், வைக்கின்றிலர் - ஒற்றவைத்தருளுகின்றாரில்லை; (அதனையன்றி), மற்றை மாலையெல்லாம் - பிறமாலைகளெல்லாவற்றையும், உடம்பு அணைக்குந்தோறும் - என் உடம்பில் சேர்த்து ஒற்றிக்கொள்ளும் பொழுதெல்லாம், வெந்து - என்னுடம்பிலுள்ள காமாக்கினியால் வெந்துபோய், உகும் - உதிர்ந்து விடும்; (அந்தக் காமத்தீயும்.) ஐந்து வெம் பாம்பு -கொடிய ஐந்து பாம்புகள், (ஒரு சேரக்கூடி ஒரே உடம்பில் ஓரிடத்திலேயே கடித்து), உமிழ்ந்த - கடிவாயில் கக்கின, விடம் - விடங்களானவை, பணைக் கொண்டனவே - அதிகரித்தாற்போல்வனவேயாம்; (எ - று.)

மேகங்களே! குருகூராழ்வார் தம் வகுளமாலையை என் கொங்கைகளில் வைத்தருளுகின்றாரில்லை; அதனையன்றித் தோழியர் கொண்டு வந்து சூட்டுகின்ற பிறமாலைகள் காமாக்கினியால் கருகியுதிர்வன; ஒரு பாம்பு கடித்தாலே பிழைப்பதரிது; அந்தக் காமாக்கினி ஐந்துபாம்பு கடித்த நஞ்சுபரக்கின்றாற்போல்வன; இவ்விஷயத்தை ஆழ்வாருக்குஅறிவிப்பீராக வென்றாளென்பதாம். அகன்ற நீர்பாய்வயல்களும் குளிர்ந்த பொருநையுமுடையராதலால் அவர் மாலையும் குளிர்ச்சியைச் செய்யுமென்றாள். உயிர்க்கு நன்மைசெய்தலால் தகைவகுளமென்றாள். பனி - குளிர்ச்சியுமாம். நீங்கள் மிகுந்த குளிர்ச்சியான கருணையுடையீராதலால் பெண்ணென்றாற் பேயுமிரங்குதல் இயல்பன்றோ அதனால் என்பாற் கருணையுடையீராகிச்சென்று அவர்க்கு அறிவிப்பீர் என்பதனையடக்கிப் பனிதோய்ந்திடு மேகங்களே யென்றாள். நீங்கள் இங்கே பொழிவதனால் பயனில்லை அவருடைய மலையிலேறி மழைபொழியத் தொடங்கினால் அவர் நம்மைக்கண்டவுடன் விரகமேலிட்டமையால் தாமே என்னிடம் வந்தணைவாரெனக்கொண்டு மேகத்தை நோக்கிக் கூறினாளென்றலுமாம். ஐந்துபாம்பு - காமனம்பைக்குறித்ததுமாம். (௯௮)

மேகத்தை யாற்றிற்கண் டேனென் றெண்ணாது மெய்யன் குருகூர்ப்
பாகத்தை யாற்றுஞ்சொல் லாளைக்கண் ணீரின் றுளிபரந்த
மோகத்தை யாற்றிற்கொண் டேகண்ட மாற்றமொழிந்துசிந்தைச்
சோகத்தை யாற்றிக்கொண் டேதுளி தூவத் தொடங்குகவே.

பொருள்—அகப்பொருள்.
திணை—முல்லை.
கிளவி—வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்.
துறை—தலைவன், மேகந்தன்னொடுஞ்சோகஞ் சொன்னவன்
சொல்லல்.

உரை :—மேகத்தை - மேகமே! உங்களை, ஆற்றில்கண்டேன் என்று - வழியிலேகண்டு வார்த்தைசொன்னேனென்று, எண்ணாது - நினைக்காமல், (நீங்கள்), குருகூர் மெய்யன் -குருகூரிலுள்ள தத்துவரூபியாகிய நம்மாழ்வார்செய்தருளிய, பாகத்தை - செம்பாகமாகிய திருவாய்மொழியை, ஆற்றும் - ஒத்திருக்கின்ற, சொல்லாளை - சொல்லையுடைய என்

தலைவியை, கண் ணீரின் துளிபரந்த - கண்ணினின்று உண்டாகிய நீர்த் துளிமிக்குள்ள, மோகத்தை - என்பாலெழுந்த காமவிரகத்தை, ஆற்றிக் கொண்டே - ஆற்றுவித்துக்கொண்டே, கண்டமாற்றம் - என்னைநீங்கள் வருகிறவழியிற்பார்த்ததானவார்த்தையை, மொழிந்து-சொல்லி, சிந்தை- அவள்மனத்திலுண்டாகிய, சோகத்தை - சோர்வை,ஆற்றிக்கொண்டே- சாந்தப்படுத்திக்கொண்டு பிற்பாடு, துளிதூவ - மழைபெய்ய, தொடங் குக - ஆரம்பிப்பீர்களாக ; (எ - று.)

மேலோரை முன்னிலைமொழியாற் கூறுதலினும் படர்க்கைமொழி யாற் கூறுதல் சிறப்புடைமைநோக்கி மேகமே! உங்களை என்றுகுறித் துக்கூறாமல் படர்க்கைப்பெயரையமைத்துக்கூறி நீங்களிருக்குமிடம் வந்து வழிமொழிந்துவேண்டுதலியல்பு ; அங்ஙனமின்றி வழியிலே உங் களைப் பார்த்துவிட்டமையால் இதனை நும் வீட்டில்வந்து கேட்டுக் கொண்டமையாகக் கருதுகவென்பதுதோன்ற ஆற்றிற்கண்டேனென் றெண்ணாது என்று உபசாரங்கூறினன். ஏனையமாதர்கள்போல்வாளல் லள் என்பதுதோன்றத் திருவாய்மொழியோடுவமித்தான். உங்களுக்கு அவள் மறுமொழிகூறத்தொடங்கினால் அவள்சொல்லே உங்களுக்கு மகிழ்ச்சியைத்தருமென்பதனால் சொல்லாளென்றான். அவளைக்கண்ட வுடன் என்னைநீங்கள்பார்த்ததாகக்கூறினால் உடனே அதிகமகிழ்ச்சி கொண்டு ஆவென்றலும் ஏதமுண்டாகுமோவென்றஞ்சி முதலில் மோ கத்தையாற்றிச் சிறிதுசிறிதாக என்னை வழியிற்கண்டதுண்டென்று சொல்லுகவென்றான். சொல்லியவுடன் சென்றுவிட்டால் சோகமடை வளாதலால் மீட்டும் அவள் மனத்திலுள்ள சோர்வை நீக்கிக்கொண் டென்றான். பெருமழைபெய்யத்தொடங்கினால் குளிரில் வருந்துவளாத லின் சிறிது துளிகளைத்தூவுகவென்றான். யான் விரைவில்வந்துவிடுவே னென்பதுதோன்றத்தொடங்குகவென்றான். திணை-முல்லை. கைகோள்- களவு. கூற்று - தலைவன்கூற்று. கேட்போர் -மேகத்தோடுகூறுவாளாய்க் கூறியது. இடம் - முன்னிலை. காலம் - எதிர்காலம். எச்சம் - யான் விரைவில் வருவேனென்பது எஞ்சிநின்றது. மெய்ப்பாடு -அவலம். பயன் மேகத்தோடுகூறிச் சிறிதாற்றுதல். பொருள்கோள்-யாற்றுநீர். மேகத் தை-இடவழுவமைதி. எண்ணாது - எதிர்மறைவினையெச்சம். பாகம் - சுவையையுடைய திருவாய்மொழிக்குப்பண்பாகுபெயர். கண்ணீரின் துளி-பிரிவாற்றாமையென்னும் மெய்ப்பாடுதோன்ற நின்றது. (௧௧)

## மதங்கு.

தொடங்குகின் றாணடஞ் சொல்லுகின்றேன்குருகூர்த்தொழா
மடங்குகின் றாண்மண் டலஞ்சுற்றி யாடுகின் றாண்மதங்கி
விடங்குகண் டார்பிழைப் பார்சபை யீர்விரைந் தேகுமிந்தப்
படங்குவிண் டாற்பின்னைப் போகவொண் ணாதும் பதிகளுக்கே.

இது - மதங்கிகூத்து. ஒருகூத்தாடிச்சி ஆடத்தொடங்கும்பொழுது ஒரு வன் சபையோரைநோக்கிக்கூறியது. இதுவும் முற்கூறியபல்வரிக் கூத்திலொன்று.

உரை:—சபையீர்-சபையிலுள்ளவர்களே! சொல்லுகின்றேன் -இப் பொழுது உங்களுக்கு ஒருவிடயம் சொல்லுகின்றேன் அதனைக்கேளுங் கள், மதங்கி - பாடல்வல்ல இக்கூத்தாடிச்சி, நடம்தொடங்குகின்றாள்- கூத்தாட எத்தனிக்கின்றாள் ; குருகூர்த்தொழா - திருக்குருகூரிலெ

ழுந்தருளிய நம்மாழ்வாரைத்தொழுது, மடங்குகின்றாள் - திரையினுள்ளேயே திரும்பிப்போகின்றாள் ; மண்டலம்சுற்றி - (அத்திரையிடத்துள்ளிருந்தபடியே), மண்டலமாகச்சூழ்வந்து, ஆடுகின்றாள் - கூத்தாடுகின்றாள் ; மதங்கிவிடங்குகண்டு - இந்த மதங்கியினழகைக்கண்டால், பிழைப்பார் ஆர் - இங்கேபிழைப்பவர்யாரிருக்கிறார்கள் ? இந்தப்படங்குவிண்டால் - இந்தத்திரையைநீக்கிவிட்டாலோ, பின்னை - பிற்பாடு, உம் பதிகளுக்கு - உங்களூர்களுக்கு, போக ஒண்ணாது - போகமுடியாது ; (ஆதலால்), விரைந்து ஏகும் - சீக்கிரமாக அப்பால்போய்விடுங்கள் ; (எ-று.)

சபையிலிருப்பவர்களே ! உங்களுக்கு ஒருவிஷயம் சொல்லுகிறேன் கேளுங்கள், பாடல்வல்ல இக்கூத்தாடிச்சி குருகூராழ்வாரைவணங்கிக் கூத்தாடத்தொடங்குகிறாள், இவளழகுகண்டால் எல்லாரும் மோகித்து வீழ்ந்திறப்பார் ஆதலால் இப்பொழுதே விரைந்து உம்மூர்க்குப்போங்களென்பதாம். பின்னை - இடைச்சொற்றிரிபு. ஒண்ணாது - ஒன்றாதென்பதன் மரூஉ. (௭௰)

பதியந் தமிழென்ன நான்மறை யென்னவிப் பார்புரக்கு
மதியந்த மில்லொளி மாலைக ளென்ன மறைத்தமிழி
னதியந் தருங்கவி யாயிரஞ் செய்தளித் தானமுதம்
பொதியந் தருநதி யங்குரு கூரெந்தை பூசுரர்க்கே.

உரை :—பொதியம் - பொதியமலையானது, தரும் - கொடுக்கின்ற அமுதம் - நீர்ப்பெருக்கையுடைய, நதி - தாமிரபருணியாற்றருகிலுள்ள, அம்-அழகிய, குருகூர் - திருக்குருகூரிலவதரித்த, எந்தை - எங்கள் தந்தைவரான ஆழ்வார், பூசுரர்க்கு - பிராமணர்களுக்கு, தமிழ்பதியம் என்ன - தமிழில் பதிகங்களென்னும்படியாகவும், நான்மறை என்ன - நான்குவேதங்களென்பனவாகவும், இ பார் - இந்த உலகத்தை புரக்கும - தன் குளிர்ச்சியால் காக்கின்ற, மதி - சந்திரனையொத்த, அந்தம் இல் - முடிவில்லாத, ஒளி - பிரகாசத்தையுடைய, மாலைகள் என்ன - மாலைகளென்னும்படியாகவும், மறை - வேதத்தையொத்த, தமிழின் - தமிழ்மொழியில், அதியம் தரும் - மிகுதியானபெருமையைத் தருகின்ற, ஆயிரம் கவி - ஆயிரம் பாடல்களை, செய்து - பாடி, அளித்தான் - கொடுத்தருளினார் ; (எ - று.)

குருகூராழ்வார் பிராமணர்களுக்குத் தமிழெனவும், நான்மறையென்னவும் மாலைகளென்னவும் ஆயிரம்பாடல்கள்பாடிக் கொடுத்தருளினாரென்பதாம். பொதியமலையில் அகத்தியரிடத்தில் பிறந்த தமிழிலக்கணம் உலகத்தை வாழ்விப்பதுபோல தாமிரபருணி நதி பொதியமலையில்தோன்றித் தென்னாட்டை வாழ்விக்கும் சிறப்புத்தோன்ற பொதியந்தருநதி என்றார். பூசுரர் - பூமியிலுண்டாகிய தேவரெனவே அந்தணர்க்காயிற்று. நம்மாழ்வார் பிரபந்தம் நான்கும் நான்குவேதங்கள் போல் கூறப்படுதலால் நான்மறை என்றார். பதிகம் - பத்துப்பாடல்களையுடைமையின் பதிகமெனப்பட்டது. நினைக்கவும், கூறவும் குளிர்ச்சியைத்தருதலின் மதியையுவமித்தார். ஒன்றோடொன்று தொடர்புடைமையின் மாலைகளென்றார். பதிகம், அதிகம் என்பன எதுகைநோக்கி பதியம், அதியம் என்றாயின. வேதப் பொருளைக் கண்டு மகிழ்பவரந்தணராதலால் அவரேயிதன்பெருமையையறியவல்லவரென்று பூசுரர்க்கு அளித்தார் என்க. (௭௧)

பூட்சிகண் டீர்பொய்ச் சமயப் புலவர்க்குப் போக்குவல்வாய்
வாட்சிகண் டீர்மற்றை மாயத்தருகர்க்கு மன் னுயிர்கட்
காட்சிகண் டீர்தொண்டர்க் கானந்த வாரிகண் டீரறிவைக்
காட்சிகண் டீர்பர வுங்குரு கூர்வந்த கற்பகமே.

உரை:—பரவும் - எல்லாராலுந் துதிக்கப்படுகின்ற, குருகூர் - திருக்குருகூரில், வந்த - அவதரித்த, கற்பகம் - கற்பகத்தருவையொத்த நம்மாழ்வார், பொய்ச்சமயப் புலவர்க்கு - பொய்யாகக் கூறப்படுகிற (உலகாயிதம் பௌத்தமென்னும்) புறச்சமயங்களிலுள்ள வித்வான்களுக்கும், பூட்சிகண்டீர் - மேற்கொள்ளத்தகுவாரென்று தெரிந்துகொள்ளுங்கள்; மற்றை - அவர்களையல்லாத, மாயத்து-வஞ்சனையையுடைய, அருகர்க்கு - சயினர்களுக்கு, போக்கு - அவர்கள் மாறுபாட்டைப் போக்குவதாகிய, வல்வாய் - உறுதியானவாயையுடைய, வாட்சிகண்டீர் - வாள் போல்வதென்று தெரிந்துகொள்ளுங்கள்: மன் - நிலைபெற்ற, உயிர்கட்கு - ஜீவராசிகளுக்கெல்லாம், ஆட்சிகண்டீர் - நிலையான பொருளாவாரென்று தெரிந்துகொள்ளுங்கள்; தொண்டர்க்கு - திருமாலின் அடியவர்களுக்கு, ஆனந்தவாரிகண்டீர் - பேரின்பக் கடல்போல்வாரென்று தெரிந்துகொள்ளுங்கள்; அறிவை - நம்முடைய அறிவுக்கு, காட்சிகண்டீர் - காண்பதற்குரிய பொருளாவாரென்று தெரிந்து கொள்ளுங்கள்.

குருகூரிலவதரித்த கற்பகம்போன்ற நம்மாழ்வாரானவர் பொய்யான சமயத்தருமேற் கொள்ளத்தகுவார்; அருகர்க்கு வாள்போன்றவராவார்; மன்னுயிர்களை ஆளுந்தன்மையராவர்: தொண்டர்க்கு ஆனந்தக்கடலாவார்; அறிவுக்குரிய காட்சிப்பொருளாவாரென்பதாம்.

பிரத்தியக்ஷப்பிரமாணம் ஒன்றேயுடைய உலகாயிதரும் காட்சி, அனுமானமாகிய இரண்டு பிரமாணங்களுடைய பௌத்தரும் ஆழ்வார் திருவாய்மொழியின் கருத்தை மறுத்தற்கியலாதவராதலின் அவராற் பூணப்படுவாரென்றார். வஞ்சனையுடைய சைனர் முற்கூறிய இரண்டனொடு ஆகமம், அருத்தாபத்தி ஆகிய இரண்டனையுங்கூட்டி நான்கு பிரமாணங்களைக்கொண்டு எதிர்த்தும் ஆழ்வார்நூல் அதன்மேற்பட்டுள்ள பிரமாணங்களைக் கொண்டுள்ளதாதலின் இதனைவெல்ல முடியாமையால் அந்த அருகர்களுக்கு வாள்போல்வரென்றார். தேவர்களுக்கு வேண்டுவன அளிக்குந்தருவைப்போல உலகத்தின் மன்னுயிர்களுக்கு வேண்டியவற்றைத் தருதலிற் கர்பகமென்றும் அங்ஙனந்தருதலின் ஒன்றாகிய பேரின்பக்கடலைத் தொண்டர்க்கே கொடுப்பரென்றும் இங்ஙனமிருந்தும் மனத்தால் நினைத்தமாத்திரத்தில் தரிசனங்கொடுத்தலிற் காட்சியென்றுங் கூறினார். கற்பகம் - உவமையாகுபெயர். (௭௨)

கற்றுஞ் செவியுறக் கேட்டும் பருகிக் களித்துமுன்னே
முற்று முகப்பெய்து மூழ்கிக் குடைந்து முகந்துகொடு
நிற்று நிலையுற நீந்துதும் யாநித மாறனெம்மை
விற்றும் விலைகொள்ள வும்முரி யான்கவி வெள்ளத்தையே.

உரை:—எம்மை - எங்களை, விற்றும் - விலைக்குவிற்கவும், விலைகொள்ளவும் - அந்த விலைப்பொருளைத்தாம் பெற்றுக்கொள்ளவும், உரியான் - உரியவனாகிய, மாறன் - நம்மாழ்வார் பாடியருளிய, கவி வெள்ளத்தை - பாடலாகிய பிரவாகத்தை, யாம் - நாம், நிதம் - தினந்தோ

றும், கற்றும் - மூலத்தைக்கற்கக்கடவோம்; (அப்படிக்கற்றபிற்பாடு), செவிஉற கேட்டும் - அதன்பொருளைக்காதில்நன்றாகக் கேட்கக்கடவோம்; பருகி - குடித்து, களித்தும் - மகிழ்வோம்; முற்றும் - அந்தப் பிரபந்தமுழுவதும், உள்ளே - எம்மனத்திறுள்ளே, உக - விழும்படி, பெய்தும் - ஊற்றிக்கொள்வோம்; மூழ்கி- அந்தவெள்ளத்தில் அமுங்கி, குடைதும் - ஸ்நானஞ்செய்வோம்; முகந்துகொடு - அள்ளிமுகந்தெடுத்துக்கொண்டு, நிலைஉற - நிலைபெற்ற இடங்களிலே, நிற்றும் - நிற்போம்; நீந்துதும் - நிலைகொள்ளாத இடங்களில் நீந்திச்செல்வோம்; (எ - று.)

ஆழ்வார் பாடலாகிய வெள்ளத்தைப்பற்றி வாயினாற் பேசுவோம்; பிறர்பாற் கேட்போம்; உண்டு மகிழ்வோம்; எடுத்துஉள்ளே ஊற்றிக் கொள்வோம்; அதில் ஸ்நானஞ்செய்வோம்; நிலைகொண்ட இடத்தில் நிற்போம்; நிலைகொள்ளாதவிடத்தில் நீந்துவோம்; என்பதாம். பருகும்போதெல்லாம் தெவிட்டாது தித்தித்தலால்களித்துமென்றார். முழுதுங் கொள்ளுதற்கு எம் அறிவாகிய கொள்கலம்பற்றாதாயினும் வலிந்து ஊற்றிக்கொள்வோமென்றார். ஓயாமற் பருகவேண்டியதனால் முகந்துகொடு நிற்றுமென்றார். யாம் அவர்க்கு அடிமையாய்விட்டபடியால் அவர் என்னைவிற்கவும் பொருளைப்பெறவு முரியரென்றார். விற்றல் அடியார்க்கு அடியனாகச்செய்தல். விலைகொள்ளுதல் - அவ்வடியாரையும் தம்மடியாராக்குதல். மாறன் - ஆழ்வார் திருப்பெயர்களுளொன்று. கற்றும் முதலியவை - தன்மைப் பன்மை எதிர்காலவினைமுற்று. திருவாய்மொழியை வெள்ளமாக்கி அதற்கேற்பமுழுவதும் உருவகஞ்செய்தமையால் இது முற்றுருவகவணி. (௭௰.)

வெள்ளம் பரந்தன வோகமலத் [illegible] வெண்மதிமேற்
கள்ளம் பரந்தன வோமுய லீக்கிக் கவிக்கரசன்
றெள்ளம் பரந்த வயற்குரு கூர்க்கொம்பின் செம்முகத்தெ
முள்ளம் பரந்தன வோகண்க ளோவொன் றுமோர்கிலமே.

பொருள்—அகப்பொருள்.
திணை—உரிப்பொருளாற் குறிஞ்சி.
கிளவி—இடந்தலைப்பாடு.
துறை—கண்ணையைந் துரைத்தல்.

உரை:—கவிக்கு - செந்தமிழ்ப்பாடல்கள் பாடுதற்கு, அரசன் - தலைவராகிய, (நம்மாழ்வாரவதரித்த,) தெள் - தெளிந்த, அம் - நீர், பரந்த - பரவிய, வயல் - வயல்கள்சூழ்ந்த, குருகூர் - திருக்குருகூரிலிருக்கிற, கொம்பின் - அந்தப்பெண்ணினது, செம்முகத்து - சிவந்த முகத்தினிடத்தில், எம் உள்ளம் - எமதுமனமானது, பரந்தனவோ - இரண்டாகப் பரவியிருக்கின்றனவோ? கமலத்து - தாமரை மலரில், வெள்ளம் - பிரவாகமானகடல்கள் தாம், பரந்தனவோ - பரவியிருக்கின்றனவோ? அன்றி - அல்லாமல், வெள்மதி மேல் - வெண்மையாகிய சந்திரன் மேலேயுள்ள, முயல் நீக்கி - களங்கமாகிய முயலைநீக்கி, கள்ளம் - களவாகிய தொழிலொன்றுதான், பரந்தனவோ - இரண்டுவடிவாகி விளங்குகின்றனவோ? கண்களோ - கண்களதாமோ? ஒன்றும் ஓர்கிலம்- ஒன்றாகத்துணிந்து சொல்ல யாம் அறிந்தோமில்லை.

ஆழ்வார் குருகூரில் எம் தலைவியின் முகத்திலுள்ளன கமலத்தில் வெள்ளம் பரந்தனவோ? சந்திரன்மேற் களவுத்தொழில்தான் பரந்த

னவோ? அல்லது என் மனந்தான் அங்ஙனம் பரந்தனவோ? கண்கள் தாமோ? ஒன்றும் அறிந்தோமில்லை யென்பதாம்.

தலைவியைக்கண்டபொழுது அவளுறுப்புக்கள்சில மலர்கள்போலத் தலைவனுக்குத் தோன்றியதற்கேற்ப இங்குக்கொம்பென்றான். கொம்பு-மலர்நிறைந்தகொம்பு. காமமயக்கத்தாலிருண்ட தன் மனத்தை அவளுடைய இருண்டவிழியாகக் கூறியது பண்புபற்றியென்க. இவன் நெஞ்சம் அவள்விழியால் தாக்கப்பட்டு அவ்விழிகளிலே யடங்கிக்கிடந்ததனால் தன்மனமே அவ்வடிவினதென்றான். அங்ஙனம் கொண்டமயலுக்கு எல்லைகாணாமல் ஆழ்ந்ததனால் கரையிலாக்கடலே பரந்தனவோ வென்றான்: இப்படியே "கடலினும் பெரியகண்கள்" என்றார் இராமாயணத்திலும். கொம்பு - உவமையாகுபெயர். வெள்ளம், கள்ளம், உள்ளம் - பால்பகா அஃறிணைப்பெயர்களாதலால் பன்மைமுடிபுகொண்டன. இத்துறைமுற்றும் ஐயவுவமை. குறிஞ்சிக்குரிய கருப்பொருளொன்றுமில்லாமையால் உரிப்பொருளைக்கொண்டுகுறிஞ்சியென்றுகூறலாயிற்று. இடந்தலைப்பாடு - இயற்கைப்புணர்ச்சி துணிந்ததலைமகன் மற்றைநாள் முன் கொடுத்த தெய்வம் இன்னுங் கொடுக்குமென்று அவ்விடஞ்செல்லுதல். கைகோள் - களவு. கூற்று - தலைவன் கூற்று. மெய்ப்பாடு - பெருமிதம்; உவகையுமாம். பயன் - கண்சிறப்புரைத்தல் ஏதுவாகத் தலைவியைச்சார்தல். (௭௪)

ஓருந் தகைமைக் குரியாரு மோங்கிய ஞானியருஞ்
சாருந் தனித்தலை வன்சட கோபன் றடம்பதிக்கே
வாரு முமக்கோ ருறுதிசொன் னேனும் மயக்கமெல்லாந்
தீருந் திருக்கறுஞ் சிந்தைசெவ் வேநிற்குந் தீங்கறுமே.

உரை:—ஓரும் - ஆராய்ந்தறிகின்ற, தகைமைக்கு - உயர்ந்ததன்மைக்கு, உரியாரும் - தகுந்தவர்களும், ஓங்கிய - உயர்ந்த, ஞானியரும் - ஞானமுடையவர்களும், சாரும் - அடையப்பெற்ற, தனி - ஒப்பற்ற, தலைவன் - தலைவராகிய, சடகோபன் - சடகோபனென்னும்பெயருடைய நம்மாழ்வாரவதரித்த, தட பதிக்கு - விசாலமான திருக்குருகூருக்கு, வாரும் - வாக்கடவீர்கள்; உமக்கு - உங்களுக்கு, ஓர் உறுதி - ஒரு உறுதிப்பாட்டை, சொன்னேன் - இப்பொழுது சொல்லுகிறேன்; (அப்படி வருவீரேல்,) நும் - உங்களுடைய, மயக்கம்எல்லாம் - விபரீதமுழுவதும், தீரும் - நீங்கிவிடும்; திருக்கு அறும் - மாறுபாடுகள்நீங்கிவிடும்; தீங்கு - தீவினைகளெல்லாம், அறும் - நீங்கும்; சிந்தை - உங்கள்மனமும், செவ்வே நிற்கும் - கோணாமல் ஒருதன்மையாகவே நிலைநிற்கும்; (எ - று.)

நீங்கள் ஆழ்வார்குருகூருக்கு வாருங்கள்; உங்களுக்கோருறுதி சொல்லுகின்றேன்; உங்கள் மயக்கம் நீங்கும்; திருக்கு நீங்கும்; மனம் ஒழுங்குபடும்; தீங்கறுமென்பதாம். ஓர்தல் - கடவுளியல்பையறிதல். ஓங்கியஞானம் - கடவுளையறியுமறிவு. மயக்கம் - ஒன்றைமற்றொன்றாகக் கருதும்விபரீதம்; என்றது எங்கும்வியாபித்திருப்பவன் நாராயணனென்பதைமறந்து மற்றத்தெய்வங்கள் வியாபித்திருப்பதாகக்கருதுதல். திருக்கு - மாறுபாடு, அதாவது கடவுளும் அவர்போல்வாரும் நியமித்த வழிக்கு விரோதமாகநிற்றல். இவைகளொழியவே மனம்ஒருதன்மையாகவேநின்றுகடவுளைத்துதித்துப்பரமபதத்தைஅடைதல் கூடுமென்பதாம். இவையனைத்தும் திருக்குருகூரையடைந்தமாத்திரையே பெறலாகு

மென்றதனால் இது அப்பதியின்சிறப்புக்கூறப்பட்டது. வாரும் என்ப தற்கு நீங்கள்என்பதை தோன்றாஎழுவாயாக்கிக்கொள்க. சொன்னேன்- தெளிவினால்வந்தகாலவழுவமைதி. (௭௫)

அறுவகை யாய சமயமு மைவகைத் தாம்புலனு [ங்கே
முறுவகை யாற்சொன்ன வோட்டமெல் லாமொழி வித்தொரு
பெறுவகை யாறெனச் செய்தபி ரான்குரு கூர்ப்பிறந்த
சிறுவகை யாரவ ரைத்தொழு தோமெம்மைத் தீண்டுகவே.

பொருள்—அகப்பொருள்.
திணை—மருதம்.
கிளவி—பரத்தையிற்பிரிவு.
துறை—காமக்கிழத்தி மைந்தனையெடுத்தல்.

உரை:—அறுவகையாய - ஆறுவகைப்பட்ட, சமயமும் - சமயநூல்களும், ஐவகைத்தாம் - ஐந்துவகைப்பட்டதாகிய, புலனும் உறுவகையால்- தன்மாத்திரைகளும் கூடியுள்ளவகையினால், சொன்ன - சொல்லிய, ஓட்டமெல்லாம் - நீண்ட பொருள்விரிவுமுழுவதும், ஒழிவித்து - போக்கி, ஒருங்கே - ஒருசேர, பெறுவகை ஆறென - அடையும்படியானவழி இதுவென்று, செய்த - பிரபந்தரூபமாகச்செய்துகாட்டியருளிய, பிரான் - தலைவரும், குருகூர் பிறந்த - குருகூரிலே அவதரித்தருளிய, சிறுவகையார் - சிறியமனிதவடிவினருமாகிய, அவரை - அந்த நம்மாழ்வாரை, தொழுதோம் - யாம்வணங்கினோம், (ஆதலால்,) எம்மை ———, தீண்டுக - தொடுவாயாக; (எ - று.)

சமயநூல்களில் கூறிய மாறுபாடுகளையெல்லாம் போக்கி நல்வழி இதுவேயெனப் பிரபந்தரூபமாகக் காட்டியருளிய திருக்குருகூர் நம்மாழ்வாரை யாம் தொழுதோமாதலால் மைந்தனே! எம்மைத்தொடுவாயாக வென்பதாம். பஞ்சதன்மாத்திரை:—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. இவற்றாற்சொல்லிய ஓட்டம் - அவ்வச் சமயநூல்களிற் கூறிய தத்துவசாத்திரங்களாம்; எனவே அவற்றையொழித்து நான்கு வேதங்களின் பொருள்களாகிய திருவாய்மொழிமுதலிய நான்குபிரபந் தங்களையும் நிலையிட்டருளியபடி என்பதாம். ஆய சமயம் - இடைச் சொற்றொடர். ஒழிவித்து, வி - பிறவினைவிகுதி. குருகூர்ப்பிறந்த - ஏழாம் வேற்றுமைத்தொகை.

தலைவன் பரத்தையிற் பிரிவில் தலைவியின்மைந்தன் தெருவில் விளையாடும்பொழுது அங்குவந்த காமக்கிழத்தி தான் தாய்மையுடையவளென்றுகூறி அப்புதல்வனைத் தன்பாலழைத்தது இத்துறையின்கருத்து. தலைவன் பரத்தையிற்பிரிதலும் தலைவிக்கு ஊடல்தோன்றுதலின் உரிப்பொருளால் மருதமாயிற்று. மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - காமக்கிழத்தி மகிழ்தல். கைகோள் - கற்பு. கூற்று - காமக்கிழத்திகூற்று. (௭௬)

தீண்டித் திருவடி யைப்பற்றிக் கொண்டுசிந் தித்தவையே
வேண்டிக் கொளப்பெற்றி லேன்வினை யேனிவ் வெறும்பிறவி
யாண்டிற் பிறந்தவக் காலத்தி லேயன்ப ருயணிநீர்ப்
பாண்டித் தமிழ்த்திரு நாட்டொருக் காட்டிய பாவகற்கே.

உரை:—அணிநீர் - அழகியபொருநையாற்றுநீர்பரந்த, தமிழ் - தமிழ்வளம்பொருந்திய, திரு - அழகிய, பாண்டிநாட்டு - தன்பாண்டி

நாட்டிலே, உருக்காட்டிய - வடிவமெடுத்தருளின, பாவகற்கு - பரிசுத்தரான நம்மாழ்வாருக்கு, அன்பனாய் - தொண்டுசெய்பவனாய், ஆண்டில் - அவ்விடத்தில், வினையேன் - தீவினையுடையவனாகிய நான், இவ்வெறும் பிறவி - இப்பயனற்றபிறப்பில், பிறந்த அக்காலத்திலே - பிறந்தஅப்பொழுதேதானே, தீண்டி - பரிசித்து, திருவடியைப்பற்றிக்கொண்டு - ஆழ்வார் திருவடிகளைப்பிடித்துக்கொண்டு, சிந்தித்ததை - மனத்தில்நினைத்ததனை, வேண்டிக்கொளப் பெற்றிலேன் - பிரார்த்தித்தது அடையப் பெற்றேனில்லை ; (எ - று.)

நான் பிறந்தபொழுதே நம்மாழ்வாருக் கன்புடையோனாய் அவர் திருவடியைப்பற்றிக்கொண்டு நினைத்ததைப் பிரார்த்தித்துப் பெற்றுக் கொண்டேனில்லை என்பதாம். மற்றைநாட்டைக்காட்டிலும் சிறப்புடைமைதோன்றத் தமிழ்த்திருநாடு என்றார். பாவகன் - அக்கினி. அவனைப் போலப்பரிசுத்தமுடைமையால் ஆழ்வாரை அவ்வாறுகூறினார். இம்மைப் பயனைத்தேடி உழலுதலால் வெறும்பிறவி என்றார். சிந்தித்தது - வீட்டின்பம். பாவகன் - உவமையாகுபெயர். வெறும்பிறவி - பண்புத்தொகை நிலைத்தொடர். சிந்தித்தது - வினைப்பெயர். (௭௭)

பாவகத் தாற்றன் றிருவவ தாரம் பதினொன்றென் றிப்
பூவகத் தாரறி யாதவண் ணந்தனை யேபுகழ்ந்து
நாவகத் தாற்கவி யாயிரம் பாடி நடித்தளித்த
கோவகத் தாற்கன்றி யென்புறத் தார்செய் குற்றேவல்களே.

உரை:—பாவகத்தால் - அம்சத்தினால், தன் - மாயோனானவன் தன்னுடைய, திருஅவதாரம் - சிறந்த அவதாரங்கள், பதினொன்று என்று - பதினொன்றாகுமென்று, இ பூவகத்தார் - இந்தவுலகத்திலுள்ளவர்கள், அறியாத வண்ணம் - அறிந்துகொள்ளாதபடி, தனையே புகழ்ந்து - தன்னைத்தானேகொண்டாடி, நா அகத்தால் - தந்நாவினிடமாக, ஆயிரம் கவி பாடி - ஆயிரம்பாடல்கள்பாடி, நடித்து - வேறாயுள்ளவரைப் போலக்காட்டி, அளித்த - கொடுத்தருளிய, கோ அகத்தார்க்கு அன்றி - பரமபதநிலைமையையுடையவராகிய நம்மாழ்வாருக்கேயல்லாமல், புறத்தார் - அன்னியர்களுக்கு, செய் - செய்கின்ற, குற்றேவல்கள் - சிறிய ஊழியங்கள், என் - என்னபயன்தரும் ; (எ - று.)

நம்மாழ்வார் மாயோனம்சமாகப்பிறந்து அந்தமாயோனைத்துதித்தலால் தன்னையேபுகழ்ந்துகொண்டவராய் ஆயிரம்பாடல்கள்பாடியருளினார் ; அப்படிப்பட்டவர்க்குத் தொண்டுசெய்யாமல் பிறருக்குச்செய்யும் ஊழியத்தாலடைவனயாவையென்பதாம்.

ஆழ்வார்திருமாலின் அம்சமென்றுகூறப்படுதலால் அந்தமாயோனவதாரம் பத்தன்றிப்பதினொன்றென்றார். அக்காரணத்தால் இவர் மாயோனைப்புகழ்ந்ததும்தம்மைப்புகழ்ந்ததாயிற்று. நடித்தல் - மாயோன் வேறு தாம்வேறெனறு உலகத்தாருக்குத்தோன்ற நடத்தல். பூ அகம் - பூமியாகிய இடம் ; இருபெயரொட்டு. தன்னையே, ஏ - பிரிநிலை. கோவகத்தான் - மேலாகிய இடத்தையுடையவன். புறத்தார்ச்செய் - வேற்றுமைத்தொகை. (௭௮)

குற்றே வலுஞ்செய்து மெய்கண்டு கைகொண்டு கும்பிட்டன்பு
பெற்றேனென் போலெவர் பேறுபெற் றார்பின்னை யேபிறந்து
வெற்றே வலினின்ற பொய்யன்பர் தாங்களு மெய்யுணர்ந்தா
ரெற்றே குருகைப் பிரானெம்பி ரான்ற னியலிசைக்கே.

உரை :— குருகைப் பிரான் - திருக்குருகூரிலுள்ள இறைவராகிய, எம்பிரான் தன் - எங்கள் நம்மாழ்வாருடைய, இயல் இசைக்கு - இலக்கணமும் பண்ணும் அமைந்த திவ்வியப் பிரபந்தங்களாலே, (யான்) குற்றேவலும் செய்து - சிறியவேலைகளுஞ்செய்து, மெய்கண்டு - அப்பிரபந்தங்களின் தத்துவார்த்தத்தைத் தெரிந்துகொண்டு, கை கொண்டு கும்பிட்டு - எனது கைகளா லஞ்சலிசெய்து, அன்பு பெற்றேன் - அவருடைய கருணையை யடையப்பெற்றேன்; என் போல்- என்னைப்போல, எவர் - யாவர்தாம், பேறுபெற்றார் - பயனடைந்திருக்கிறார்கள்? (ஒருவருமில்லை என்றதாம்), பின்னையே பிறந்து - பிற்பட்டு உண்டாகி, வெற்று ஏவலில் நின்ற - பயனற்ற பணிவிடைகளில் நிலைநிற்கின்ற, பொய் அன்பர் தாங்களும் - பொய்யாகிய வழிகளிற் சென்று அன்புசெய்கின்றவர்களும், மெய் - தத்துவஞானத்தை, உணர்ந்தார் - அறிந்துகொண்டார்கள்; எற்று - இது எத்தன்மைத்தான வியப்புடையது? (எ - று.)

யான் ஆழ்வார் பிரபந்தத்தை ஆசிரியருக்கு ஏவல் முதலியவற்றைச் செய்து படித்து உண்மைப்பொருளறிந்து அவர் அருள்பெற்றேன் என்னைப்போற் பெற்றவர்யார்? ஆழ்வார்க்குப் பிற்பட்ட பலர்களும் இந்தப் பிரபந்தத்தினால் தத்துவஞானம் பெற்றார்கள். ஈதென்ன வியப்பு? என்பதாம். இயல், இசை - சினையாகுபெயர். ஏவலும், உம் - இறந்தது தழுவிய எச்சம். எற்றே, எல் - தே எனப்பிரித்து ஒளிபொருந்திய தெய்வமாகிய பிரானென்று கூட்டினும் அமையும். கைகொண்டு, கொடு- மூன்றாம்வேற்றுமைச் சொல்லுருபு, எற்று - குறிப்பு முற்று. (௭௧)

இயலைத் தொடுத்தின் னிசையைப் புணர்த்தெம்மை யிப்பிறவி
மயலைத் துடைத்த பிரான்குரு கூர்மதி யைக்கொணர்ந்து
முயலைத் துடைத்துத் தனுவைப் பதித்துமுத் தங்குயிற்றிக்
கயலைக் கிடத்திக்கொல் சாளரத் தூடு கதவிட்டதே.

பொருள்—அகப்புறப்பொருள்.
திணை—கைக்கிளை.
துறை—காட்சி; ஐயபாற்கூற்று.

உரை :— இயலை - இலக்கணங்களை, தொடுத்து - திருவாய்மொழியிற் புகுத்தி, இன் இசையை-இனிய இராகங்களை, புணர்த்து-கூட்டி, எம்மை——, இ - இந்த, பிறவிமயலை - பிறப்பினாலுண்டாகிய மயக்கத்தை, துடைத்த - போக்கின, பிரான் - நம்மாழ்வாரவதரித்தருளிய, குருகூர் - திருக்குருகூரில், மதியைக்கொணர்ந்து- சந்திரனைப்பிடித்து வந்து, முயலை - அதிலுள்ள களங்கத்தை, துடைத்து - போக்கி, (அதனிடத்தில்), தனுவைப்பதித்து - இரண்டு விற்களை அமைத்து, முத்தங் குயிற்றி - முத்துக்களைப் பதித்து, கயலை - இரண்டு கயல்மீன்களை, கிடத்தி - வைத்து, சாளரத்தூடு - சன்னல்களுள்ளே வைத்து, கதவு இட்டதேகொல் - கதவு தாழ்போடப்பட்டதோ? (எ-று.)

இலக்கண அமைதியும் இசை அமைதியுமுள்ள பிரபந்தஞ்செய்தருளின ஆழ்வாரது குருகூரில் சந்திரனிடத்தில் களங்கம்போக்கி விட்டும் முத்தும் மீனும் அமைத்து பலகணியினோடு வைத்துக் சதலிடப்பட்டதோ வென்றான் என்பதாம். எல்லா இலக்கணங்களுக்கும் இலக்கியமாகக்கொள்ளுதலால் இயலைத்தொடுத்தென்றார். இசையோடு கூறப்படுவதனால் இசையைப் புணர்த்தென்றார். படித்தலால் பிறப்பின் மயக்கம் நீங்குதல்பற்றி மயலைத்துடைத்தென்றார். களங்கந்துடைத்த மதி - முகத்திற்கு உவமை. தனு - புருவத்துக்கும், முத்துக்கள் - பற்களுக்கும், கயல்கள் - கண்களுக்கும் உவமையாதலால் இவையனைத்தும் உவமையாகுபெயர்கள். கொணர்ந்து, கொல் - பகுதி. கொல்லென்னும் ஐயஇடைச்சொல் பிரித்துக் கூட்டிப்பொருள் கொள்ளப்பட்டது.

கைக்கிளை - ஒருமருங்குபற்றிய அன்பு; அதாவது ஒருதலைக்காமம்; ஒப்பாருமிக்காருமில்லாத் தலைவன் வேட்டைமேலீட்டினாற்சென்று ஒரு தலைவியை நோக்கி மயங்கிய சிறப்புடைக் கைக்கிளையன்றி "அடியோர் பாங்கினும்" என்ற விதிப்படியமைந்த அடியவன் தலைமகனாய்த் தெருவிற் செல்பவன் சாளரத்துள் ளொருத்தியைக்கண்டு இருவரு மயங்கிய வழித்தலைவன் கூறியது. மெய்ப்பாடு - மருட்கை. பயன் - வியப்பினாலுள்ள மகிழ்தல். (அ0)

இட்டத்தி லுந்தந்த முள்ளத் திலும்மெண் ணிலுமிரும்பின்
கிட்டத்தி லும்வலி யாரு முருகுவர் கேணியிலும்
பட்டத்தி லும்பைந் தடத்திலு மோடைப் பழனத்திலுங்
குட்டத்தி லுங்கயல் பாய்குரு கூரர் குணங்களுக்கே.

உரை :— கேணியிலும் - கிணறுகளிலும், பட்டத்திலும் - பட்டக்கால்களிலும், பைந்தடத்திலும் - பசிய குளங்களிலும், ஓடை - நீரோடைகள் சூழ்ந்த, பழனத்திலும் - பள்ளமாகிய வயல்களிலும், குட்டத்திலும் - ஆழமான குட்டைகளிலும், கயல்பாய் - கயல்மீன் பாய்ந்து குதிக்கின்ற, குருகூரர் - குருகூரிலவதரித்த நம்மாழ்வாருடைய, குணங்களுக்கு - நல்லொழுக்கம் அமைந்த குணங்களைக்கண்டு, இருப்பின் கிட்டத்திலும் வலியாரும்-இரும்புகளுருக்குகின்ற உருக்குக்கிட்டாளைக் காட்டிலும் வலிய நெஞ்சுடையவரும், இட்டத்திலும் - கருத்துக்களைச் சொல்லுமிடத்திலும், தம்தம் உள்ளத்திலும் - தங்கள் தங்கள் மனத்திலும், எண்ணிலும் - நினைப்பினும், உருகுவர் - கரைவார்கள்; (எ - று.)

குருகூராழ்வாருடைய நல்லொழுக்கமமைந்த குணங்களைக்கண்டு கடின நெஞ்சுடையவரும் மனமுருகுவாரென்பதாம். பட்டம் - தண்ணீர்ப்பெருக்குக்காலத்தில்மட்டும் ஏறிப்பாய்கிற மேட்டுநிலம். நீர்வளத்தால் மேடும் பள்ளமுமான வயல்களிலும் கிணறு குள முதலியவற்றிலும் ஏற்றத்தாழ்வின்றி மீன்கள் பாய்தல்போல ஆழ்வாரின் குணவிசேஷத்தால் அறிந்தோர் அறியாதோர்கொடியநெஞ்சர் முதலிய யாவரும் உருகுவாரென்று தொகைமொழியாற் கொள்க. இரும்பு - வன்றொடராயிற்று. ஓடையாகிய பழனம் என்றாக்கி இருபெயரொட்டென்றலுமாம். இதற்கு நீண்ட வயலென்று பொருள்கொள்க. குட்டம் - பண்பாகுபெயர்.

குணம்வேண்டுமோநற்குலம்வேண்டுமேயக்குலத்தொழுக்காம்
பிணம்வேண்டுமேசெல்வப்பேயவேண்டுமேபெருந்தண்வகுள
மணம்வேண்டுந்தண்டெரியற்பெருமான்செய்யுண்மாமணியின்
கணம்வேண்டுமென்றறிவாரைக்கண்டாற்சென்றுகைதொழுமே.

உரை :—பெரும் - பெரிய, தண் - குளிர்ந்த, வகுளம் மணம் - மகிழமலரின் மணமானது, வேண்டும் - விரும்பியுறைகின்ற, தண்தெரியல் - குளிர்ந்தமாலையுடைய, பெருமான் - நம்மாழ்வாரருளிச்செய்த, செய்யுள் - பாடல்களாகிய, மாமணியின் - சிறந்த இரத்தினங்களுடைய, கணம் - கூட்டத்தை, வேண்டும் என்று - கற்கவேண்டுமென்று, அறிவாரை - அன்போடு படித்தறிந்தவரை, கண்டால் - தரிசித்தால், குணம் வேண்டுமே - அவர்களுக்கு நற்குணங்கள் வேண்டுமோ? (வேண்டாம்) நல் குலம்வேண்டுமே - நல்லகுலமாயிருக்கவேண்டுமோ? (வேண்டாம்) அ குலத்து ஒழுக்காம் - அந்தக்குலத்துக்குரிய நடையாகிய, - பிணம் பயனற்ற பிணம்போல்வதும், வேண்டுமே - வேண்டுமோ? (வேண்டாம்) செல்வம் பேய் - பொருளாகிய பிசாசும், வேண்டுமே - வேண்டுமோ? வேண்டாம் ஆதலால், சென்று - உடனே அருகிற்சென்று, கைதொழும் - கைகூப்பி வணங்குங்கள்; (எ - று.)

நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிப் பிரபந்தத்தை அன்போடு படிப்பவரைக்கண்டால் அவருடைய குணம் குலம் நடை பொருள் யாவும் பார்க்கவேண்டியதில்லை உடனே சென்று வணங்குங்கள்; என்பதாம். குணம் - அன்பு, பொருள், அடக்கம் முதலியன. குலம் - அந்தணர் முதலிய உயர்குலம். நடை - அவர்கள் தங்கள் மதத்துக்கேற்பக்கட்டியதனால் பிணமென்றிகழ்ந்தார். பேய் - தான் பிடித்தவரைத் தன் வசமாக்குதல் போலப் பொருளும் விரும்பினரை வசமாக்குதலால் பேயென்றார். மணிக்கு மேற்சிறந்தபொருள் தோற்றத்தில்லையாதலால் மணியை உவமித்தார். வேண்டுமே என்பவனவற்றிலுள்ள ஏகாரங்கள் எதிர்மறைப்பொருளன. செல்வப்பேய் - இருபெயரொட்டு. பெருந்தண்வகுளம் - பண்புத்தொகை; பன்மொழித்தொடர்.

தொழும்பாக் கியவினைத் தொல்லைப் பிறவிச் சுழியிடைநின்
றெழும்பாக் கியமுடைத் தாக்கவுந் தென்னிய லோடிசைந்து
கெழும்பாக் கெழுமிய கீர்த்தியை நாளுங் கிளத்தியென்னாத்
தழும்பாக்க வும்வல்ல கோச்சட கோபன் றயாபரனே.

உரை ;—தொழும்பு ஆக்கிய - என்னை அடிமையாகக்கொண்ட, வினை - தீவினைமிக்க, தொல்லை - பண்டைக்காலந்தொட்டுள்ள, பிறவி - பிறப்பாகிய, (கடலிலுள்ள), சுழியிடை நின்று - தண்ணீரின் சுழலிலிருந்து, எழும் - வெளியில் வரும்படியாகிய, பாக்கியம் - செல்வம், உடைத்து ஆக்கவும் - எனக்கு உடையதாக்கவும், தென் - அழகிய, இயலோடு இசைந்து - இலக்கணத்துடனே பொருந்தி, கெழும் - விளங்கிய, பா - பிரபந்தப்பாடல்களில், கெழுமிய - பொருந்திய, கீர்த்தியை - கடவுளின் குணவிசேடங்களை, நாளும் கிளத்தி - தினந்தோறும் சொல்லிச் சொல்லி, என் நா - எனது நாக்கில், தழும்பு ஆக்கவும் - தழும்பு ஏறச்செய்யவும், வல்ல கோ - வலியரான இறைவர், தயாபரன் - கருணையுடையவரான, சடகோபன் - நம்மாழ்வாரேயாம்; (எ - று.)

பிறவிப்பெருங்கடற் சுழியிலமுங்கிப் போகாமலெழுந்து மீண்டு வருந் திறமையுடையதாக்கவும் திவ்வியப் பிரபந்தங்களிலுள்ள கடவுளின் மகிமையைத் தினந்தோறுங் கூறி எனது நாக்கில் தழும்பேறச் செய்யவுந் தகுதியுள்ளவர் நம்மாழ்வாரே யென்பதாம். தீவினை தான் செல்லும் வழியே என்னை யிழுத்தலால் தோழும்பாக்கிய வினையென்றார். மாறாமல் தொடர்ந்துவருதலால் தொல்லைப்பிறவியென்றார். இது பற்றியே "தொல்லைநம் பிறவி யெண்ணிற் றொடுகடல் மணலு மாற்றா" என்றார் திருத்தக்கதேவரும். அதில் நின்று மீண்டுவாராமையாதலால் சுழியென்றார். ஏனைமொழிகளுக்குச் சிறப்புடை யிலக்கணம் அமையாமை நோக்கி அரிய பெரிய தெய்வத்தமிழுக் குரிய இலக்கணத் துக்குத் தென்னியலென்றார். தொல்லை - பண்புப்பெயர். உடைத்து - குறிப்புமுற்றெச்சம். வல்ல - குறிப்புப்பெயரெச்சம். கோ என்னும் எழுவாய் ஆம் என்னும் ஆக்கத்தைக்கொண்டு முடிந்தது. (௮௩)

பரந்தலைக் கும்பொருநைக்குருகூரென்னிற் கண்பனிக்குங்
கரந்தலைக் கொள்ளுமுள் ளும்முருகுங் கவியா லுலகைப்
புரந்தலைக் கும்வினை தீர்த்தான் புனைமகிழ்ப் பூவுமன்றி
மரந்தலைக் கொள்ளவும் போதுநங் காயுன் மகள்கருத்தே.

பொருள்—அகப்புறப்பொருள்.
திணை—பெருந்திணை.
கிளவி—அறத்தோடு நிற்றல்.
துறை—செவிலி நற்றாய்க் கறத்தோடு நிற்றல்.

உரை:—நங்காய் - அன்னையே! பரந்து - பரவி, அலைக்கும் - அலைமோதுகின்ற, பொருநை - தாமிரபர்ணி நதி சூழ்ந்த, குருகூர் என்னில் - திருக்குருகூரென்று யாரேனுங் கூறினால், உன் மகள் - உன் புதல்வி, கண்பனி மல்கும் - கண்களில் நீர் பெருக்குவாள்; கரம் - கைகளை, தலைகொள்ளும் - தலையிற் குவித்துக்கொள்ளுவாள்; கருத்து உள்ளும் - மனத்தில் தியானிக்கின்றாள்; (கருத்து) உருகும் - மனம் உருகுகின்றாள்; கவியால் - பாடல்களால், உலகை - இந்தத் தமிழ்நாட்டினை, புரந்து - பாதுகாத்து, அலைக்கும் வினை - உயிர்களை வருத்துகின்ற தீவினைகளை, தீர்த்தான் - நீக்கின நம்மாழ்வார், புனை - அணிந்துகொள்ளுகின்ற, மகிழ் பூவும் அன்றி - மகிழ மலரைச்சூடிக்கொள்ள விரும்புவது மல்லாமல், மரம் தலைக்கொள்ளவும் - அந்த மகிழமரத்தை அணைத்து மேற்கொள்ளவும், போதும் - செல்லுகின்றனள்; (எ - று.) இப்படியன்றி "உன்மகள் கருத்து இது" என்று வருவித்துமுடிப்பினுமையும்.

நங்காய் உன் மகள் குருகூரென்றவுடன் கண்ணீர் வடிக்கிறாள்; கைகூப்புவாள்; கருத்தில் நினைக்கிறாள்; மனங்கரைகிறாள்; அவ்வாழ்வார் சூடுகிற பூவைச் சூடிக்கொள்வதுமன்றி அந்த மகிழமரத்தை அணைத்துக்கொள்ளவும் செல்கிறாள்; என்பதாம். நங்கை - எல்லாக் குணங்களும் நிறைந்தவள். இதன் ஆண்பால் - நம்பி. கிளவித்தலைவன் பெயர்கூறலின் அகப்புறமாயிற்று. புறமெனவே அதன் பகுதியாகிய பெருந்திணையாம். தலைவனைப் பிரிந்த தலைவியின் சரீர வேறுபாட்டையறிந்து இது தெய்வத்தினாலாயிற்றென்று அத்தெய்வத்துக்குச் சிறப்புச் செய்யப்புகுந்தபொழுது அதனை அறிந்த தலைவி அஞ்சித் தோழியிடத்துத் தன் காமநிலையைக்கூறத் தோழியாலறிந்த செவிலியானவள் பெற்ற தாய்க்கு நிகழ்ந்தமை வெளியிடுதல் கிளவியின் துறையாகும்.

கண்பனி மல்குமெனவே அன்பும் தலைக்கொள்ளுமெனவே ஆர்வமும் உள்ளுமெனவே கூடற்குறிப்பும் உருகுமெனவே இன்பத்தின் மகிழ்ச்சியும் மாந்தலைக் கொள்ளப்போதுமெனவே பிறரைக்கூற எதம்பயத்தலையும் குறிப்பிட்டமையறிக. (அச)

கருத்திற் கருணைவைத் தேகு மிதுவுங் கலைமறையோர்
திருத்திற் றொருமணந் தீருந் தினமய னீரினிறை
முருத்திற் செருந்தய லேயிவ ளோடு முயற்கரும்பின்
குருத்திற் பிரசம்வைக் குங்குரு கூர்சென்று கூடுமினே.

போருள்—அகப்போருள்.
திணை—உரிப்போருளாற்பாலை.
கிளவி—உடன்போக்கு.
துறை—பாங்கி தலைவனை உடன்படுத்தல்.

உரை :—(ஐயனே !) கருத்தில் - உமது மனத்திலே, கருணைவைத்து - அன்பு பாராட்டி, இவளொடு - இத்தலைவியைக் கைக்கொண்டு, எகும் - செல்லக்கடவீர் ; இதுவும் - இப்படி நீர்கைக்கொள்ளுதலும், கலைமறையோர் - கல்வியிற்சிறந்த அந்தணர்கள், திருத்திற்று - ஒழுங்குபட அமைத்ததாகிய, ஒரு மணம் - எண்வகை மணத்துளொன்றாகிய காந்தருவமேயாம் ; தினம் மயல்தீரும் - இதனால் நாள்தோறும் உங்களுக்குண்டாகிய காமமயக்கமும் நீங்கும் ; நீரில் - தண்ணீரருகில், நிறை - முளைத்துநிறைந்துள்ள, முருத்தின் - வெண்மையான அடிக்குருத்துக்களையுடைய, செருந்து - நெட்டிக்கோரைகளுக்கு, அயலே - பக்கத்திலுள்ள, கரும்பின் - கரும்புகளையுடைய, குருத்தில் - குருத்துக்களில், முயல் - முயற்கூடாகிய சந்திரன்போல, பிரசம் வைக்கும் - தேனடைகள் வைக்கின்ற, குருகூர் - ஆழ்வாரவதரித்த திருக்குருகூரை சென்று - போய், கூடுமின் - அடையுங்கள் ; (எ - று.)

ஐயனே ! இவளைக் கைக்கொண்டு செல்வீராக ; இப்படிச்செல்வதும் கந்தர்வமணத்தின்பாற்படும் ; உங்களுக்குண்டாகிய காமமயக்கமுந்தீரும் ; ஆதலால் நீங்கள் திருக்குருகூரைப்போயடையுங்கள் என்பதாம். நீரில் முளைத்த நெட்டிக்கோரையோடு தோன்றி விளங்கிய கரும்பில் தேனடைவைப்பதுபோல இந்தக்குடும்பத்தில் இருக்கிற தன்னிற்சிறந்து விளங்கிய தலைவியிடத்து அன்புவைப்பீர் என்று உள்ளுறையுவமங்கொள்க. இதனுள் நீர் தலைவியின்குடியாகவும் தோழி நெட்டிக்கோரையாகவும் தலைவி கரும்பாகவும் தலைவனது அன்பு தேனடையாகவும் உவமித்தமை காண்க. இவை முழுவதும் முதலொடு முதல்வந்த மெய்யுவமம். எண்வகை மணமாவன :—பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. தேனடையைச் சந்திரனுக் குவமித்தல் பண்டை வழக்கு. “அவனுந்தான், எனலிதணத் தகிற்புகை யுண்டியங்கும், வானூர் மதியம் வரைசேரினவ்வரைத்,தேனின்றுறலென வேணி யிழைத்திருக்குங்கானக நாடன் மகன்” என்பதனாலுமறிக. தலைவன் தலைவிசுரத்தில் செல்லுதலால் திணை - பாலையாயிற்று. தலைவனுடன் தலைவி செல்லுதலால் உடன்போக்காயிற்று. இத்துறை - “போக்கும் வரைவும் மனைவிகட்டோன்றும்” (தொல் - பொரு - உ௫) என்ற வழுவமைதிக்கு மாறாகத் தோழி கூற்றாற்கூறியது : “ஒன்றித்தோன்றுந் தோழி மேன” (தொல் - பொரு - [illegible]) என்பதனாற் கொள்க.

கூட்டங்க டோறுங் குருகைப் பிரான்குணங் கூறுமன்ப
ரீட்டங்க டோறு மிருக்கப்பெற் றேமிருந் தெம்முடைய
நாட்டங்க டோறும் புனல்வந் து நாலப்பெற் றேமினிமேல்
வீட்டெங்க டோழர்க்கென் றேபெரும் போகம் விளைகின்றதே.

உரை :—கூட்டங்கள் தோறும் - தாம்தாம் கூடுமிடங்களிலெல்லாம், குருகை பிரான் - திருக்குருகூரிலவதரித்தநம்மாழ்வாருடைய, குணம் - சிறந்தகுணங்களை, கூறும் - சொல்லிப்புகழ்கின்ற, அன்பர் ஈட்டங்கள் தோறும் - அடியார்களின்கூட்டங்களிலெல்லாம், இருக்கப் பெற்றேம் - கூடியிருக்கலாயினேம் ; இருந்து - அப்படிக்கூடியிருந்து, எம்முடைய ———, நாட்டங்கள் தோறும் - இரண்டுகண்களிலும், புனல் வந்து - கண்ணீர்பெருகி, நாலப் பெற்றேம் - வடியப்பெற்றேம் ; (ஆதலால்,) இனிமேல் ———, வீட்டு - பரமபதத்தில், எங்கள் தோழர்க்கு என்றே - (உள்ளவர்கள்) தங்கள்நண்பர்களுக்குவேண்டுமென்று அமைத்தலால், பெரும் போகம் - பேரின்பநலமானது, விளைகின்றது - (யாம்போகுமுன்) உண்டாயிருக்கிறது ; (எ - று.)

கூடும்போதெல்லாம் குருகூர் நம்மாழ்வார் குணங்களைப்புகழுகிற அடியார்கூட்டத்திற் சேர்ந்திருக்கப்பெற்றோம் ; இருந்து அன்பினால் கண்ணீர்பெருகப்பெற்றேம் ; இனிமேல் பரமபதத்திற்கு யாம்வருகிறோமென்றறிந்து அங்குள்ளார் அமைத்தலால் அங்கே எமக்குப் பெரும் போகம் விளைந்துகொண்டிருக்கிறது என்பதாம். குணம் - பிறரைவாழ்விக்கக்கருதியகுணம். கண்ணீர்வடிதல் - அன்புமிகுதிபற்றி. ஆழ்வாரைத் துதித்தலால் பிறவிப்பிணி நீங்குதலும் பரமபதத்திலுள்ளார் தங்கள் நண்பரென்று அமைத்தலும் பேரின்பம் பெறுதலும் இதனாற் கூறப்பட்டது. அளவையிலின்பந்தருதலால் பெரும்போகமென்றார். தோறும் - தொழிற்பயில்வுப்பொருளில்வந்த இடைச்சொல். (௮௬)

விளையா தொழிய மருந்துமுண் டேயென் வினைதினையின்
கிளையாக் கிளர விளைகின்ற தாற்கிளை யாம்பிறவித்
தளையா சழியத் தடுத்துத்தென் பாலை வழிதடுத்துக்
களையா சறத்தடுத் தாண்டான் குருகையிற் கார்ப்புனமே.

பொருள்—அகப்பொருள்.
திணை—குறிஞ்சி.
கிளவி—வரைவுமுடுக்கம்.
துறை—தினையொடுவெறுத்து வரைவுகடாதல்.

உரை :—கிளை - தோன்றுதலையுடைய, பிறவி தளை - பிறப்பாகிய பந்தத்தை, ஆசு அழிய - விரைவிற்கெடும்படியாக, தடுத்து - போக்கி, தென் - தெற்கேசெல்லுகிற, பாலைவழி - பாலைநிலவழியை, தடுத்து - நீக்கிவிட்டு, களை - தீவினைகளை, ஆசு அற - அடியோடொழிய, தடுத்து ஆண்டான் - நீக்கிஎன்னை ஆண்டருளிய நம்மாழ்வாரது, குருகையில் - குருகூரில், கார் புனமே - பெரியதினைக்கொல்லையே ! என்வினை - என்னுடையதீவினையே, தினையின் - தினைப்பயிர்களாக, கிளையா - முளைத்து, கிளர - நன்றாக, விளைகின்றது - முற்றிப்போகின்றது ; விளையாதொழிய - இப்படிமுற்றாமல் கதிர்பறிந்தபடியேயிருக்க, மருந்தும் உண்டே - ஏதேனும் மருந்துமிருக்கிறதோ ? [சொல்லுவாயாக.] (எ - று.)

ஆண்டானது குருகூரிலுள்ள தினைக்கொல்லையே! எனது தீவினை தானுங்களிடத்தில் தினைப்பயிராகமுளைத்துக் கதிர்முற்றிப்போகிறது; அப்படி முற்றுதிருக்கமருந்துமுண்டோ? உண்டாயிற் சொல்லிக்காணு வென்பதாம். திவ்வியப்பிரபந்தத்தைப்படித்தால் யமனுக்குத்தப்பலா மென்பார் தென்பாலைவழிதடுத்தென்றார். பாலைவழி - நீருநிழலுமற்ற கொடியவழி. தினைமுற்றினமையால் தலைவியின்தமர் அத்தினையைக் கொய்துகொண்டு தங்களையும் வீட்டிற்கழைத்துப்போவார்; முற்று திருப்பின் தாங்கள் அங்கே புனத்தைக்காத்திருக்கலாமென்பதுபற்றி விளையாதொழிய மருந்துமுண்டோவென்றாள். இங்ஙனம் பிரியச்செய்வது தீவினையேயாதலால் அதுவே தினைவடிவமாகியும் வந்துவருத்திற் றென்றாள். கைகோள் - களவு. கேட்போர் - தலைமகன் சிறைப்புறத்தானாக தினைப்புனத்தைநோக்கிச்சொல்லுவாளாய் சொல்லியது. இடம் - முன்னிலை. காலம் - இறந்தகாலம். மெய்ப்பாடு - அழுகை. பயன் - பகற்குறிவிலக்கல். ஒழிய, ஒழி - துணிவுப்பொருள்விகுதி. உண்டே, ஏ - வினா. விளையா - உடன்பாட்டுவினையெச்சம். ஆல் - அசை. விளையாம். ஆம் - சாரியை. கருப்பொருளாகிய தினையைக்கூறுதலால் தினை குறிஞ்சியாயிற்று. களவில்புணர்ந்தொழுகினால் புறத்தார்க்குத்தெரியுமேயென்றும் அப்படித்தெரிந்ததனால் தலைவனுக்கு ஊறுநிகழுமேயென்றும் அஞ்சிப் பலவழியாலும் களவுப்புணர்ச்சிபுணராதபடிவிலக்கிக் கலியாணஞ்செய்யும்படி முயற்சிப்பதால் கிளவி வரைவுமுடுக்கமாயிற்று. வரைவு - கலியாணம். இங்ஙனம் நாளும்தனியிடத்தில் தலைவியைச்சேருதற்குத் தகுதியான இத்தினைக்கொல்லையிலுள்ளதினையும் கொய்யப்பட்டால் தலைவியை வீட்டுக்கழைத்துப்போய்விடுவார்களே இனிக் களவில்வாராதபடி மணமுடித்தால் நலமாகுமேயென்று குறிப்பிற்கூறுதலால் துறை - தினையொடு வெறுத்துவரைவுகடாதலாயிற்று. (அஎ)

புனம்பாழ் படுத்துப் புகழ்பாழ் படுத்த தல்லாற் புகுந்தென்
மனம்பாழ் படுத்தனை வாழ்தியன் றேவழு வா நரகத்
தினம்பாழ் படுத்த பிரான்சட கோபனின் றுக்கலியின்
சினம்பாழ் படுத்தநின் றான்குன்று சூழ்கின்ற செந்திணையே

பொருளும், திணையும் அவை. கிளவி—பகற்குறியிடையீடு.

துறை—நெடுந்தகை, வறுங்களநாடிமறுகல்.

உரை:—வழுவா - நீங்காத, நரகத்து இனம் - நரகத்தின்தொகுதியை, பாழ்படுத்த - அன்பர்களுக்கில்லாமலழித்த, பிரான் - தலைவரும், இன்று - துன்பத்தைச்செய்கின்ற,கலியின் சினம் - கலியின்கோபத்தை, பாழ்படுத்த - பாழாகச்செய்ய, நின்றான் - அவதரித்தவருமாகிய, சடகோபன் - நம்மாழ்வாரது, குன்று - மலையில், சூழ்கின்ற - சூழ்ந்துவிளைந்த, செந்தினையே - செவ்வியதினையே! புனம் பாழ் படுத்து - கதிர் கொய்தலால் கொல்லையைப்பாழாக்கி, புகழ்பாழ்படுத்தது அல்லால் - உனக்குண்டாகிய கீர்த்தியையும்பாழாக்கினதல்லாமல், புகுந்து - என்னிடத்துச்சார்ந்து, என் மனம் - எனது மனத்தையும், பாழ்படுத்தனை - பாழாக்கினை; வாழ்தி - நீவாழ்வாயாக; (எ - று.) அன்று, ஏ - அசைகள். வாழ்திஅன்றே - இவ்வளவுகொடுமைசெய்தநீ வாழ்வாயல்லவோ? எனினும் அமையும்.

நம்மாழ்வார்மலையிற் சூழ்ந்து விளைந்துள்ள தினையே! புனத்தைப் பாழாக்கிப் புகழைக்கெடுத்துக்கொண்டதன்றி என் மனத்தையும்பா

ழாக்கினை; இப்படிப்பட்டநீ வாழ்வாயாக; என்பதாம். முற்றுதலால் குறவர் கொய்துகொண்டுபோனது நிமித்தமாகப் புனம்பாழ்படுத்து என்றான். அப்புனத்துக்கு அணியாகவிளங்கிய தலைவியை இல்வயிற்செறித்ததற்கு ஏதுப்பட்டதனால் புனம்பாழ்படுத்துஎன்றானெனினுமாம். தானும் தலைவியுங் கூடுதற்கு இடந்தந்ததனால் பெற்றபயன் இழந்தமையாற் புகழ்பாழ்படுத்ததென்றான். மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமை நீங்குதல். பகலில் தலைவியைத்தனியிற்சேர்தற்குத்தகுதியாயிருந்த இடம் பாழாய்ப்போய்த் தலைவியைச்சேரவழியில்லாமையால் கிளவி - பகற்குறியிடையீடாயிற்று. தலைவியை வீட்டுக்கழைத்துப்போனபின் தலைவன் அவளிருந்ததினைக்கொல்லைக்குப்போய் அங்குத்தலைவியைக் காணாமையால் அவ்விடத்தைக்கண்டு வருந்துதல் துறையின் கருத்து.

தினையொன் றியகுற்ற மற்றுணர்ந் தோர்மகி ழின்றிறத்தின்
மனையொன் றியகொடி யாடுயின் றாலுந்தன் வாயடங்கா
வினையொன் றியவன் றிலுக்கிடங் காட்ட விரிதலைய
பனையன் றியுமுள தோதமி யேற்குப் பழம்பகையே.

பொருள்—அகப்புறப்பொருள்.
திணை—பெருந்திணை.
துறை—பையுறு கன்னி கையறு வெய்தக்
கண்ட தோழியுட்கொண்டு புலம்புதல்.

உரை:—தினைஒன்றிய - தினையினளவுபொருந்திய, சற்றம் - பிழையும், அற்று - இல்லாமல், உணர்ந்தோர் - ஞானநிலையுணர்ந்தருளிய ஆழ்வாரது, மகிழின்திறத்தின் - மகிழமலர்மாலைநிமித்தமாக, மனைஒன்றிய - வீட்டில்வருந்தியிருக்கிற, கொடியாள் - கொடிபோன்றஇடையையுடைய எங்கள்தலைவி, துயின்றாலும் - தான்புலம்புவதினின்றுசிறிதுநித்திரைசெய்தாலும், (தூங்கவொட்டாமல்), தன்——, வாய்அடங்கா - வாய் ஓயாமல், வினை ஒன்றிய - கத்துதல்பொருந்திய, அன்றிலுக்கு - அன்றிற்பறவைக்கு, இடம்காட்ட - இருக்குமிடங்கொடுக்க, விரிதலைய - விரிந்த தலையையுடைய, பனை அன்றியும் - பனைமரமல்லாமலும், தமியேற்கு - தனியாகியஎனக்கு, பழம்பகை - பழமையாகிய பகைமை, உளதோ - வேறொன்றுண்டோ? (எ - று.)

நம்மாழ்வார் மகிழமாலைவேண்டி நங்கள்தலைவிவருந்திச்சிறிதொருபொழுது தூங்கினாலும் தூங்கவொட்டாமல் கத்துகிற அன்றிற்பறவைக்கு இருக்குமிடங்கொடுக்க விரிந்ததலையையுடைய பனைமரமல்லாமலும் எனக்குவேறு பழம்பகையொன்று உண்டோ? இல்லையென்பதாம். எந்தத்தேவரைக்குறிப்பினுங்காமமுதலியன இல்லாதாரிலராதலின் அவரினுஞ்சிறந்தவரென்பதுதோன்றத்தினையொன்றிய குற்றமற்றென்றார். அன்றிற்பறவை பனைமரத்திலேயிருப்பதுபற்றி அதல்லாமல் வேறொருபகைதனக்கில்லையென்றாள். அன்றில் ஆண்பெண்பிரியாததொரு பறவை; அது ஒன்றனைஒன்று புணர்ச்சிநிமித்தமாகவேயழைக்கும்; அங்ஙனம் அழைக்கும்போது பிரிந்தவர்க்குக்காமமயக்கம் அதிகரிக்குமென்பதுபற்றி இங்ஙனம்கூறுதல் வழக்கம். இது கிளவித்தலைவன்பெயர் கூறுதலால் அகப்புறமும் கந்தருவத்தின்வழுவிய பெருந்திணையுமாயிற்று. தலைவிவருந்துதலைநோக்கியதோழி தனக்குப்பகையாயிற்றென்றது "தாயத்தினடையா" (தொல் - பொ 221). என்றவிதிபற்றியென்க, வாயு

டக்காவினை - கத்துதல். காட்ட என்னும்எச்சம் விரிஎன்னும் வினைப் பகுதிகொண்டது. ஓ - எதிர்மறை. (௮௯)

பகையாய் வருகின்ற மூன்றையும் வேரொடும்பறித்து
வகையாய் வருவன யாவையு மாற்றியிவ் வையமுய்யத்
தொகையா யிரங்கவி சொன்னோன் பெயர்சொல்லச் சூழ்பனியின்
புகையா மிருள்பின்னை யெந்நாட் கழியப் புகுகின்றதே.

பொருள்—அகப்பொருள்.
திணை—குறிஞ்சி.
கிளவி—பிரிவுழிக் கலங்கல்.
துறை—கண்படை பெறாது கங்குல் நோதல்.

உரை:—பகையாய் வருகின்ற - தமக்கு உட்பகையாகி வருகிற, மூன்றையும் - காமம் வெகுளி மயக்க மென்னும் முக்குற்றங்களையும், வேரொடும் - வேரோடும், பறித்து - பிடுங்கி யெறிந்து, வகையாய் - அதன் பகுதியாய், வருவன - வருகின்ற, யாவையும் - ஆகாமிய சஞ்சித பிராரப்த கருமங்களெல்லாவற்றையும், மாற்றி - போக்கி, இ - இந்த, வையம் உய்ய - உலகத்திலுயிர்கள் பிழைக்கும்படியாக, தொகை - நூறு நூறாகத் தொகுக்கப்பட்ட, ஆயிரங் கவி - ஆயிரம் பாடல்களை, சொன்னோன் - சொன்னவராகிய நம்மாழ்வாரது, பெயர் சொல்ல - திருப்பெயரைத் தியானிக்கவேண்டி, சூழ் பனியின் புகை - புகைபோலப் பனி பரந்து சூழ்ந்திருக்கிற, ஆம் இருள் - குளிர்ச்சியோடு கூடிய இருட்டானது, பின்னை - பிற்பாடு, எந்நாள் - எப்பொழுது, கழிய புகுகின்றது - நீங்கப் போகின்றது? (எ - று.)

நம்மாழ்வாரைத் தியானிக்கவேண்டிப் புகை போலப் பனி சூழ்ந்த இருட்டானது எப்பொழுது நீங்கப் போகின்றதென்பதாம். காமம் - பிறபொருளிற் செல்லுகிற பற்றுள்ளம். வெகுளி - சினம். மயக்கம் - நல்லது தீயதென்றறியா மயக்கம். இவை நீங்கவே மனம் தூய்மையாகு மென்பர். இவற்றின் வகையாவது இவை காரணமாக வருகின்ற வைகளை யென்க. ஆகாமியம் - இனி வரப்போகும் வினை. சஞ்சிதம் - இப்பொழுது செய்யும் வினை. பிராரப்தம் - பழவினை. தலைவியை - இயற்கைப் புணர்ச்சிப் பின்பிரிந்த தலை மகன் இரவு நீட்டிப்பத்துயிலப் பெறாளாகி அந்த இரவினைக் கடிந்து கூறுதல் இத்துறையாகும். இருளைக் கூறினமையால். திணை - குறிஞ்சி. கைகோள் - களவு. கூற்று - தலைவன் கூற்று. கேட்போர் - இல்லை. இடம் - தன்மை. காலம் - நிகழ்காலம். மெய்ப்பாடு - இளிவரல். பயன் - தன் ஆற்றாமை நீங்குதல். மூன்று - தொகைக் குறிப்பு. வையம் - இடவாகுபெயர். பின்னை - இடைச்சொற்றிரிபு. (௯௰)

புகுகின் றதுவிருள் போகின் றதுவண்ணம் பூவைகண்ணீ
ருகுகின்ற தென்றுயி ரோய்கின்ற தாலுகெ கேழுமுய்யத்
தொகுகின்றவாயிரஞ்சொன்னோன் குருகைச்சொல்லாவினங்கத்
தகுகின் றனரல்லர் மேன்மேலுங் காத றருமவரே.

பொருள்—அகப்பொருள்.
திணை—உரிப் பொருளால் நெய்தல்.
கிளவி—வரைவு கடாதல்.
துறை—தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி செப்புதல்.

உரை:—இருள் புகுகின்றது - இருட்டானது வந்து கம்மிக்கொள்ளுகின்றது. வண்ணம் - இவளுடைய நல்ல நிறமும், போகின்றது - மாறுபடுகின்றது, பூவை - இந்தத் தலைவியினது, கண் - கண்ணிலிருந்து, நீர் உகுகின்றது - நீரானது வடிகின்றது. என்று - என்பதாகக் கருதி, உயிர் - என்னுடைய உயிரானது, ஓய்கின்றது - சோர்வை யடைகின்றது ; உலகு ஏழும் - ஏழுலகங்களும், உய்ய - பிழைக்கும்படி, தொகுகின்ற - பத்துப் பத்துப் பாடல்களாகச் சேர்க்கப் படுகின்ற, ஆயிரம் - ஆயிரம் பாடல்களும், சொன்னோன் - அருளிச் செய்தவராகிய நம்மாழ்வாரவதரித்த, குருகை - திருக்குருகூருக்குரிய, சொல்லால் - கீர்த்தியால், விளங்கத் தகுகின்றனர் - விளங்கத் தக்கவராகிய, மேல் மேலும் - மேலும் மேலும் அதிகமாக, காதல் தரும் அவர் - ஆசையைத் தருகின்ற தலைவர், அல்லர் - தகுதி யுடையாரல்லர் ; (எ - று.)

இருள் வருகின்றது ; தலைவியின் மாமை நிறம் மாறுகின்றது ; இவள் கண்ணீர் வடிகின்றது ; இவற்றைப் பார்த்து என்னுயிர் சோர்வடைகின்றது ; இவளுக்கு இங்ஙனம் காதலைக் கொடுக்கின்றவர் நம்மாழ்வாரது திருக்குருகூருக்குரிய கீர்த்தியினால் விளங்கத்தக்கவரல்லர் என்பதாம். முந்திய நாள் வரையிலும் இரவில் துன்புற்றவளாதலின் இன்றைத்தினமும் இரவுவந்தா லென்செய்வளோ வென்றஞ்சிப் புகுகின்றது இருள் என்றாள். மாமை - மாந்தளிரின் தன்மை. சிறிது சிறிதாக உயிரின் வலிமை யொடுங்குதலால் ஓய்கின்ற தென்று நிகழ் காலத்தாற் கூறினாள். மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு கடாதல். இரங்கலால் திணை - நெய்தலாயிற்று. தலைவன் ஒருபுறமாக வரும்பொழுது அறியாதவள் போலத் தலைவியின் துன்பத்தைச் சொல்லுதலின் தலைவன் கேட்டு வரைவானாதலின் கிளவி - வரைவு கடாதலாயிற்று. துறையுமதுவேயாகும். (௬௧)

தருமமுங் காமமுந் தாவி லரும்பொரு ளுந்தணவாக்
கருமமு மாகிய காரணங் கண்டவக் காரணத்தின்
பெருமையு மாயப் பிணைக்குந் தவிர்ந்துறு பேதஞ்செய்யு
மிருமையுந் தீர்ந்தபி ரான்சட கோபன்ற னின்னருளே.

உரை:—இருமையும் தீர்ந்த பிரான் - 'யான் எனது' என்னும் செருக்கு நீங்கிய தலைவராகிய, சடகோபன்தன் - நம்மாழ்வாரது, இன் அருள் - இனிய கருணையானது, தருமமும் - அறமும், காமமும் - இன்பமும், தாவில் அரும் பொருளும் - கெடாத அரிய செல்வமும், தணவாக் கருமம் ஆகிய - நீங்காத செய்கையுடையதாகிய, காரணமும் - காரணமாகிய வீடும், கண்டு - செய்து, அவக்காரணத்தின் - பயனற்ற காரணங்களின், பெருமையும் - பெருமைகளும், மாயப் பிணக்கும் - வஞ்சனையுடைய மாறுபாடுகளும், தவிர்ந்து - நீங்கும்படியாக, உறுபேதம் செய்யும் - மிக்க வேறுபாட்டைச் செய்யும் ; (எ - று.) உம் - பிரித்துக்கூட்டப்பட்டது.

நம்மாழ்வாருடைய கருணையானது தருமார்த்தகாம மோட்ச மென்னும் நான்குந் தந்து பயனற்ற காரணங்களின் பெருமையும் பிணக்கும்நீங்கும்படியான நல்ல வேறுபாடுகளைச் செய்யுமென்பதாம். செய்யுளாதலால் காமம் பொருள் என முன்பின் மாற்றி வைத்தார். தருமமும், காமமும் பொருளாற் செய்யப்படுதலின் அரும்பொருளென்றார். அறத்தால் சேர்ப்பதே பொருளாமாதலால் வருத்தமில்லாத என்றார். பய

னற்ற தொழிலின் மூலங்களின் பெருமையும் பிணக்கும் நீங்க எனவே நல்ல நெறியில் சேர்க்கு மென்பதுதானே பெறப்பட்டது. தவிர்ந்து என்பதனைத் தவிர எனத் திரித்துக் கொள்க. "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க், குயர்ந்த வுலகம் புகும்" என்பதற்கு ஆழ்வாரே சாட்சியெனக்கொண்டு இருமையுந் தீர்ந்த பிரானென்றார். (கூஉ)

அருளிற் சிலமகி ழாயிழைக் கீவர்கொ லந்திவந்த
விருளிற் பிறிது துயருமுண் டோவிய லோடிசையின்
பொருளிற் சிறந்த வலங்கார வல்லியிற் போக்கிலுள்ளந்
தெருளிற் கரும்பொக்கு மாயிரம் பாப்பண்டு செய்தவரே.

**பொருள்—அகப்புறப்பொருள்.**
**திணை—பெருந்திணை.**
**துறை—இரவுறுதுயரங்கூறல்.**

உரை:—இயலோடு - இலக்கணத்துடன், இசையின்பொருளில் - இராகப் பொருளிலும், சிறந்த———, அலங்காரவல்லியில் - அலங்காரங்களமையப்பெற்ற கொடி போலவும், போக்கு இல் - நீங்காத, உள்ளம் - மனத்தால், தெருளில் - ஆராயுமிடத்து, கரும்பு ஒக்கும் - கரும்பை ஒத்த, ஆயிரம் பா - ஆயிரம் பாடல்களாலாகிய (திருவாய்மொழியை), பண்டு - முன்னாளில், செய்தவர் - செய்தருளிய நம்மாழ்வார், அருளில் - கருணையால், சில மகிழ் - சிலவாகிய மகிழமலர் மாலையை, ஆயிழைக்கு - ஆராய்ந்தணிந்த ஆபரணங்களையுடைய நமது தலைவிக்கு, ஈவர் கொல் - கொடுத்தருளுவரோ? அந்தி வந்த இருளில் - மாலையில் வந்த இருளைக்காட்டிலும், பிறிது துயரும் உண்டோ - துன்பஞ்செய்யவல்லது வேறொன்றுண்டோ? (எ - று.)

முன்னம் திருவாய்மொழி செய்தருளிய நம்மாழ்வார் தமது மகிழமலர் மாலையை நம் தலைவிக்குக் கொடுப்பரோ? நேற்று இராத்திரி பட்ட துன்பத்திற் கெல்லையில்லையாதலால் அவ்விருளைக்காட்டிலும் துன்பஞ் செய்வது வேறொன்றுண்டோ? என்பதாம். தொடர்ச்சி பெறப் பாடினமையால் அலங்காரம் அமைந்த கொடியென்றார். மனத்தால் ஆராயுந்தோறும் சுவை மிகுதலால் கரும்பொக்கு மென்றார். ஆயிழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. துயரைச் செய்கின்ற இருளைத் துயரென்றது குறிப்பு மொழி. (கூ௩)

அவரே யயற்கு மரற்குமல் லாவம ரர்க்குமெல்லாம்
பவரேகை யிற்றம் பணிகொள்ளு மோபடர் நீரினிட்ட
நவரேகை யுட்கொள்ளச் செய்ததல் லானம்பி மாறனைப்போ
லெவரே திருவா யிரமோக்க மாலை யிசைப்பவரே.

உரை:—(உலகத்தின் உயிர்கள் தம்பிறப்புக்களை), படர் - ஓடுகின்ற, நீரின் இட்ட - தண்ணீரிலெழுதப்பட்ட, நவம் - புதிய, ரேகை - எழுத்தை, உட்கொள்ள - மனத்திற்கொள்ள, செய்தது அல்லால் - செய்ததேயல்லாமல், பவம் - பிறப்பாகிய, ரேகையில் - வழியில், தம் பணி - தங்கள் தொழிலை, கொள்ளுமோ - கொள்வனவோ? (கொள்ளமாட்டா ஆதலால்), நம்பி - மாயோனம்சமாகிய, மாறனைப்போல் - நம்மாழ்வாரைப் போல, மோக்கமாலை - மோட்சமாலையாகிய, திருவாயிரம் - ஆயிரம்பாடலாலாகிய திருவாய்மொழியை, இசைப்பவர் - பாடவல்லவர், எவரே - யாவரிருக்கிறார்கள்? (ஒருவருமில்லை அதனால்,) அயற்கும் - பிரமதேவருக்கும், அரற்கும் - சிவபிரானுக்கும், அல்லா அமரர்க்கும் - மற்றுமுள்ள

தேவர்க்கும், எல்லாம் - முழுவதும், அவரே - அந்தமாயோனேசிறந்தவ ராவார் ; (எ - று.)

உலகத்திலுயிர்கள் இத்திருவாய்மொழியைப்படித்துத்தம்பிறவியை நீர்மேலெழுத்தாகச்செய்துவிட்டனவன்றிப்பிறப்பிடத்தில் நாடினவில்லை ; ஆதலால் மாயோன்வடிவமாகிய நம்மாழ்வாரைப்போல மோட்சமாலைபாடினவர் யாவருளர்? அதனால் அந்த மாயோனேயாவர்க்குந் தலைவரென்பதாம். நம்பி - எல்லாக்குணங்களும் நிறைந்தவன். மோட்ச மாலை - திருவாய்மொழிக்கு ஒரு பெயர். (௬௪)

தவஞ்செய் வதுந்தழல் வேள்வி முடிப்பதுந் தம்மையொறுத்
தெவன்செய்யு மெய்யன் குருகைப்பி ரானெம்மை யின்னமொரு
பவஞ்செய்கை மாற்றிய பண்டிதன் வண்டமிழ்ப் பாவுமுண்டே
யவஞ்செய்கை மாற்றச் செவியுண்டு நாவுண் டறிவுமுண்டே.

உரை :— மெய்யன் - உண்மை ஞானமறிந்தவரும், குருகைப் பிரான் - திருக்குருகூரிலவதரித்தவரும், எம்மை - எங்களை, இன்னம் - மறுபடியும், ஒரு பவம் செய்கை - ஒரு பிறப்பில்தோன்றுவதை, மாற்றிய - போக்கிய, பண்டிதன் - பாண்டித்திய முடையவருமாகிய நம்மாழ்வாரது, வண் - வளம்பொருந்திய, தமிழ்ப் பாவும் உண்டு - தமிழ்ப்பாடல்களுமுள்ளன ; அவம் செய்கை மாற்ற - பயனற்ற செய்கையை மாற்றுவதற்கு, செவி உண்டு - காதுகள் உள்ளன ; நா உண்டு - படிப்பதற்கு நாக்கு உண்டு ; அறிவும் உண்டு - அவற்றின் பயனை அறிவதற்கு அறிவுமுண்டு ; (இங்ஙனமிருக்கையில்), தம்மை ஒறுத்து - தங்களை வருத்திக் கொண்டு, தவம் செய்வதும் - தவங்களைச்செய்வதும், தழல் - அக்கினி முகமாக, வேள்வி முடிப்பதும் - யாகங்களைச்செய்வதும், எவன் செய்யும் - என்ன பிரயோசனத்தைத்தரும்? (எ - று.)

நம்மாழ்வாருடைய பிரபந்தங்களும் அவற்றை ஆசிரியர்முகமாகக் கேட்க நமக்குச் செவிகளும், படிப்பதற்கு நாவும், பயனறிவதற்குப் புத்தியும் உள்ளனவாயிருக்க அந்தப் பிரபந்தங்களை ஆராய்ந்தடையும் பயனைக்காட்டிலும் தம்மை வருத்தித் தவங்களும் யாகங்களும் செய்வதனால் என்னபயன் என்பதாம். உண்மையாகப்பயன்படும் நூலைச் செய்ததனால் மெய்யனென்றார். அவற்றைத் தியானித்ததனால் தாமடைந்தபயனை உலகத்தாருக்குக் காட்டவேண்டி பவம்செய்கை மாற்றியவென்றார். பிறிதொரு மொழிக்கு இவ்வளவு வளப்பமில்லாமையால் வண்டமிழென்றார். எவன் - குறிப்பு வினைவினை. மெய்யன் - குறிப்பு முற்றுப்பெயரெச்சம். உண்டு, என்பன - குறிப்புமுற்று. (௬௫)

உண்டாட் டியலுந் திருமா லுருவை யுயர்ந்துலகைத்
தொண்டாட் டியவந்து தோன்றிய தோன்ற றுறைக்குருகூர்
நண்டாட் டியநங்கை நாட்டங்க ளாலிந்த நாட்டையெல்லாந்
திண்டாட் டியகண்கள் போற்செய்யு மோகய றீங்குகவே.

பொருள்—அகப்பொருள்.
திணை—நெய்தல்.
கிளவி—இடந்தலைப்பாடு.
துறை—புகழ்தல்.

உரை :— உண்டாட்டு - மகிழ்ச்சிகொண்டு திருக்கூத்துக்கள் மேன்றனையும், இயலும் - செய்தருளிய, திருமால் - திருமகள் கொழுநரு

கிய மாயோனுடைய, உருவை - அவதாரங்களை, உயர்த்து - உயர்வுசெய்து, உலகை - உலகத்தை, தொண்டு ஆட்டிய - அடிமையாகச்செய்து கொள்ள, வந்து தோன்றிய - அவதரித்த, தோன்றல் - நம்மாழ்வாரது, குருகூர் துறை-குருகூரெல்லையிலுள்ள கடல்துறையிடத்து, நண்டு ஆட்டியநங்கை - நண்டுகளைப்பிடித்து விளையாடுகிற தலைவியினுடைய, நாட்டங்களால் - குறிப்புக்களால், இந்த நாட்டையெல்லாம் - இந்த உலகமுழுவதையும், திண்டாட்டிய - வருந்தச்செய்த, கண்கள்போல் - கண்களைப்போல, கயல்- கயல் மீன்கள், தீங்குசெய்யுமோ - தீமைகள் செய்யுமோ? [செய்யாவாம்.] (எ - று.)

திருமாலின் அவதார வடிவங்களை யுயர்த்திக்கூறி உலகத்தை அடிமையாகக்கொள்ள அவதரித்த நம்மாழ்வாரது குருகூர்க் கடல்துறைவாய் தலைவியின் குறிப்புக்களால் இவ்வுலகை வருத்திய கண்களைப்போலக் கயல் மீன்கள் தீங்குசெய்யுமோ? செய்யாவென்பதாம். திருக்கூத்துக்கள் மூன்றுவன :— அல்லியம், மல், குடம்; அல்லியம் - குவலயாபீடத்தின் தந்தத்தை முறித்தபொழுது ஆடியது; இயம் அல்லாதது-வாத்தியமில்லாமல் ஆடியது அல்லியமாம். மல்லாடல் - ஆங்கு மல்லரைக்கொன்று ஆடியது. குடம் - வாணாசுரனை வென்ற மகிழ்ச்சியால் அவனது சோணிதபுரத்தின் தெருவில் கையில் குடமேந்தி ஆடியது. இவற்றின் விரிவைச் சுத்தானந்தப் பிரகாச முதலியவற்றிற்காண்க; இவை புறக்கூத்தின் பகுதிகளாம். கைகோள் - களவு. கூற்று- தலைவன்கூற்று. கிளவி - முற்கூறப்பட்டது. கருப்பொருளால் திணை நெய்தலாயிற்று. இடந்தலைப்பாட்டிற்புணர்ந்த தலைமகன் புணர்ச்சிக்குப் பின்னும் தனக்கு அவளிடத்திலுண்டாகிய அன்பின் மிகுதியாற் புகழ்ந்தானென்பது துறையின் கருத்து. மெய்ப்பாடு - உவகை. பயன்-புகழ்தல். (௬௬)

*தீயைக் கிழித்தொரு திங்கட் கொழுந்தெனச் செய்ததல்லாற்*
*பேயைக் கிழித்தென வன்றிற் பனைபிள வாருளரோ*
*நோயைக் கிழிக்கும் வகுளநல் காரிந்த நுண்பிறவி*
*மாயைக் கிழியைக் கிழித்தெம்மை வாங்கிட வல்லவரே.*

பொருள்—அகப்புறப்பொருள்.
திணை—பெருந்திணை.
துறை—மாலை பொறாது வருந்திய தலைவி
காதல் கைம்மிகுக் கையறு வுரைத்தல்.

உரை :— இந்த——, நுண்பிறவி - அற்பப் பிறப்பாகிய, மாயைக் கிழியை - மாயாரூபமான படத்தை, கிழித்து——, எம்மை - எங்களை, வாங்கிட - தம்முடைய பாதங்களில் சேர்த்துக்கொள்ள, வல்லவர்- வல்லவராகிய நம்மாழ்வார், தீயை - நெருப்பை, கிழித்து - துண்டாகக் கிழித்தெடுத்து, ஒரு திங்கள் கொழுந்தென - ஒரு இளஞ் சந்திரனாக, செய்ததல்லால் - செய்ததுமன்றி, அன்றில் பனை - அன்றில் பட்சிகள் இருக்கின்ற பனை மரத்தை, பேயை கிழித்தென - பேயை இரண்டாகக் கிழித்தாற்போல், பிளவார் - இருபிளவாகச் செய்தாரில்லை; உளயாம் நோயை - அவர் நிமித்தமாக வுண்டாகிய காமநோயை, கிழிக்கும்-போக்கும்படியாகிய, வகுளம் - மகிழமாலையை, நல்கார் - கொடுத்தாரில்லை.

இந்தப் பிறவியைப்போக்கி நம்மை யடிமைகொள்ளத்தக்க நம்மாழ்வார் நெருப்பைத் திங்களாகச்செய்து விடுத்ததுமன்றி அன்றிலிருக்கும் பனையைப்பிளக்காமலும், அவர் நிமித்தமாகவுண்டாகிய காமநோயைப் போக்கத்தக்க மகிழமாலையுங் கொடுத்தாரில்லை என்பதாம். காமநோய் கொண்டார்க்கு நிலவு வெயில்போலச்சுடுதலால் திங்களைத் தீயென்றார். ஒன்றனையொன்று புணர்ச்சிக்கு அழைக்கும் ஓசை காமமுடையார்க்குத் துன்பத்தைச் செய்தலால் அவ்வன்றிலிருக்கும் பனைமரங்களை பிளந்திலர் என்றாள். பேய்க்குப் பனையை யுவமித்தல் "கருநெடும்பனங்காடு முழுமையும் காலும் கையுமுடையனபோல்வன" என்ற கலிங்கத்துப்பரணிச் செய்யுளாலறிக. மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமை நீங்குதல். (கூஎ)

வல்லம் புலிமுக வாயிற் கரும்பின் மறுபிறப்பைக்
கொல்லம் புலியோர் வகுளங் கொடார்கொடுங் கோகுதட்டிச்
சல்லம் புலியிட் டெதிரிடப் பாய்வது தாயென்றிங்கோ
ரில்லம் புலியுமுண் டம்புலி மீள வெழுகின்றதே.

பொருளும், திணையும், துறையும் அவை.

உரை:—வல் - வலிய, அம்புலி - சந்திரனைப்போன்ற, முகம் வாயில் - முகத்தின்வாயிலுள்ள, கரும்பின் - கரும்புபோன்ற திவ்வியப் பிரபந்தங்களால், மறு பிறப்பை - உயிர்களுக்குண்டாகிய பிறப்புக்களை, கொல் - கொல்லவல்ல, அம் புலி - அழகியபுலிபோன்ற நம்மாழ்வார், ஓர் வகுளம் கொடார் - ஒப்பற்ற மகிழமாலையைத் தந்தாரில்லை; இங்கு - இவ்விடத்தில், தாய் என்ற - தாயென்று சொல்லப்படுகிற, ஓர் இல்லம் புலி - ஒரு வீட்டுப்புலியானது, கொடும் கோகு தட்டி - வளைந்ததோள்களைத்தட்டிக்கொண்டு, சல்லம் புலி இட்டு - முள்ளம்பன்றி போலொத்து, எதிரிடப்பாய்வது உண்டு - நேரேவந்து என்மேற்றாவி விழுவதுமுண்டு; (இதுபோதாமல்), மீள - மறுபடியும், அம்புலி எழுகின்றது - சந்திரனானது தோன்றுகின்றது; (எ - று.) உம் - அசைநிலை.

தம்முடைய வாயிலுள்ள திவ்வியப்பிரபந்தத்தால் ஜனங்களின் மறுபிறப்பைப் போக்குபவராகிய நம்மாழ்வார் தாம் இங்கு வருவதற்கடையாளமாக மாலைகொடுத்தாரில்லை; தாய் வீட்டிலுள்ள புலிபோலப் பாய்ந்து என்னை வருத்துகின்றாள்; இதுபோதாமல் சந்திரனும் உதயமாய்விட்டது; இனிமேல் நான் உயிர்பிழைப்பது எவ்விதமென்றாள் என்பதாம். கரும்பு - உவமையாகுபெயர். இரண்டாமடியில் புலி - உவமையாகுபெயர். மூன்றாமடியில் புல்லிஎன்பது தொக்கது. தாயின் கொடுஞ்சொல் முட்போல தைத்தலால் அவளை முட்பன்றியின் தன்மையைக் கொண்டென்றாள். புலிபோலக் கறுவுகொண்டு பாய்தலால் புலியை உவமித்தார். இது உவமைக்கு உவமையின் பாற்பட்டு வழுவாகாதவாறு எப்படியென்றால் தாயாகிய புலியானது முட்பன்றியின் தன்மையடைந்து என்றதனாலே உவமைக்கு உவமையாகாமை வெளிப்படை. மெய்ப்பாடும் பயனும் அவை. இது புலியென்று ஒரு சொல்லே யடுக்கிவந்தமையால் சொற்பொருள் பின்வருநிலையணி. தாயைப் புலியென்றதற்கேற்பப் பாய்கின்றதென்றதனால் உருவகவணி. விரகங்கொண்டு கலங்கிவிழுதலால் தாய்புலிபோலப் பாய்கின்றாளெனவும், அவள் வார்த்தை முள்ளம்பன்றியின் முட்போலத்தைக்கின்றதென

வும், சந்திரனது நிலவைக்கண்டு விரகம் அதிகரித்தலால் அதுவுந்தோன்றிற்றெனவும் வருந்திக் கூறினளாயிற்று. (௬௮)

எழுதிய நாளும் வினையுந் தொகுத்தெம்மை யிப்பிறவிப்
புழுதியி னாற்றிட்டு வைப்பரி தாற்புகழ் மெய்ப்புலவோர்
தொழுதிய னாயக னோதுங் கனற்றுறை நீர்ப்பொருநை
வழுதிநன் னாடன் றிருவாய் மொழியெம் மனத்தனவே.

உரை:—புகழ் மெய்ப் புலவோர் - புகழுடைய உண்மையான கல்விமான்கள், தொழுது இயல் - வணங்கி நடக்கப்பெற்ற, நாயகன் - தலைவரும், ஓதும் - சொல்லப்பெற்ற, கனல் துறை - யாகநெறிகள் மிக்க, நீர்ப்பொருநை - நீரையுடைய தாமிரபருணி சூழ்ந்த, வழுதி நல் நாடன் - நல்ல பாண்டிநாட்டி லவதரித்த நம்மாழ்வாருடைய, திருவாய் மொழி ———, எம் மனத்தன - எம்மனத்திலேயுள்ளன; (ஆதலால்) எழுதிய நாளும் - பிரமன் எமக்கு எழுதிவைத்த ஆயுளும், வினையும்-பழவினைத் தொடர்ச்சியும், தொகுத்து - சேரவைத்து, எம்மை - எங்களை, இப் பிறவி - இந்தப்பிறப்பாகிய, புழுதியில் நாற்று இட்டு - புழுதிக்காலில் நாற்றுவிதைத்துப் பயிராக்கி, வைப்பரிது - வைக்கமுடியாததாகும்.

புலவோரால் வணங்கப்படுபவராகிய நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி எம்மனத்திடத்தன வாதலால் பிரமதேவர் எமக்கு ஒரு ஆயுளைக்கற்பித்து அதற்கேற்பப் பழவினைகளுஞ் சேர்த்துப் புழுதியில் நாற்றுப்பாவினதுபோல இந்தப்பிறவியைச் செய்யமுடியாது என்பதாம். இம்மையிலனுபவிப்பதெல்லாம் பழவினைத்தொடர்ச்சியாதலால் வினை - பழவினையென்க. நாற்றிட்டு நெற்பயன் கொள்ளுதல்போல இப்பிறப்பால் இன்னும் வினையைச் சேர்க்கச்செய்ய முடியாதென்று கொள்க. வழுதி - கொடைவள்ளலுக்கும் பெயராதலால் பரோபகாரியாகிய ஆழ்வாரை வழுதி நன்னாடனென்றார். வைப்ப - அகரந்தொக்கது. ஆல் - அசை. துறையை இடைநிலைத் தீவகமாக்கி பின்னுங் கூட்டி நீர்த்துறையென்றுங் கொள்ளலாம். (௬௯)

மனையும் பெருஞ்செல்வ மும்மக் களுமற்றை வாழ்வுந்தன்னை
நினையும் பதமென நின்றபி ரான்குரு கூர்நிமலன்
புனையுந் தமிழ்க்கவி யாலிரு ணீங்கிப் பொருள்விளங்கி
வினையுந் திரிவுற் றனகுற்ற நீங்கின வேதங்களே.

உரை:—மனையும் - மனைவியும், பெருஞ்செல்வமும் - மிக்கபொருளும், மக்களும் - புத்திராதிகளும், மற்றைவாழ்வும் - மற்றுமுள்ளவாழ்வுகளும், தம்மை நினையும் பதம் என - வேண்டாதபடி தம்மையே தியானித்திருத்தலே நல்லதென, நின்றபிரான் - நிலையிட்ட தலைவராகிய, குருகூர் நிமலன் - திருக்குருகூரில் அவதரித்தருளிய குற்றமற்ற நம்மாழ்வார், புனையும் - பாடியருளிய, தமிழ்க்கவியால் - தமிழ்ப்பாடல்களால், இருள் நீங்கி - அஞ்ஞான இருள் நீங்கிப்போய், பொருள் விளங்கி - மெய்ப்பொருளான ஞானம் தோன்றப்பெற்று, வினையும் - இருவினைகளும், திரிவு உற்றன - அழிவடைந்தன; வேதங்கள் ———, குற்றம் நீங்கின - பொருள்விளங்காக் குற்றங்களெல்லாம் நீங்கலாயின.

தாரபுத்திரதனாதி எஷணைத்திரயங்களும் மற்றுமுள்ள வாழ்வுகளும் தம்மைத் தியானிக்கும் பதமாகநின்ற நம்மாழ்வார் தமிழ்ப்பாடல்களா

ல், அஞ்ஞான நீங்கி நன்ஞானம் பெற்று வினைகளும் அழிந்தன: வேதங்களும் குற்றமற்று விளங்கினவென்பதாம். தம்மை நினைத்தவர்கள் ஐஸ்வர்யங்களாலும் பிறவாழ்விலும் அடையும் மகிழ்ச்சியிலும் மிகுத்துத் தம்மைத் தியானித்தலே மேற்கொள்ளுதலால் தம்மை நினையும் பதமென நின்றவென்றார். மற்றை வாழ்வு - சுற்றத்தார் சேர்க்கை. எண்வகைப்போகம் தசாங்கமுதலியனவுமாம். (க00)

மன்றே புகழுந் திருவழுந் தூர்வள்ளன் மாறனைமுன்
சென்றே மதுர கவிப்பெரு மாடென் றமிழ்த்தொடையி
லொன்றே பதிக முரைத்தவன் பொன்னடி யுற்றுநின்று
னென்றே பதிகம் பதிகம தாக விசைத்தனனே.

உரை:—முன் - முன்னாளில், மாறனை - நம்மாழ்வாரை, மதுர கவிப்பெருமாள் - மதுரகவியாழ்வார், சென்று - அடைந்து, தென்தமிழ் தொடையால் - அழகிய தமிழ்ப்பாடலால், பதிகம் ஒன்றே உரைத்து - கண்ணிநுண் சிறுத்தாம்பென்ற ஒரு பதிகம்பாடி, அவன் - அந்தமாயோனுடைய, பொன் அடி - சிறந்த திருவடிகளை, உற்று நின்றான் என்றே - அடைந்து நிலைபெற்றுவாழ்கின்றனனென்பதாக எண்ணி, மன்று புகழும் - உலகமெலாம் புகழ்கின்ற, திருவழுந்தூர்வள்ளல் - திருவழுந்தூரில் உலகுய்யவந்த கம்பநாடர், பதிகம் - ஒரு பதிகம்போல, பதிகம் அது ஆக - பத்துப்பதிகமாக, இசைத்தனன் - பாடியருளினார்; (எ - று.)

முன்னாளில் நம்மாழ்வாரை மதுரகவிப்பெருமாள் அடைந்து ஒரு பதிகம்பாடிப் பரமபதமுற்றாரென்று இந்நாளில் கம்பநாடர் அவ்வொரு பதிகம்போலப் பத்துப்பதிகம் பாடியருளினாரென்பதாம். மன்று - சபையுமாம். "கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர், கும்பமுனி சாபங் குலைந்தவூர் - செம்பதுமத், தாதகத்து நான்முகனுந் தந்தையுங்கா ணான் மறையை, யோதுவித்து வாழுமழுந் தூர்." என்றதனால் கம்பர் திருவழுந்தூரிற் பிறந்தமையறிக. தென்றமிழ் நாடெங் நாளுமுய்ய இராமாயணம் பாடிக்கொடுத்த பெருங்கொடையாளியாதலால் வள்ளலென்றார். மதுரகவியார் - நம்மாழ்வாரைத் துதித்து முத்திபெற்றவர். பதிகம் - பத்துப்பாடல்கள் சேர்ந்துள்ளதென்ற ஒரு தொகைக்குறிப்புச்சொல். மன்றே, சென்றே ஏ - அசைநிலைகள். ஒன்றே, ஏ - எண். என்றே ஏ - தேற்றம். பதிகமது, அது - பகுதிப்பொருள் விகுதி. (க0க)

சடகோபரந்தாதி
மூலமும் உரையும்,
முற்றுப்பெற்றன.

# கம்பர் வரலாறும்
# இந்நூல்செய்தகாரணமும்.

சோழநாட்டில் மூவலூர் ஆதித்தன்புதல்வரும் திருவழுந்தூரிற் பிறந்து உவச்சனெடுத்துவளர்க்க வளர்ந்தவருமாகிய இக்கம்பர் கதிராமங்கலத்தின் கீழ்பாதியாகிய வெண்ணெயூர்ச் சடையப்பிள்ளையிடத்து நட்புடையவராகி அவரால் ஆதரிக்கப்பெற்று இதன் வடபாலுள்ள 'தூராணி' என்னும்ஊரைத் தமக்கு முற்றூட்டாக (முழுதனுபவமாக)ப்பெற்று அங்கு வசித்துவருநாளில் இவரது கவிபாடுந்திறமையறிந்த அரசர் முதலாயினோர் வடமொழியிராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும்படி கேட்க அப்படியே மொழிபெயர்த்துப் பாலகாண்டமுதல் உயுத்தகாண்டம்வரையிலுள்ள ஆறுகாண்டங்களையும் தமிழில் செய்யுள்நடையாகப்பாடி சோழன்சபையிலரங்கேற்றத்தொடங்குகையில் பலரும் ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதன் சன்னிதியில் அரங்கேற்றுதல் தகுதியாகுமென அப்படியே திருவரங்கஞ்சென்று அங்குள்ள கல்வியறிவுடையபலருக்குந் தெரிவித்து அரங்கேற்ற எத்தனித்திருக்கும்பொழுது ஒருநாள் இவரதுகனவில் அரங்கநாதன்தோன்றி "நம்சடகோபனைப்பாடினையோ?" என்றுகூறி மறைந்தருளினார். உடனே அஞ்சி நம்மாழ்வார் மீது இந்த அந்தாதியைப்பாடி அங்கு கூடிய அவைக்களத்தில் இதனை முதலில் அரங்கேற்றிப்பின்பு இராமாயணத்தையரங்கேற்றினரென்பதாம்.

இவர் காளிதேவியாருக்கு அடிமைசெய்பவராதலின் இராமாயணம் பாடும்பொழுது காளிதேவியாரைப் பந்தம்பிடிக்கச்சொல்லிய வெண்பா :—

ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர் காகுத்தன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவில் மாணாக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி.

இக்கம்பரது இயற்பெயரின்னதென்று விளங்கவில்லை ; உவச்சரில் மேளம்கொட்டுகிற பகுதியாருக்குக் கம்பரென்றபட்டப்பெயருள்ளதென்று கல்வெட்டுக்களால் தெரிகிறதனால் இவரும் அப்பகுதியாரென்று ஊகிக்கப்படுகிறார். இவரிருந்தநாட்டுக்கு வெண்ணெயூர்நாடென்ற பெயருளதாயிருந்தது. இவரின் பெருமையையறிந்த அரசாங்கத்தார் அந்நாட்டினை இவர்பெயரால் மாற்றிவிட்டதனால் கம்பநாடென்று பெயராயிற்று. இங்ஙனமே முதலில் நித்தவிநோத வளநாடென்ற ஒன்றனைப் பின்பு அருண்மொழித்தேவர் வளநாடென்று பெயரிட்டமையும் அறிக. இன்னும் இவர்சரித்திரம் ஆராய்ச்சியிலிருப்பதால் பின்பு வெளியிடப்படும்.

இவர்காலம் :—இற்றைக்கு ஆயிரம்வருஷத்தின் முற்பட்டதென்பதாம்.

இவருடனிருந்த புலவர்கள் :—ஒட்டக்கூத்தர், நேமிநாதர், பேராசிரியர், ஔவையார், புகழேந்தி முதல[illegible]னோர்.

இவர்செய்த நூல்கள் :—இராமாயணம், [illegible]கோபரந்தாதி, ஏரெழுபது.

---

# சடகோபரந்தாதியின்
# பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| * க | ௪௬ | திரு. | திரு |
| * ,, | ௪௨ | மகக்கள்க்கதணைவனுறைகிய மாயோனுக்கு | மகள் கணைவனுறைகிய மாயோனுக்கு, தக்க - |
| எ | ௩௫ | எம். | எம் |
| கச | ௪௪ | வாராகிய | வாருமாகிய |
| உ௫ | ௨௰ | நாகமே | நாகமே |
| ௫௨ | கக | ள் உயிர் | ள் உயிர் |
| * ௫௫ | ௨ | தவிலே | தலைவி |
| ௪௬ | ௨௬ | திகாமணி | சிகாமணி |
| ௪௫ | ௫௰ | நம்மாழ்வர | நம்மாழ்வா |
| ௪௯ | க௨ | இருவினைப்பற் | இருவினைப் |
| ௬க | ௪ | மும் | ம |
| * ௬௬ | ௬ | தோழும் | தொழும் |

* இக்குறியிடப்பட்டவை சில பிரதிகளில்மட்டும் காணப்படும்.

குறிப்பு:—திருவேங்கடத்தந்தாதியிற் கூறியபடி இதற்கு முகவுரையும் துறைப்பொருள் விளக்கமும் எழுதாமைக்குக்காரணம் அவ்வத்துறைப்பொருளை அவ்வவற்றின் கீழ் எழுதிவிட்டபடியால் முதலிற்குறிக்கப்படவில்லையென்பதையறிக.